5526

...TED BY:
PL. R.
...VANATHAN ...
GANESH...

கடத்தன் தமிழ்

5526

கா. கோவிந்தன்

தேனருவி சென்னை-17.

... BY:
... PL. M.
...NATHAN CHETTIAR
PAGANERI.

கூத்தன் தமிழ்

கவியரசர் ஒட்டக்கூத்தர்

[ஈட்டி எழுபது விளக்கம்]

விளக்கவுரையாசிரியர் :

கா. கோவிந்தன் எம்.ஏ.

தேனருவிப் பதிப்பகம்

தியாகராயநகரம் :: சென்னை-17.

முதற்பதிப்பு :: செப்டம்பர், 1957.

உரிமை பதிவுபெற்றது.

விலை ரூபா 1.50

தாரா அச்சகம், நாகப்பட்டினம்.

எங்கள் எண்ணம்

கூத்தன் தமிழ் என்பது ஈட்டி எழுபது என்ற இனிய நூலின் சுவையான அமைப்பு. தமிழகத்திற் சிறந்த வீரமும் பண்பும் உடைய இனத்தவருள் ஒருவரான செங்குந்தரின் சிறப்பினைக் கூறுவது.

இதனை வெளியிட யாம் விரும்பியபோது நன்முறையில் விளக்கம் எழுதித்தர இசைந்து பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றியும் தந்தனர் புலவர் கா. கோவிந்தனார். பாடற் கருத்தினை மிகவும் எளிதாக எடுத்து விளக்கியிருப்பது அனைவருக்கும் உதவியாக விளங்கும்.

'தமிழர் வீரம்' பற்றிப் பெருமையுடன் பேசும் இந் நாளையத் தமிழகம், இந்நூலினை விரும்பி வரவேற்கும் என்பது எங்கள் எண்ணம்.

பதிப்பகத்தார்

ஒட்டக்கூத்தர்

'பாடும் புலவர்ப் பணிகொண்ட கூத்தன் பதாம் [புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன் என் றேயெனைச் [சொல்லுவரே'

இவ்வாறு, தம் ஆசிரியர் பெருமானை ஒட்டக் கூத்தரைக் குலோத்துங்க சோழமன்னன் புகழ்ந்துரைத்த தாக வரும் தனிச் செய்யுள் அவர்தம் பெரும் புகழை விளக்குவதாகும். ஆண்டாலும் அறிவாலும் மூத்தவராக வும் தன் அருந்திறனுசானுகவும் விளங்கிய கூத்தரைச் சோழ மன்னன் தன் குலத்து முதியோன் எனவே கொண்டு போற்றினுன். தமிழறிந்தார் பெற்ற பெருவாழ்விற்கு இக்கூத்தரின் பெருநிலை சிறந்த எடுத்துக்காட்டு.

இவருடைய பெயர் அம்பலக்கூத்தர் என்றிருந்ததெனவும் அதுவே பின்னர் 'கூத்தர்' என வழங்கலாயிற்று எனவும் உரைப்பர். இவர் பிறந்தது மணலூர் எனவும், இவரது தந்தையார் செங்குந்தத் தலைவருள் ஒருவரான சிவசங்க பூபதி எனவும் வரலாறுகள் கூறும். இவரது மனைவியார் பெயர் ஞானப் பூங்கோதை யம்மையார் எனவும், இவருக்கு ஆனந்தக் கூத்தன் என்ரெரு மகனிருந்தனன் எனவும் தமிழறிந்தார் பலரும் கூறுவர்.

இவரது மணலூர் நாட்டுச் சிற்றரசு இவர் தந்தைக்குப் பின் இவர்க்கும் உரித்தாயிற்று. அதுகாலை இவரது பெரும் புலமைத் திறனைக் கேள்வியுற்ற இராஜேந்திர சோழ மன்னவன் இவரைத் தன் அரசவைப் புலவராயிருந்து அறங் கூறி உதவ வேண்டத் தம் மகனுக்கு நாட்டுரிமையைத் தந்து உறையூர் சேர்ந்தனர் கூத்தர். அங்கே அவர், புலவ ராக மட்டுமன்றி அமைச்சராகவும் விளங்கினர்.

இதன்பின் இராஜேந்திர சோழனின் மகனுகிய குலோத் துங்கனுக்கு ஆசிரியராகப் பணியாற்றிவரும் பொறுப்பும் கூத்தர்க்கே உரியதாயிற்று. கூத்தர் சிறந்த புலவராக விளங்கியவர் மட்டுமன்று. புன்கவி பாடும் போலிப் புலவர் பலர் செய்த தமிழ்க் கொலையால் உளம் நொந்தவரும் ஆவர். புன்கவி சொல்வாரை அச்சுறுத்தும் வகையில் மிகக் கடுமை யாகக்கூடக் கூத்தர் நடந்தனர் என்றுந் தமிழ் நூல்கள் கூறக் காணலாம். இஃது அவரது அளவிறந்த தமிழ்ப் பற்றைக் காட்டுவதாகவே கொள்ளப்படல் வேண்டும்.

இராஜேந்திரனுக்குப் பின்னர் குலோத்துங்கன் அரி யணை யேறியதும் கூத்தரின் பொறுப்பு மிகவும் அதிக மாயிற்று. தம் மாணவனும் அரசனுமான குலோத்துங் கனைத் தம் மகனெனவே கருதிப் பாராட்டும் நிலையுடைய வரானர் கூத்தர். குலோத்துங்கனும் அவரை அவ்வாறே கருதி அவர் அறவுரைப்படியே நடந்தும் வந்தனன்.

பாண்டியனின் மகளைக் குலோத்துங்கனுக்கு முன் னின்று பேசி மணமுடித்த பெருமை கூத்தரையே சாரும். அப்போது பாண்டியனவையிலிருந்த புகழேந்தியார் அரச குமாரியுடன் குலோத்துங்கனவைக்கு வந்தனர் எனவும், அவர்க்கும் கூத்தர்க்கும் பகையும் போட்டியும் நிலவின வெனவும் வழங்குங் கதைகள் பல. அவை எல்லாம் எவரோ

ஒருவரின் விபரீத கற்பனையின் விளைவே என நாம் கொள்ளல் தகும். பெரும்புலவர் மணிகளான இருவரையும் இவ்வாறு கற்பனையால் மோதவிட்டு இன்பங்கண்ட மதியுடையாரை என் சொல்வதோ அறியோம். ஆனால், அந்த நச்சுவித்து வளர்ந்து இன்று நன்ருக வேரூன்றி விட்டதை நினைக்கும் போதுதான் நம் உள்ளம் வேதனைப் படுகிறது.

இனிக் கம்பர் காலத்தவர்க்கு முந்தியவர் கூத்தர் எனவும், கம்பர் காலத்தவரே இவர் எனவும், கம்பர்க்கும் இவர்க்கும் தீராப்பகை எனவும் வழங்குங் கதைகள் பலவாகும்.

கம்பர் வேளாளரைப் போற்றி ஏரெழுபது என்னும் நூலையும், வன்னியரைப் பாராட்டிச் சிலை எழுபது எனும் நூலையும் ஆக்கினர். அதுகண்ட செங்குந்தத் தலைவர்கள் தம் குலத்துப் பெரும்புலவரான கூத்தரை அணுகித் தம் குலம் விளங்கவும் ஒரு நூல் கூற வேண்டினர்.

தம் குலத்தைத் தாமே புகழ்ந்து பாடுதலை விரும்பாத கூத்தர் தடங்கல் பலவுங்கூறி மறுத்தனர். எனினும் செங்குந்தத் தலைவர் பலரும் மீண்டு மீண்டும் வற்புறுத்தவே, அவர்களைப் போக்கும் பொருட்டு ஒரு கடுமையான திட்டத்தைக் கூறினர். 'நம் குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் தலைகளைக் கொய்து பரிசு தருவீர்களாயின் பாடுகின்றேன்' என்ருர் கூத்தர்.

அவர்கள் மனந்திரும்பி விடுவார்கள் எனக் கூத்தர் எண்ணினுர். அவர்களோ உறுதி பெற்றனர். ஆலூர்ச் செங்குந்தர்கள் மனமுவந்து அளிக்க முன்வந்தனர். அவர்களைப் பின்பற்றிப் பிற செங்குந்தத் தலைவர்களும் தலைப் பிள்ளைகளின் தலைகளைத் துணித்து அனுப்பினர். ஆயிரத்

தெட்டுத் தலைகளை அடுக்கிச் சிரச்சிங்காதனம் இட்டு அதன் மேலிருந்து 'ஈட்டி எழுபது' எனும் இந்நூலைப் பாடினார் கூத்தர். பின் அந்தச் செயல் செங்குந்தர்க்குப் புகழ் தருவ தேனும் தமக்குப் பழி தருவதாகும் என உணர்ந்து கலை வாணியை வேண்டித் துதிக்க அவளருளால் அத்தலைக் குரியோரனைவரும் உயிர் பெற்றனர். இவ்வாறு ஈட்டி எழுபது எழுந்த கதையைத் தமிழ் நூல்கள் பலவும் கூறு கின்றன.

தலைதந்த குமணனைப் பாராட்டும் நாம், தமிழ் விரும்பி, ஆயிரத்தெண்மரின் தலைகளைக்கொய்து தந்த செங்குந்தரின் தமிழ்ப்பற்றின் திறத்தையும் பாராட்டல் வேண்டுமன்றோ? தலைகள் ஒட்டி உயிர்பெறச் செய்த சிறப்பின் காரண மாகவே கூத்தர்க்கு ஒட்டக்கூத்தர் என்ற பெயரும் ஏற் பட்டது என்பர்.

இக்கூத்தர் செய்த நூல்களில் மிகச் சிறந்தது தக்க யாகப் பரணியாகும். மூவருலாவும் மிகவும் நயம் நிரம்பிய நூலே. ஆயின் அத்துணை நயங்கள் இவ் ஈட்டி எழுதி பதில் காணப்படாதது, ஏனோவென நாம் அறிய வியல வில்லையேனும் இதுவும் சிறந்த ஒரு நூலேயாகும்.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் இவர் என வும், மூன்றாங் குலோத்துங்கன் காலத்தவர் இவர் எனவும் இருவகையாகக் கூறுவர் தமிழாராய்ச்சியாளர். எவ்வாறா யினும் கூத்தர் சகாப்தம் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சிறந்த திருப்பம் என்று மட்டும் நாம் கருதலாம். சோழ நாட்டு அரசியலிலே மாபெருஞ் செல்வாக்குடன் விளங்கின தமிழ்ப் புலவர் கூத்தர். அவர் புகழ் தமிழ் மொழிக்குரிய புகழ் அன்றோ?

ஒட்டக்கூத்தரின் தமிழாட்சி எங்ஙனமாயினும் பிற்காலப் புலவர் ஒருவர் கூறியது போன்று, 'கோவை உலா ஆதிகளுக்கு ஒட்டக்கூத்தன்' என்ற புகழ் அவருக்கு எந்நாளும் மறையாது நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

க. சொக்கலிங்கன்.

20-9-1957

கூத்தன் தமிழ்

[ஈட்டியெழுபது]

PRESENTED BY:
... M. ... M.
... CHETTIAR
... GANERI.

கடவுள் வாழ்த்து

1. ''நாட்டிலுயர் செங்குந்த நாயகர்மீ திற்சிறந்த
ஈட்டி யெழுப திணைப்பாடக்—கோட்டில்
பருமா வரையதனிற் பாரதநூல் தீட்டும்
கரிமா முகன் கழலே காப்பு.''

உரை : நாட்டில் - உலகத்தில்; உயர் - அறிவு ஒழுக்கம் ஆண்மை முதலியவற்றால் அனைவரினும் உயர்ந்து விளங்கும்; செங்குந்த நாயகர்மீது - செங்குந்தர் வழிவந்த வீரர்கள் மீது; சிறந்த - சிறப்புடைய; ஈட்டியெழுபதினை - ஈட்டி எழுபது எனும் நூலை; பாட - நான்பாட; கோட்டில் - தன் ஒற்றைக்கொம்பால்; பரு - அடிபருத்த; மா - தலை உயர்ந்த; வரையதனில் - மேருமலைமீது; பாரத நூல் - பாரத நூலை; தீட்டும் - எழுதிவைத்த; கரிமா முகன் - கரிய யானைமுகக்கடவுளாகிய விநாயகன்; கழல் - வீரக்கழல் அணிந்த திருவடிகளே; காப்பு - துணையாம்.

விளக்கம் : செங்குந்தர், ஒழுக்கம், வீரம், உள்ளம் இவற்றால் சிறந்தவராதலின், " நாட்டிலுயர் செங்குந்தர் " என்றார். தம்மரபின் மாண்பைத்தாமே பாடுதல் பெருமையாகாது எனக்கருதும் பரந்த உள்ளம்கொண்ட ஒட்டக் கூத்தரால், ஆயிரத்தெட்டுத் தலைகளைத் தந்தேனும், அரிய நூலைப் பெறுதல் வேண்டும் எனும் ஆர்வம் மிக்க குந்தர்மீது பாடப்பெற்ற பெருமையுடைமையால், "சிறந்த ஈட்டி எழுபது" என்றார். விநாயகன், தன் ஒரு கோட்டால் பெருநாலை எழுதிய பெருமையுடையவனாதலின், கூத்தர், தன் சிற்றறிவால் பெருநூல் எழுதப்புகுந்த தனக்கு, அவன் கழலைத் துணையாகக்கொண்டார். மேலும், எடுத்துக் கொண்ட தொழில், நூலியற்றுதல் ஆதலின், விநாயகன் ஆற்றிய திருவிளையாடல் பல இருக்கவும், அவன் பாரதம் எழுதிய திருவிளையாடலை மட்டும் ஈண்டுக் கூறினார். ஏடு மலையும், எழுதுகோல் கோடு மாதலின், எழுதினார், வரைந்தார் என்ற சொற்களால் கூறாது, "தீட்டினார்" எனக்கூறிய சொல் நயம் சுவைத்தற்குரியது.

தற்சிறப்புப் பாயிரம்

2. **"பூவார் புவனையிற் சோமன் றரும்பழி போனபின்பு**
நாவாணர் போற்றிய நாடகம் கேட்ப நலமுடனே
யாவாணர் செங்குந்த ராயிரத் தெண்டலை
[கொய்திரத்தப்
பாவாடையிட்ட துலகமெல் லாம்புகழ் பாலித்ததே."

உரை : நலமுடனே - பல நலங்களுடன்; யாவாணர் - செல்வத்தில் சிறந்து வாழ்ந்திருந்தவராய; செங்குந்தர் - ஆலூர்ச் செங்குந்தர்கள்; பூ ஆர் - பூக்கள் மலிந்த; புவனை

யில் - புவனை என்னும் ஊரில்; சோமன் - சோமாசியாண்டார் என்பவரால்; தரும்பழி - ஒட்டக் கூத்தருக்குத் தாங்கள் தர இருந்த கேடு; போனபின்பு - தடையுற்றுப் - போனபிறகு; நாவாணர் - புலவர்கள்; போற்றிய - புகழ்ந்த; நாடகம் - ஈட்டியெழுபது எனும் நூலை; கேட்க - ஒட்டக் கூத்தரால் இயற்றுவித்துக்கேட்க; ஆயிரத்து எண்தலை கொய்து - தங்கள் குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்து எண்மர் தலைகளைக்கொய்து; இரத்தப் பாவாடை இட்டது - இரத்தப் பாவாடை விரித்த செயற்கரிய சிறப்பு; உலகமெலாம் - உலகம் முழுவதும்; புகழ்பாலித்தது - புகழைப் பரப்பிற்று.

விளக்கம்: வாழ்நர், வாணர் எனத்திரிந்தது. பாவாடை - அரசர், ஆன்றோர் போன்ற பெரியோர்கள் நடந்து செல்லத் தரைமீது விரிக்கும் சீலை. ஈட்டி எழுபதைப் பாடிய புலவர் பெருமையும், நூல் தோன்றிய சூழ்நிலைச் சிறப்பும், நூலின் பெருமையும், நூலின் பாட்டுடைத் தலைவராய செங்குந்தர் சிறப்பும் ஒருங்கே தோன்ற, "நாவாணர் போற்றிய நாடகம்" என்றார். புவனை என நூல் செய்த இடமும், ஆவூர்ச் செங்குந்தர் வேண்ட என, அது எழுந்த காரணமும், செங்குந்தர் எனக் கேட்டோரும், ஆயிரத்தெண் தலைகளால் ஆய அரியாசனத்தில் இருந்து பாடியது என, அது தோன்றிய நிலையும் இப்பாயிரச் செய்யுளால் உணர்த்தப்பட்டன.

சிதம்பரத்திற்கு வடமேற்கில், கீழைப் புவனகிரி, மேலைப்புவனகிரி என இரு பிரிவுகளாக வழங்கப்பெறும் புவனகிரியே புவனையாம்; பண்டு அதன் ஒரு பகுதி, புவனை எனவும், மற்றோர் பகுதி, ஆவூர் எனவும் வழங்கப் பெற்றது என ஒரு சாராரும், இவ்வரலாற்றோடு தொடர்புடைய சோமாசியாண்டாரை, "திரிபுவனத்து வள்ளல்"

என அழைக்கும் வழக்கும் உண்டு ஆகையால், கும்ப கோணத்திற்கும், திருவிடை மருதூருக்கும் இடையே உள்ள திரிபுவனம் எனும் நகரமே புவனையாம்: திரிபுவனத்தை அடுத்து, ஆலூர் எனும் சிற்றூர் இன்றும் இருப்பது அதை உறுதிசெய்கிறது என மற்ரெருசாராரும் கூறுகின்றனர்.

மங்கல வாழ்த்து

3. "பூதலம் வாழ்க! குந்தர் பொலிவுடன் விளங்க!
[நான்கு
வேதமெந் நாளு மோங்க! வேதியர் பசுக்கள் பல்க!
மாதவர், வளவன் செங்கோல் வளமைகுன்
[ருதுநிற்க!
ஓதுமே யறையும் பொன்னி யுறந்தையும் சிறக்க
[மாதோ!"

உரை : பூதலம் வாழ்க - உலகம், நிலவளம் நீர்வளம் முதலாம் பலவளமும் பெற்று வாழ்க; குந்தர் - செங்குந்தர்; பொலிவுடன் வாழ்க - புகழ் நிறைந்த வாழ்வினராய் வாழ்க; எந்நாளும் நான்கு வேதம் ஓங்க - எக்காலமும் நால்வேத நெறியே உலகில் நிலைபெறுக; வேதியர் வேதநெறியினை வளர்க்கும் அந்தணர்களும்; பசுக்கள் - பால்முதலாம் உணவளித்தும், உழுதல் முதலாம் தொழில் அளித்தும் துணை புரியும் பசுக்களும்; பல்க - ஒன்று பலவாய்ப் பெருக; மாதவர் - அறிவறிந்து அடங்கிய ஆன்ரோர்களும்; வளவன் - குலோத்துங்கச் சோழனும்; செங்கோல் வளமை குன்ருது நிற்க - செங்கோற் சிறப்பின் பயனும் வளமும் வற்ருது

வாழுமாறு அறநெறி அரசு நடத்துக; ஓதமே அறையும் பொன்னி - கடலையே உவமையாகக் கூறத்தக்க பெருமை வாய்ந்த காவிரியாறும்; உறந்தையும் - அப்பொன்னியாறு பாயும் சோணாட்டின் தலைநகராம் உறையூரும்; சிறக்க - சிறந்து விளங்குக.

விளக்கம் : "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார் திருவள்ளுவர். புகழிலா வாழ்வு வாழ்வெனப் படாது ஆதலின், "பொலிவுடன் விளங்க" என்றார். உலகில், அறநெறி ஒரு சிறிது காலம் அழியினும், அதனால் உளவாம் கேடு பலவாம் ஆதலின், அந்நெறி, என்றும் அழியாமை வேண்டும் என்பார், "எந்நாளும் ஓங்க" என்றார். அரசன் செங்கோல் வாழ்வது, அவன் அருகிருந்து அறிவூட்டும் ஆன்றோர்கள் உண்மையாலாதலின், "மாதவர் வளவன்" என, அவரை முன்வைத்துச் சிறப்பித்தார். பொன்னியும் என, உம்மையை முன்னும் கூட்டுக.

நூல் கேட்டோர் சிறப்பு

4. "கோட்கவி கொண்டு மாக்கள் கொடுந்தமிழ்
[கூறநீத்துத்
தாட்கவிப் புதிய வாட்டம் தலைக்கடை துரந்து சாட
வாட்கவி கொண்ட மன்னன் வளவனும் மகிழ
[நாமே
நாட்கவி பாடுநாட்போ லிருப்பது பெரிய நாடே."

உரை : மாக்கள் - புலமை நெறி உணராப் போலிப் புலவர்கள்; கோட்கவிகொண்டு - பழம்பெரும் புலவர்கள் வழிகாட்டியாக விட்டுச்சென்ற பாக்களின் துணைகொண்டு;

கொடுந்தமிழ் கூற - சிறப்பில்லாத் தமிழ்ப் பாக்கள் சிலவற்றைத் தாமே ஆக்கிக்கூற; நீத்து - அக்கொடுந்தமிழை அழித்து; இப்புதிய ஆட்டம் - நாள்தோறும் நடைபெறும் இப்புதிய திருவிளையாடல்கள்; தாட்க - வழக்கற்றுப் போக; தலைக்கடை துரந்துசாட - அப்போலிப் புலவர்களைத் தலைவாயில் அளவும் துரத்தி அழிக்க; வாட்கவிகொண்ட - புலமையில் வாள்போன்ற என்னை அரசவைப் புலவனுய்க் கொண்ட; வளவனும் - குலோத்துங்கச் சோழனும்; மகிழ - கேட்டுமகிழ; நாமே - ஒட்டக்கூத்தனுகிய நாம்; நாட்கவி பாடும் - நாள்தோறும் புதிய புதிய பாக்களைப் பாடும்; நாள்போல் - இந்நாளைப்போல்; பெரிய நாடு - பெருமை மிக்க இச்சோணுடு; இருப்பது - சிறப்புற்றிருப்பதாக.

விளக்கம் : தாம் புலமைபெருது, பிறர் புலமையைத் தம் புலமையாக்கிப் பொய்க்கும் இழிவுடைமையால் "மாக்கள்" என்ருர்; புலமை நிரம்பாதார் அளித்த பாக்களில் புலமை நலம் இராதாதலின், அப்பாக்கள் "கொடுந்தமிழ்" எனப்பட்டது. குலோத்துங்கன், "என் துணைகொண்டு, போலிப்புலவர்களைத் துரத்தியும், அவர் அளிக்கும் பொருள் நிறையாப் பாக்களை அழித்தும் செந்தமிழை வளர்த்தான்" என அரசனைப் பாராட்டிஞராயினும், அது தன் புலமையைப் பாராட்டியதே எனக்கொள்க. கூத்தர் நுண்ணிய அறிவும் போலிப்புலவர்களை இரண்டொன்ருய்த் தலைமுடிந்து வெட்டும் தொழிலும் உடையராதலின், கூர்மையும், பொருள்களை ஒன்று இரண்டாக வெட்டிப் போடும் தொழிலும் உடைய வாள் உவமையாயிற்று. ஆயிரத்தெண் தலை தந்து கேட்ட செங்குந்தர்களோடு, வளவனும் கேட்டான் எனப்பொருள் தருதலின், உம்மை இறந்தது தழுவிற்று. இந்நூல் செங்குந்தர் கேட்கப் பாடப் பெற்றது என்பது எல்லாரும் அறிந்ததொன்ருதலின், அவர்

கேட்டதைக் கூறுது, அது குலோத்துங்கச் சோழன் அவையில் பாடப் பெற்றது என்பதை அறிவிக்க, "வளவனும் மகிழ" என்ருர். இன்று இக்கவியைக் கேட்ட சோணுட்டு மக்கள், இன்றேபோல் என்றும் சிறப்புற்று வாழ்வர் என, நூல் கேட்டலின் சிறப்புக் கூறியவாறு.

செங்குந்தர் சிவாலய பரிபாலனச் சிறப்பு.

5. "விடங்கமே ழாதி வீதி விடங்கமா ரூர், வெண்
[காடும்,
நடங்கொளுந் தில்லை மூதூர், பஞ்சநன் னதிசாய்க்
[காடும்,
இடங்கொள்மா காள மேழு மிடைமரு தூர்செங்
[காடும்
தொடங்கிய தரும வாட்சிச் செங்குந்தர்
[தொகுதி வாழி."

உரை: வீதிவிடங்கம் ஆரூர் ஆதி - வீதி விடங்கப் பெருமான் வீற்றிருக்கும் திருவாரூர் முதலாக; விடங்கம் ஏழ் - உளியாற் செய்யப்படாது, தானே உருவுற்ற திருவுருவங்கள் கோயில் கொண்டிருக்கும், திருவாரூர், திருக்காரோணம், திருநள்ளாறு, திருக்காருயில், திருக்கோளியூர், திருவான்மியூர், திருமறைக்காடு எனும் ஏழு ஊர்களிலும் உள்ள திருக்கோயில்களிலும்; வெண்காடு - திருவெண்காடு; நடங்கொளும் - இறைவன் திருநடனம் புரியும்; தில்லை மூதூர் - தில்லை எனும் பழைய நகரம்; பஞ்சநன்னதி - திருவையாறு; சாய்க்காடும் - திருச்சாய்க்காடு; இடங்கொள் - இடம் அகன்ற; மாகாளம் ஏழும் - திரு

மாகாளம் என்ற பெயர் பெற்ற ஏழு நகரங்கள்; இடை மருதூர் - திருவிடைமருதூர்; செங்காடு - திருச்செங்காடு ஆகிய ஊர்களில் உள்ள திருக்கோயில் களிலும்; தரும ஆட்சி - அறநெறி ஆட்சியை; தொடங்கிய - தொடங்கி நடாத்தி வருகின்றன; செங்குந்தர் தொகுதி 'குந்தர் குலம்' வாழி - வாழ்க.

விளக்கம் : விடங்கம் - உளியால் செய்யப் படாதது, சுயம்புலிங்கம் என்றவாறு; டங்கம் - உளி; வி - அற்றது; வீதி விடங்கன் - வீதியில் உலாவரும் விடங்கன்; சுயம்பு லிங்கங்கள் விளங்கும் திருக்கோயில்கள் ஏழிலும், திருவாரூர்க் கோயிலில் கோயில் கொண்டிருக்கும் திரு வுருவம் ஒன்றே, வீதியில் உலாவரும் சிறப்புடைத்து. செங்குந்தரின் சிவத்தொண்டுச் சிறப்புக் கூறியவாறு.

குடிவழிச் சிறப்பு.

6. "பாதசு புரத்திற் றேவி சாயைகண் டமலன் [கொண்ட
காதலாற் கருப்ப மாகும் கதிர்நவ மணிமா [தர்க்கண்
மேதகு வீரத்தோடு மென்மீசை யோடும் வந்த
மாதவ வீர வாகுத் தலைவரித் தலைவர் மாதோ."

உரை : அமலன் - சிவபெருமான்; பாதநூபுரத்தில் - உமையம்மையின் காற்சிலம்பினின்றும் உதிர்ந்த நவமணி களில்; தேவி - உமையம்மையின்; சாயைகண்டு - திரு வுருவைக் கண்ணுற்று; கொண்ட காதலால் - கொண்ட காதலால்; கருப்பமாகும் - கருவுற்ற; கதிர் - ஒளிவீசும்;

நவமணி மாதர்க்கண் - அந்நவமணிகளிற் கண்ட உமை யம்மையின் சாயல், உயிர்கொண்டு தோன்ற, வந்து, அம்மணிகளின் பெயர்களையே தம் பெயர்களாகக் கொண்ட மகளிடத்தில்; மேதகு வீரத்தோடும் - மிக்க வீரமுகத் தோடும்; மென்மீசையோடும் - இளம் மீசையோடும்; வந்த - தோன்றிய; மாதவ - பெருந்தவப் பேறுபெற்ற; வீரவாகுத் தலைவர் - வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களின் வழிவந்தவர்; இத்தலைவர் - இச்செங்குந்தத் தலைவர்கள்.

விளக்கம்: மாதும் ஓவும் அசைகள். செங்குந்தர், வீரவாகு தேவர் முதலாம் நவவீரர் மரபினர் என்பது கருத்து. நவவீரர்களின் இளமையைக் குறிக்க மென் மீசை கூறப்பட்டது. இறைவன் கொண்ட காதற் பயனாய் வந்தவராதலின் "மாதவ வீரர்" என்றார்.

நவவீரர் வரலாறு: சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் முதலிய அவுணர்களால் துன்புற்ற அமரர்கள், திருக்கைலை அடைந்து, ஆங்கெழுந்தருளிய சிவபெருமானிடத்தே முறை யிட, அவ்விறைவன், "அமரர்காள்! அஞ்சேல்; உம் இன்னல் அகல, இன்றே ஒரு மகனை அளிக்கிறோம்" என்று கூறி, ஆறு திருமுகம் கொண்டு, அம்முகங்களில் உள்ள நெற்றிக் கண்தோறும் ஒவ்வொன்றாக, ஆறு தீப்பொறி களைத் தோற்றுவித்தான்; அக்காலை இறைவன் அண்மை யில் வீற்றிருந்த உமை அத்தீப்பொறி கண்டு, அஞ்சிக் கலங்கி, அவ்விடம் விட்டு ஓடினாள். அவ்வாறு ஓடிய பொழுது, அவள் காலில் அணிந்திருந்த நவரத்தினச் சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்க, அவற்றில் பதித்திருந்த நவமணிகள் உதிர்ந்து சிதறின; அவ்வாறு சிதறிய அம்மணி களில், உமையம்மையின் உருவம் தோன்ற, தோன்றிய அவ்வுருவங்கள்மீது, இறைவன் காதல் கொண்டான்; அந்நிலையே, அந்நவமணிகளில் தோன்றிய உருவங்கள்;

ஒன்பது மகளிராய்க், கருவுற்றுத் தோன்றின. அங்கவமணி மாதர்களேயும், அவர்கள் கருவுற்ற நிகழ்ச்சியையும் கண்ட உமை, "அவர்மீது சினங்கொண்டு, "உம் வாழ்நாள் கருவுயிர்க்கப் பெறுதே கழிக" எனச் சபித்தாள். உமையின் சாபம் கேட்ட, அம்மகளிர் அஞ்சி வியர்த்தனர்; அவ்வியர்வை நீர், ஓரிலக்கம் வீரர்களாய் உருப்பெற்றது. நிற்க. உமையின் சாபம் பெற்ற அம்மகளிர், பல்லாண்டு வரையும் கருவுயிர்க்கப் பெறுதே கலங்கினர்; தம் துயர் தீர்க்கவேண்டி, இறைவனேயும், இறைவியையும் வழிபட்டு வந்தனர்; இறுதியில், உமை இறைவன் வேண்டிக்கொள்ள, அவர்களுக்குச் சாபவிடை அளித்தாள்; உடனே, மாணிக்கவல்லி முதலாம் அம்மகளிர் ஒன்பதின்மரும், வீரவாகு முதலாம் ஒன்பது வீரர்களேப் பெற்று மகிழ்ந்தனர்; வீரர் ஒன்பதின்மருக்கும், உமையும், இறைவனும் முறையே ஈட்டியும், வாளும் வழங்கி, "வீரர்காள்! உம்மாதர் வியர்வையினின்றும் தோன்றிய இலக்கம் வீரர்களோடு, உங்கள் முன்னேனுய முருகவேட்குத்துணேயாய் வாழ்வீராக" என வாழ்த்தி அனுப்பினர்; அவர்களும், அன்றுமுதல், அம்முருகனேப் பிரியாது, வாழ்ந்தனர்; அவ்வாறு வந்த நவவீரர் வழிவந்தவரே செங்குந்தர் என்பது வழக்கு.

குந்தர் படைச் சிறப்பு

7. "பிறந்தவொன் பதின்மர் குந்தப் பெருமையாம்
[பேசமாட்டோம்;
பறந்தன கழுகும் பாறும்; பயிரவி காளி அஞ்ச
மறந்தகு மவுணர ராட்ட மடங்கின; மகிழ்ச்சி
[யால்வாய்
திறந்தன, வலகை யீட்டஞ் செய்யவாய்ச்
[சிறுவ ரோடே."

உரை : பிறந்த - மேதகு வீரத்தோடும், மென்மீசை யோடும் வந்து பிறந்த; ஒன்பதின்மர் - நவவீரர். ஏந்திய; குந்தப் பெருமை - உமையம்மை அளித்த வேற்படையின் பெருமையை; பேசமாட்டோம் - எம்மால் சொல்ல முடியாது; ஆயினும், அது செய்த அரும்செயலைக் கூறுகிறோம்; அது கொண்டு அதன் பெருமையை அறிந்து கொள்வீராக. கழுகும், பாறும் பறந்தன - அதன் ஆற்றலால், களத்தில், பிணங்கள் குவியும் என எதிர் நோக்கிக் கழுகின் கூட்டங்களும், பருந்தின் கூட்டங்களும், போர்க்களத்தைச் சூழ்ந்து பறந்தன; பயிரவி - துர்க்கையும்; காளி - காளியும்; அஞ்ச - அக்குந்தம் ஆற்றிய போர்த்திறம் கண்டு அஞ்ச; மறந்தகும் - அறநெறிமறந்து, மறநெறியே பயின்ற; அவுணர் - அரக்கர்களின்; அராட்டம் - கொடுங்கோலாட்சி, அடங்கின - அழிந்தது; அலகை ஈட்டம் - அப்போர்க்களத்தில் வந்துகுவிந்த பேய்க்கூட்டம்; செய்யவாய்ச் சிறுவரோடு - பிணந்தின்று சிவந்த வாயுடைய தம் குழவிகளோடு; மகிழ்ச்சியால் - அவுணர் பிணக் குவியலைக் கண்ட மகிழ்ச்சியால்; வாய்திறந்தன - வாயைப் பிளந்தன.

விளக்கம் : குந்தப்படை, ஆற்றல் மிகுந்தது; உமை அளித்த அருட்டிறம் வாய்ந்தது ஆதலின் அதன் பெருமை கூறுதற்கு அரிதாயிற்று. அத்தகைய குந்தப் படை ஏந்தியவர், இச்செங்குந்தர் எனக் குந்தர் குலப்பெருமை கூறியதாகக் கொள்க.

தகரை வாகனமாக்கிய பெருமை

8. "ஓதிய வேள்வியி னுவப்ப நாரதன்
போதவே தகர்தனைப் பொருங்கு தீத்தர
வேதனைப் படுப்பதை விரைந்து கட்டியே
சேய்தனக் குதவின திருச்செங் குந்தமே."

உரை : உவப்ப - உள்ளம் விரும்பும் உறு பயன் பெற்று உவந்து வாழ; நாரதன் - நாரத முனிவன்; ஓதிய - வேதவிதி வழாது செய்த; வேள்வியின் - யாகத்தில்; பொங்கு தீ - பொங்கி எரிந்த வேள்வித்தீ; போதலே - பேராற்றல் வாய்ந்த; தகர்தனை - ஆட்டுக்கடாவை; தர - அளிக்க; வேதனைப் படுப்பதை - அவ்வாறு பிறந்த அவ் வாட்டுக்கடா, நாரதர் முதலாம் முனிவர்க்கும், தேவர்க்கும் துன்பம் தர, துன்பம் தந்த அதை; விரைந்து கட்டி - விரைந்து சென்று, கைப்பற்றிக் கொணர்ந்து; சேய் தனக்கு - முருகப் பெருமானுக்கு; உதவின - ஊர்தியாய் அளித்து உதவிய; திருச்செங்குந்தமே - அழகிய குந்தப் படையே.

விளக்கம் : நாரதன், உவப்ப ஓதிய வேள்வி என மாற்றுக. குந்தப் படையின் பெருமை கூறவே, அக்குந்தப் படையேந்திய செங்குந்தர் குலப்பெருமை கூறப்பட்டது.

தகரை வாகனமாக்கிய வரலாறு : நாரதர் ஒரு வேள்வி செய்தார்; அவ்வேள்வித் தீயில், எதிர்பாரா வகையில் ஓர் ஆட்டுக்கடா தோன்றிற்று; தோன்றிய அக்கடா உலகெலாம் திரிந்து உயிர்களை அழிக்கத் தலைப்பட்டது; அதுகண்ட நாரதர், தேவர்களோடு சென்று, கயிலை மலைச் சாரலில் விளையாடிக் கொண்டிருந்த முருகவேளிடம் முறையிட்டார்; அமரர் துயர்கண்ட முருகன், "அஞ்சன்மின்" என அவர்க்கு ஆறுதல் அளித்து தன் அருகில் இருந்த, வீரவாகுவை, அக்கடாவைப் பிடித்துக் கொணருமாறு பணித்தான்; பணி மேற்கொண்டு, ஆட்டுக்கடாவைத் தேடிச் சென்ற வீரவாகு, அதை, உலகெலாம் தேடி அலைந்து, இறுதியில் பிரமலோகத்தில் இருக்கக் கண்டு, பற்றி ஈர்த்துக் கொணர்ந்து, முருகன் முன் விட்டார். முருகன், உலகம் உய்யும் பொருட்டு, அதைத் தன் வாகனங் களுள் ஒன்றாக ஆக்கி ஆட்கொண்டான்.

பிரமனைச் சிறை செய்த பெருமை.

9. "பொதிய மால்வரைக் குறுமுனி தேறவும்
[பொருள் சொன்ன
மதியை யாறென வுடையவோர் மூவிரு
[வதனத்தான்
கதியை யாற்றியும் குணத்தொடு பழகி யுங்காணு
விதியை மேவலர் நடுங்கிடத் தலையிடு
[மிளர்குந்தம்."

உரை : பொதிய மால்வரை - பொதிய மலையாகிய பெரிய மலையை வாழ்விடமாகக் கொண்ட ; குறுமுனியும் அகத்திய முனிவரும் ; தேறவும் - உண்மைப் பொருளை, ஐயம் திரிபு அறக்கற்றுத் தெளியுமாறு ; பொருள் சொன்ன - மெய்ஞ்ஞானப் பொருளை விளங்க உரைத்த ; மதியை - ஒரு திங்களை ; ஆறு என உடைய - ஆறு திங்களாக ஆக்கிக் கொண்டதுபோன்ற ; ஓர் - ஒப்பற்ற ; மூவிரு வதனத்தான், ஆறு திருமுகங்களை உடைய முருகவேள் ; கதியை ஆற்றியும் - படைப்புத் தொழில் புரிந்தும் ; குணத்தொடு பழகியும் - அப்படைப்புத் தொழிற்குரிய குணத்தைப் பயிலப் பெற்றும் ; காணு - பிரணவத்திற்குரிய பொருளை அறியமாட்டாத ; விதியை - நான்முகனை ; மேவலர் நடுங்க - பகைவர்கண்டு நடுங்குமாறு ; தலையிடும் - சிறை செய்யும் ; மிளர் - ஒளிவீசும் ; குந்தம் - குந்தப் படையே.

விளக்கம் : வரை, மால்வரை ; முனிவர், குறுமுனிவர் ; என்ற நயம் அறிந்து மகிழ்க ; பொருள் சொன்ன வதனத்தான் ; மூவிரு வதனத்தான் எனக்கூட்டிப் பொருள் கொள்க. உயிர்களின் வாழ்வை விதிப்பவன், விதி எனப்

பட்டான்; மூவருள் ஒருவனும், முதல் தொழில் உடையோனுமாய நான்முகனையே தளையிடும் இவன் நம்மை என்ன செய்வனோ எனப் பகைவர் நடுங்குவராதலின், "மேவலர் நடுங்கிட" என்றார்; பிரணவம் - ஓம் எனும் முதல் மந்திரம்; வதனத்தான் தளையிடத் துணை புரியும் குந்தம் என வரற்பாலது, முருகன் எழுதும் கோல் என்பது போல், கருத்தாவும் கருவியும் என்ற தொடர்புண்மையால், வதனத்தான் தளையிடும் குந்தம் என வந்துளது.

பிரமனைச் சிறையிட்ட வரலாறு: திருமாலும், நான்முகனும், ஒருநாள், தேவர்களோடு கயிலை சென்று சிவனை வணங்கி விடைபெற்றுத் திரும்பினர்; அவ்வாறு திரும்புங்கால், வாயிற்கண், தம் தம்பியரோடு அமர்ந்திருந்த ஆறுமுகப்பெருமானைத், திருமாலும் தேவர்களும் வணங்கி விடை பெற்றாராக, நான்முகன் மட்டும் வணங்காதுயினன்; அதுகண்ட முருகன், நான்முகனை அழைத்து, "படைக்கும் தொழில் மேற்கொண்ட உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமோ?" என்று கேட்டான்; நான்முகன், அதன் பொருள் அறியமாட்டாது விழித்தான்: விழித்த அவனை அருகில் அழைத்து, அவன் தலையில் குட்டிப், "பிரணவப் பொருள் அறியாதவன், படைப்புத் தொழிற்கு ஏற்றவனல்லன்; ஆகவே, உன்னைச் சிறை செய்கிறோம்" என்று கூறி, அவனைக் குந்தப்படைத் தலைவராய, வீரவாகு தேவர் வழியாகக் கந்த மால்வரைக் குகையில் சிறைப்படுத்திப் படைப்புத் தொழிலைத் தானே மேற்கொண்டான்.

முருகன், வீரவாகு வழியாகப் பிரமனைச் சிறை செய்தான்; வீரவாகு, தன் குந்தப்படைத் துணையால், தனக்கிட்ட பணியை நிறைவேற்றினான்; ஆகவே, பிரமனைச் சிறையிட்ட சிறப்பு, குந்தப் படைக்கும், அப்படையேந்திய குந்தர் குலத்தவர்க்கும் உரித்தாயிற்று.

தாரகனைக்கொன்ற சிறப்பு

10. "வனமுறு வாசமா வைகல் விட்டியா
சனமுற, விண்ணிடந், தனிவை குந்தமும்,
சனனுறு பங்கய, மூவர்க் கெய்தவே
சினமுறு தாரகற் செறி செங்குந்தமே."

உரை : வனம் - அவுணர்களால் அல்லற்பட்ட அகத்தியன் முதலாம் முனிவர்கள், காட்டில்; உறுவாசமாவைகல் - நிலைத்த குடியாக வாழ்தலை; விட்டு - கைவிட்டு; ஆசனம் உற - தங்கள் தங்கள் தவ ஒழுக்கங்களை மேற்கொள்ளவும்; விண்ணிடம்-வானுலகமும்; தனிவைகுந்தம் - ஒப்பற்ற வைகுந்தமும்; இனனுறு பங்கயம் - ஞாயிறு கண்டு மலரும் தாமரைப் பீடமும்; மூவர்க்குஇந்திரன் திருமால், நான்முகன் என்ற மூவர்க்கும்; எய்தவே - முறையே கிடைக்கவும்; சினம் உறு - சினத்தில் மிக்க; தாரகன் - சூரபன்மனின் இளைய தம்பியாகிய தாரகாசூரனை: செறி - அழித்த; செங்குந்தமே - செங்குந்தப் படையே.

விளக்கம் : அகத்தியன் முதலாம் முனிவர்கள் என்ற எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. ஆசனம் இருந்து மேற்கொள்ளும் ஒழுக்கம், ஆசனம் எனப்பட்டது.

பானுகோபனைக்கொன்ற பெருமை

11. "பூட்டிய தேரோடும் பொலிந்த பானுவை
ஈட்டிய தொட்டிலி னிறுக்கு மைந்தனை
மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த குந்தமே."

உரை : பூட்டிய தேரோடும் - ஏழு குதிரைகள் பூட்டிய தேரோடும்; பொலிந்த - ஒளிவீசிப் பொலிவுபெற்ற; பானுவை - சூரியனை ; ஈட்டிய தொட்டிலின் - தேர்ந்தெடுத்த நவமணிகளால் செய்த தன் தொட்டிலில் ; இறுக்கும் - தன்குழவிப் பருவத்திலேயே இறுக்கிக் கட்டிய, மைந்தனை - மைந்தன் இவனே எனச் சிறப்பித்துக்கூறத் தக்க சூரபதுமன் மகனாகிய பானு கோபனை ; மூட்டிய சமரிடை - அவுணர் படையும், அமரர்படையும் கைகலந்து பெரும்போர் புரியும் களத்தில் ; முடித்து - கொன்று ; மாசுஅற - பின்னர், அவ்வவுணரைக் கொன்ற கறைநீங்குமாறு ; தீட்டிய - கழுவித் தீட்டப்பெற்ற ; வீரர் கைச் சிறந்த - நவவீரர் கையில் இருந்து சிறப்புற்ற ; குந்தமே - குந்தப்படையே.

விளக்கம் : தீட்டியகுந்தம், சிறந்தகுந்தம் எனக் கொண்டு கூட்டுக ; ஏழுகுதிரைகள் பூட்டியதேரில், எவரும் நெருங்காவாறு திரியும் சூரியனைத் தன்பிள்ளைப் பருவத்தில் பற்றிப் பிணித்த பேராற்றல் உடையவன் ஆதலின், பானு கோபனை மைந்தன் எனும் சொல்லால் குறித்தார் ; மைந்து - வலிமை. குழந்தைப் பருவத்தில், ஞாயிற்றின் ஒளி தன்மீது பட்டுக்காய, அதனால் சினங்கொண்டு, அச்சூரியனைப் பற்றிக் கொணர்ந்து, தன் தொட்டிலோடு பிணித்து, பானு கோபன் எனும் பெயர்பெற்றான் என்பது கதை.

செங்கடப்ப மாலை அணிந்த சிறப்பு

12. **"பங்கமி லரிமுகப் பஃற லைக்கிளை**
மங்கவே நூறியோர் வாகை மாலையை
எங்கள்வேற் படைதனக் கென்று சூட்டியொண்
செங்கடம் பணியுமால் செய்ய குந்தமே."

உரை : செய்யகுந்தம்-பகைவர் இரத்தக்கறை படிந்து செந்நிறம் பெற்ற குந்தப்படை; பங்கம் இல் - அழிவு இல்லாத; அரிமுகன் - சிங்கமுகாசுரனுடைய; பலதலைக் கிளை - பலதலைகளாகிய கிளைகளை; மங்கவேநூறி - அழியுமாறு வெட்டி வீழ்த்தி; ஓர் வாகைமாலையை - அதனால் பெற்ற ஒப்பற்ற வெற்றிமாலையை; எங்கள் வேற்படை தனக்கு என்று சூட்டி - எங்கள் பெருமான் முருகன் திருக்கையில் வீற்றிருக்கும் வேற்படைக்கே உரித்து என்று, அவ்வேலாயுதத்திற்கே சூட்டிவிட்டு; ஒண் செங்கடம்பு - நிறம் விளங்கும் செங்கடப்பமாலையை; அணியும் - தான் அணிந்து கொள்ளும்.

விளக்கம் : அழிவிலா வரம்பெற்றவனையும் அழிக்கும் ஆற்றல் வாய்ந்தது எனக் குந்தப் படையின் சிறப்பினை விளக்க, அவுணனைப் "பங்கமில் அரிமுகன்" எனப் பாராட்டினார்: அழிவற்றவனையும் அழித்து வெற்றிபெற்று, பெற்ற வெற்றியால் பெருமிதம் கொள்ளாது, இவ்வெற்றிப் பயன் வேற்படையுடையானுக்கே உரித்து என அப்புகழை அவனுக்கே சூட்டி அடங்கும் குந்தத்தின் பெருமைகூறிய வாறு அறிக. பெற்ற வெற்றிமாலையைப் பிறர்க்குச் சூட்டி விட்டு வெறும் கடப்ப மாலையைத் தான் அணியும் குந்தம் எனப் பழிப்பதுபோல் கூறிப் புகழ்ந்த புலமை பாராட்டற்குரித்து.

புலிக்கொடிபெற்ற பெருமை

13. "வனப்புறு மிளவலும் வரச்செவ் வேற்குகன்
கனப்பக லாறினிற் கலாப மேறியே
யினப்புகழ் சேவலங் கொடிதற் கேற்றுவெஞ்
சினப்புலிக் கொடிதரச் செறிசெங் குந்தமே."

உரை: செவ்வேற்குகன் - அவுணர்களை அழித்து அழித்து, அவர்கள் குருதியால் கறைபடிந்த வேலாயுதத்தை உடைய முருகன்; வனப்புறும் இளவலும் - அழகு பொருந்திய தம்பியாகிய வீரவாகுவும், மற்றும் பிற தம்பிமார்களும்; வர - தன்னைச் சூழ்ந்துவர; கனப்பகல் - பெருமை பொருந்திய நாட்கள்; ஆறினில் - ஆறில்; கலாபம் ஏறியே - தனக்குத் தோற்றோடிய சூரபதுமன், கடலிடையே புகுந்து மாமரவுருவாய் நிற்க, அதை வேலினால் இருகூறாக்க, அவ்விரண்டனுள் ஒன்று மயிலாகவும், ஒன்று கோழியாகவும் உருவுகொண்டு தன்னை எதிர்க்க, மயிலை ஊர்தியாக்கி அதன் மீது ஏறி; இனப்புகழ் சேவல் - தன் இனத்தைப் புகழும் கோழிச் சேவலை; அம்கொடிதற்கு ஏற்று - அழகிய கொடியாகத் தன் தேரில் ஏற்றி; வெம்சினப் புலிக்கொடி - சூரபதுமனுக்கு உரிய கொடிய கோபம் வாய்ந்த புலிக் கொடியை; தர - கொடுக்க; செறி - அப்புலிக்கொடி பெற்ற; செங்குந்தமே - செங்குந்தப்படையே.

விளக்கம்: "மேதகு வீரத்தோடும் மென்மீசையோடும்" என நவவீரர் வனப்பு முன்னரே பாராட்டப் பெற்றுள்ளமையின், ஈண்டு "வனப்புறும் இளவல்" என்றார்; அழியா வீரம் பெற்று ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆண்டுவந்த அவுணர் கூட்டம் அனைத்தையும் அழித்த பெருமை உடையவாதலின், "கனப்பகல் ஆறு" எனப் பாராட்டினார்.

தேவர்களைச் சிறைவீடுசெய்த பெருமை

14. "குறையினைக் கடவுளர் கூறக் கேட்டவர்
துறையினை நிறுவியே சூர்தடிந்துநான்
மறையினை வழுவற வளர்த்துத் தேவர்தம்
சிறையினை மீட்டது திருச்செங் குந்தமே."

உரை : கடவுளர் - அமரர்கள்; குறையினைக் கூறக் கேட்டு - சூரபதுமன் முதலாம் அவுணர்களால் தாம் படும் துயர்க் கொடுமைகளைச் சொல்லக்கேட்டு; சூர் தடிந்து - அச் சூர பதுமன் முதலானவரை அழித்து; தேவர் தம் சிறையினை மீட்டு - மகேந்திரபுரச் சிறையில் அடைபட்டுக் கிடந்த அமரர்களைச் சிறை வீடுசெய்து; அவர் துறையினை நிறுவி - அவ்வமரர்க்குரிய படைத்தல் முதலாம் தொழில்கள் இடையூறின்றி இனிது நடைபெறச் செய்து; நான் மறையினை - அவுணர்களால் அழிந்துபோன நால்வேத நெறிகளை; வழுவற வளர்த்து - குற்றமற வளரப் பண்ணியது; திருச் செங்குந்தமே - அழகிய செங்குந்தப் படையே.

விளக்கம் : வளர்த்து மீட்டது என்பதை, மீட்டு வளர்த்தது என மாற்றிப் பொருள் கொள்க. சூரபதுமனைத் தடியவே, தேவர் சிறைவீடு பெற்றனர்; அவர் சிறை வீடுபெறவே, அவர் தொழில் நிறுவப்பெற்றது; அவர் தொழில் நிறுவப்பெறவே, நால்வேத நெறி வளர்ந்தது என ஒன்றையொன்று அவாவி நிற்க அமைத்த அழகு அறிந்து மகிழ்க; இத்துணையும் செய்தது செங்குந்தம் என அதன் புகழ் கூறியவாறு.

பொன்னகர் சீர்பெறப் பண்ணிய பெருமை

15. "தாருவுஞ் சுரபியுந் தவள வேழமும்
தாருடைப் புரவியும் சகியும் கைம்மிசைப்
போருடை வச்சிரவாளும் பொன்னகர்ச்
சீருறும் படியவுண் செறிசெங் குந்தமே!"

உரை : பொன்னகர் - அவுணர்களால் அழிந்துபோன அமரர்கோன் வீற்றிருக்கும் பொன்னுலகம்; தாருவும் -

அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் ஆகிய ஐந்து தருக்களும்; சுரபியும் - காமதேனுவும்; தவள வேழமும் - ஐராவதமாகிய வெள்ளை யானையும்; தார் உடைப்புரவியும் - சதங்கை முதலிய பல மாலைகளை உடைய உச்சைச் சிரவம் என்ற குதிரையும்; சசியும் - இந்திராணியும்; கைம்மிசை - கையின்கண் ஏந்திய; போர் உடை - பகைவர் போரை அழிக்கவல்ல; வச்சிரவாளும் - வச்சிராயுதமும்; சீர் - முதலாம் பல சிறப்புக்களையும்; உறும்படி - பெறுமாறு; அவுண்செறி - அவுணர்களை அழித்த; செங் குந்தமே - செங்குந்தப்படையே.

விளக்கம் : பொன்னகர், தருவும்...வாளும் முதலாம் சீர் உறும்படி, அவுண் செறிகுந்தம் என மாற்றி இயைக்க, உடை வச்சிரவாள் : வினைத்தொகை.

தேவர் பகை ஒழித்த பெருமை

16. "முன்பகை யாவையும் முடித்துக், கூரெயிற்
றன்பகை யாவையும் தடிந்து, சந்ததம்
பின்பகை இல்லதாப் பெற்றி செய்ததாம்,
ஒன்பதி னோர்கரத் தொளிரும் குந்தமே."

உரை : ஒன்பதினோர் கரத்து - வீரவாகு முதலிய நவ வீரர்களின் கையின்கண்; ஒளிரும் - கிடந்து ஒளிவீசும்; குந்தம் - குந்தப்படை; முன்பகை - சூரபதுமன் முற்பிறவி முதலாக மேற்கொண்டிருந்த பகையை; யாவையும் முடித்து - அவனைக்கொன்று அறவே அழித்து, அவனுக்கு அப்பிறவியில் அளித்த வரத்தையும் நிறைவேற்றி; கூர்

எயிற்றன் - கூரிய பற்களையுடைய சிங்க முகாசுரன் முதலிய; பகையாவையும் - தேவர் பகைவர் அனைவரையும்; தடிந்து - அழித்து; பின் - பின்னர்; சந்ததம் - எக்காலத்தும்; பகைஇல்லதா - பகை இல்லையாமாறு; பெற்றி செய்ததாம் - வீரச்செயல் புரிந்தது.

விளக்கம் : குந்தம், பெற்றி செய்தது எனமாற்றுக.

பழம்பகை வரலாறு : சூரன், பதுமன் என்ற இருவரும், நான்முகன் ஊர்தியாய அன்னமும், திருமால் ஊர்தியாய கருடனும் அல்லல் அடையுமாறு, முறையே மயிலையும், சேவலையும் அவற்றின்மீது ஏவிக் கலகம் விளைவித்தனர்; நான்முகனும், திருமாலும் முருகனிடம் சென்று முறையிட்டனர்; உடனே முருகன், சூரன், பதுமன் ஆகிய இருவர்களையும், அவர்கள் கொடுந்தொழிலுக்குத் துணை புரிந்த மற்றும் இருவர்களையும் அழைத்து, "நீங்கள் செய்த இவ்வடாத செயலிற்காக, அரக்கர்களாய்ப் பிறந்து அழிக' எனச்சாபம் தந்தனன். சபிக்கப்பெற்ற அவர்கள், "ஐயனே! அரக்கர் பிறப்புற்றபோதும் உன் அன்பு அகலாமை வேண்டும்; உன் வேலால் எம்மைக்கொன்று, எம் உடலை மயிலாகவும், கோழியாகவும் ஆக்கி, வாகனமாகவும், கொடியாகவும் மேற்கொண்டு அருள்புரிய வேண்டும்" என வேண்டிக் கொண்டனர். பின்னர் அச்சாபத்தின் பயனும், சூரனும், பதுமனும், சூரபதுமனாகவும், ஏனைய இருவரும் சிங்கமுகனாகவும், தாரகனாகவும் பிறக்க, அவர்களை, முருகன், அவர்க்கு அருளியவாறே அழித்து ஆட்கொண்டான்.

கைலை முதலாயின காக்கும் சிறப்பு

17. "வெள்ளிமால் வரைசூழ் காப்பு, மிளிர்மணிச்
[சிகரக் காப்பும்,
பள்ளிமால் வரையின் காப்பும், பைம்பொனா
[பரணக் காப்பும்,
வள்ளிதாக் கைகொ ளென்று மகிழ்நீற்றுக்
[காப்புமிட்டுத்
தெள்ளிதா யுமையாடந்த செங்குந்தம் போலு
[முண்டோ!"

உரை : வெள்ளி மால்வரை - வெள்ளியங்கிரி யாகிய உயர்ந்த மலையை ; சூழ்காப்பும் - சூழ்ந்து நின்று காக்கும் காவலும் ; மிளிர் மணி - ஒளி பொருந்திய மாணிக்க மணிகள் மிக்க ; சிகரக் காப்பும் - கொடு முடிகளைக் கொண்ட மலையைக் காக்கும் காவலும் ; பள்ளிமால் வரையின் காப்பும் - பார்வதி தேவியாரின் அந்தப்புரமாய் விளங்கும் மகாமேரு மலையின் காவலும் ; பைம்பொன் ஆபரணக் காப்பும் - பசும் பொன்னாலான அணிவகைகளைக் காக்கும் காவலும் ; வள்ளிதா - திறமாக ; கைக்கொள் - மேற்கொள்ளுங்கள் ; என்று - என்று ; உமையாள் - உமையம்மையார் ; மகிழ் - மகிழ்ச்சியோடு ; நீற்றுக்காப்பும் இட்டு - திருநீற்றுக்காப்பு அமைத்து ; தெள்ளிதா - தெளிவாக ; தந்த - தரப்பெற்ற ; செங்குந்தம் போலும் உண்டோ ? - செங்குந்தப் படைபோல், சிறந்தது இவ்வுலகில் வேறுண்டோ!

விளக்கம் : தந்த செங்குந்தமாவது, தரப்பெற்ற செங்குந்தம். "மிளிர் மணிச் சிகரக்காப்பும்" என்பதை, "சிகரம் மிளிர் மணிக்காப்பும்" என மாற்றி, உச்சியின்

கண் பிரகாசம் பொருந்திய இரத்தினங்கள் இழைத்த கொலு மண்டபக்காப்பும்" எனக்கூறும் முறையும் பொருளும் அத்துணைச் சிறப்பில. திருநீற்றுக் காப்பிடலாவது, சிறுதெய்வங்களால் ஊறு நேராமை கருதித், திருநீற்றிற்கு மந்திரம் ஊட்டி, அத்திருநீற்றைப் பூசுதலாம்.

பார்வதிபால் படைபெற்ற பெருமை

18. "சலம்பிரி யாத சூட்டுச் சாவற்கே தனமெஞ்
[ஞான்றும்
வலம்பிரி யாத செவ்வேட் குறுதுணை யாக
[மன்னும்
குலம்பெற வந்தா ரென்றங் கொடியுமை தந்த
[வீட்டி
நலம்பெறு மிந்தக் குந்தர் பரிசுபோ ஞட்டி
[லுண்டோ ?"

உரை : சலம் பிரியாத - தன் இனத்துப் பிறிதொன்றைக்காணின், அதன்மீது பகை கொண்டு, அப்பகையால் பிறக்கும் கோபத்தை இயல்பாக உடையதும்; சூட்டு - உச்சிக்கொண்டையினை உடையதுமான ; சாவல் கேதனம் - சேவற்கொடி ; எஞ்ஞான்றும் - எக்காலத்தும் ; வலம் பிரியாத - தன் வலப்பக்கத்தினின்றும் பிரியாத ; செவ்வேட்கு - செவ்வேள் முருகனுக்கு ; உறுதுணையாக - உற்ற துணைவராகவும் ; மன்னும் - நிலைபெற்ற ; குலம் - தாங்கள் பிறந்த குந்தர் குலம்; பெற - எல்லாப் பெருமைகளையும் பெற்று விளங்கவும் ; வந்தார் என்று - வந்து தோன்றியவர் என்று மகிழ்ந்து ; அங்கொடி உமை - அழகிய மலர்க்கொடி போன்ற உமை அம்மையார்; தந்த - திருநீற்றுக் காப்பிட்டுக்

கொடுத்த; ஈட்டி - வேலாயுதத்தின்; நலம்பெறும் - நன்மையை என்றும் பெறுபவராய; இந்தக் குந்தர் - இச்செங் குந்தர்களின்; பரிசுபோல் - பெருமைபோல்; நாட்டில் உண்டோ? - இந்நாட்டில் வேறு பெருமை உளதோ? இல்லை.

விளக்கம்: தன் இனத்தையே பகைக்கும் சேவலைத் தன்வலம் பிரியாது வைத்துக்கொண்டவன் எனவும், இனப் பகைக்கும் சேவலையும், தன்இனம் பிரியாத் தம்பியரையும் ஒப்ப மதிக்கும் உயர்நீதியுடையான் எனவும் முருகன் புகழ் கூறியவாறு உணர்க. உலகம் வாழத் தொண்டாற்றலும், தன்குடிவளர வாழ்தலும் விழுமியோர்க்கே வாய்க்கும்; அவ்விழுமிய பண்புகள் இரண்டையும் ஒருங்கே உடையவர் குந்தர்; அப்பண்புகளைப் பார்வதியும் கண்டுபாராட்டிப் பரிசளிக்கும் அளவு பெருகப் பெற்றிருந்தவர் குந்தர் எனக் குந்தர் பெருமையும் பாராட்டப் பெற்றுளது காண்க; துணையாகவும், குலம் பெறவும் வந்தார் என்க.

அறுபடை வீட்டினும் அமர்ந்த குந்தம்

19. "பருப்பத மேரகம் பரங்குன் றம்பழம்
பொருப்பத மாவினன் குடிசெந் திற்பொது
விருப்பெனக் குன்றுதோருட லாமெனும்
திருப்பதி தமிலமர் செய்ய குந்தமே!"

உரை: ஏரகப் பருப்பதம் - திருவேரகம் என்னும் மலையும்; பரங்குன்றம் - திருப்பரங்குன்றமும்; பழம் பொருப்பதம் - பழமுதிர்சோலையும்; ஆவினன்குடி - திருவாவினன் குடியும்; செந்தில் - திருச்செந்தூரும்; குன்று

தோருடலாம் - குன்று தோருடலும்; எனும் - என்று சொல்லப்பட்ட; திருப்பதி தமில் - முருகனுக்குரிய ஆறு படை வீடுகளாய, இவ்வழகிய நகரங்களில்; பொதுவிருப் பென - எமக்கு ஒத்த அன்பே உளது எனக்கூறி; அமர் - விரும்பி வீற்றிருக்கின்ற; செய்யகுந்தமே - செங்குந்தமே.

விளக்கம்: ஏரகப் பருப்பதம் எனமாற்றுக. திருப்பதி தமில் என்புழி, "தம்" சாரியை. "பொது விருப்பென அமர்" எனமாற்றிப் பொருள் கொள்க, திருவேரகம் - சுவாமிமலை; பழமுதிர்சோலை - கள்ளழகர் கோயில்; திருவாவினன்குடி - பழனி. ஆறுபடை வீட்டினும் அமர்ந்து முருகனைப் போன்றே, அன்பர் வழிபாட்டைப் பெறும் பெருமை வாய்ந்தது குந்தம் என அதன் பெருமை கூறிய வாறு.

செங்குந்த வழிபாட்டுச் சிறப்பு

20. "தேடுவார்; வலமாய் வந்து தெரிசிப்பார்;
[சென்னி மீது
சூடுவார் மலரே தூவித்; தொழுதகை கூப்பி
[நிற்பார்;
பாடுவார் காவென் றெம்மைப்; பரிவினு னந்தமாக
ஆடுவார்; குகன்னகச் செவ்வேற் கருந்துணைக்
[குந்தமென்றே"

உரை: குந்தம் - செங்குந்தப்படை; குகன் கை - முருகன் கையின்கண் உள்ள; செவ்வேற்கு - பகைவர் குருதியால் சிவந்த வேலாயுதத்திற்கு; அருந்துணை என்றே - கிடைத்தற்கரிய துணையாகும் என்று; தேடுவார் - உலகில்

வாழ்வார் அனைவரும், அக்குந்தம் இருக்கும் இடந்தேடி அலைவர் ; வலமாய் வந்து தெரிசிப்பார் - குந்தம் இருக்கும் இடம் சென்று, அதை வலம் வந்து, தம் கண்களால் கண்டு மகிழ்வார்; மலரே தூவி - மலர் தூவி வழிபாடாற்றி; சென்னி மீது சூடுவார் - தம்தலைமீது அணிந்து கொள்வர்; தொழுது- திருவடியில் வீழ்ந்து வணங்கி ; கை கூப்பி நிற்பார் - இரு கைகளையும் குவித்து எதிரே பணிந்து நிற்பர் ; எம்மைக்கா என்று பாடுவார் - துயர்போக்கி எம்மை ஆட்கொள்வாய் என்று அதன் புகழைப் பாராட்டுவர் ; பரிவின் - அன்பால் ; ஆனந்தமாக ஆடுவார் - மகிழ்ந்து மெய்ம் மறந்து ஆடுவர்.

விளக்கம் : மலரோடு சேர்ந்த நாரும் மணம் பெறுதல் போல், முருகன் கைவேலொடு சேர்ந்தமையால், குந்தமும் பாராட்டப் பெற்றது என்று கொள்ளற்க. அது முருகன் பெருமையாகுமே யன்றிக், குந்தத்தின் பெருமை ஆகாது ; முருகன் கையில் இருக்கும் வேலாயுதம், பெறுதற்கரிய பெருந்துணையாகக், குந்தத்தைப் பெற்றது என்றமையால், குந்தத்தின் பெருமையுணர்ந்து, உலகோர் பாராட்டினர் எனக்கொள்க ; அவ்வாறு கொள்வதே குந்தத்திற்குப் பெருமை அளிக்கும்.

காளியின் கைத்தாளம்பறித்த பெருமை

21. "ஆலங் காட்டினி லரனுட னன்றுவா தாடும்
கோலங் காட்டிய காளிதன் கொற்றம்போய் [வெள்கப்
பாலங் காட்டிய பன்மணித் தாளமே பறித்துச்
சீலங் காட்டிய குந்தர்நற் பெருமையார் [தெரிப்பார் ?"

உரை : ஆலங்காட்டினில் - திருவாலங்காடு எனும் ஊரில்; அரனுடன் - சிவபெருமானுடன்; அன்று - முன்னொரு காலத்தில்; வாதாடும் - வாதாடுகின்ற; கோலங் காட்டிய - நடனக்கோலத்தைக் காட்டிய; காளி - காளியானவள்; தன் கொற்றம்போய் வெள்க - தன் வெற்றி கெட்டு நாணுமாறு; பாலம் காட்டிய - அக்காளியின் கையிற்கிடந்து ஒளி வீசிய; பன் மணித்தாளமே - பல மணிகளால் ஆன தாளத்தையே; பறித்து - பறித்துக் கொண்டு; சிலம் காட்டி - தம் பெருமையை உலகத் தவர்க்குக் காட்டிய; குந்தர் - செங்குந்தர்களின்; நற் பெருமை - நல்ல பெருமையை; தெரிவிப்பார் யார் - தெளிவாக எடுத்துரைக்கவல்லார் யார் உளர்? ஒருவரும் இல்லை.

விளக்கம் : இறைவனையே எதிர்த்து வாதாடவல்ல தறுகண்மையுடைய காளியின் கொட்டத்தையே அடக்கியவர் குந்தர் என அவர் புகழ் பாராட்டியவாறு காண்க; நடனமாடுவார்க்கு வெற்றித் துணையாவது அவர் கைத் தாளமே ஆதலாலும், தாளம் இழந்தவர் ஆடல் புரிவது ஆகாது ஆதலாலும், அவள் தோல்வி காண விரும்பிய செங்குந்தர், அவள் கைத்தாளத்தைப் பறித்துக்கொண்டனர்; இச்சிறப்புக் கருதியே, "தாளமே" எனத் தாளத்திற்குச் சிறப்பு ஏகாரம் கொடுத்துக் கூறினார். இச்செயல், குந்தரின் போர்நுணுக்க அறிவைப் புலப்படுத்தியவாறும். பெருமை கூற அரிது என்பார், "தெரிப்பார் யார்" என்றார்.

பகைவர் உயிரை வாழ்வித்த பெருமை

22\. "செங்களம் பொருதிய திருந்த லாருர
வங்கமே மண்மிசை யாக்கி யாவியைச்
செங்கதிர் வழியிடைச் செலுத்தித் தேவர்கள்
தங்களை வான்புகத் தரும்செங் குந்தமே."

உரை : செங்களம் - வீரர்களின் குருதியால் சிவந்து தோன்றும் போர்க்களத்தில்; பொருதிய - வந்து தன்னோடு எதிர்த்துப் போராடிய; திருந்தலார் - பகைவர்களாகிய அவுணர்களின்; உர அங்கம் - உரமிக்க உடலை; மண் மிசை ஆக்கி - மண்மீது வீழ்த்தி; ஆவியை - அவர்கள் உயிரை; செங்கதிர் வழி - ஞாயிற்றின் துணையால்; இடைச்செலுத்தி - இடைநில உலகாகிய வீட்டுலக வாழ் வில் இருக்கப் பண்ணி; தேவர்கள் தங்களை - தேவர்களை; வான்புக - வானுலகம் புகுந்து வாழ; தரும் செங்குந்தமே - துணைபுரியும் செங்குந்தப் படையே.

உரம், அங்கம், உரவங்கம் என்றாயிற்று; பழியுடைமையால் பகைவர் உடலை மட்டும் மண்ணுலகத்தில் விடுத்து, அவர் உயிரை வீட்டுலக வாழ்வில் இருத்திற்று எனக் கொள்க.

தேவர்களின் முடிபறித்த பெருமை

23. "பரகதி வேள்வி பண்ணு மிருடிதன் பான்மை பாரா
வரகதி தந்தை யேவு மமரரை மடிய நூறி
யிரதமோ டிவுளி வேழ மியாகதா னத்துக்கீந்து
சிரமணி மகுடம் பெற்ற செங்குந்தர் போலு
[முண்டோ ?"

உரை : பரகதி வேள்வி பண்ணும் - வீட்டுலக வாழ் வளிக்கும் வேள்வியைச் செய்யும்; இருடிதன் - மூதண்ட முனிவனுடைய; பான்மை - உள்ள உறுதியை; பாரா - உணராமல்; வரகதி தந்தை - வானுலக வாழ்வாகிய மேலான வாழ்வளிக்கும் தந்தையாகிய நான்முகன்; ஏவும் -

அம்முனிவர் வேள்வியை அழிக்க ஏவிய ; அமரரை - தேவர்களை ; மடிய நூறி - மடியக்கொன்று ; இரதமோடு இவுளி வேழம் - களத்தில் அவ்வமரர்கள் விட்டோடிய தேர், குதிரை, யானை முதலாயினவற்றை ; யாகதானத்துக்கு ஈந்து - அம்முனிவன் வேள்விக்கு, வேள்விக் கொடையாகக் கொடுத்து ; சிரம் அணி மகுடம் - அவ்வமரர்களின் தலைக்கு அணிசெய்து கிடந்த மணிமுடிகளை ; பெற்ற - கைப்பற்றிக் கொண்ட ; செங்குந்தர் போலும் உண்டோ - செங்குந்தர்களைப் போலச் சிறந்தவர் இவ்வுலகில் உளரோ ? இல்லை.

விளக்கம் : செங்குந்தரின் வேள்விப்பற்றும், வீரமும்; கொடைக் குணமும் கூறப்பட்டன. பாரா : பார்த்து என்னும் செய்து என்ற வாய்பாட்டு வினையெச்ச எதிர்மறை, அது, ஏவும் என்னும், தன்வினை முதல் வினைகொண்டு முடிந்தது ; இனி, பாரா என்பதை, ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சமாக்கி, தந்தை எனும் பெயரோடு முடிப்பதும் ஒன்று ; இரு வழியிலும் பொருள் ஒன்றே.

வேள்விகாத்த வரலாறு : மூதண்டமுனிவர் என்பார் வீட்டுலக வாழ்வை வேண்டி, ஒரு பெரிய வேள்வி செய்தார் ; அவ்வேள்வியின் பெருமை கண்ட நான்முகன், அம்முனிவர்மீது பொறாமை கொண்டான். அதனால், அவ்வேள்வியை அழிக்கத் துணிந்தான் ; சூழ்ச்சி பல செய்தான் ; ஒன்றும் பலனளிக்கவில்லை ; அந்த அளவிலும், அவர் உறுதியை உணர்ந்திலன்; இறுதியாக, அமரர் துணை பெற்று, படையோடுவந்து, முனிவர் வேள்வியை வளைத்துப் போரிடத் துணிந்தான் ; முனிவர் உறுதியும், நான்முகன் துணிவும் கண்ட முருகன், நவவீரரை, முனிவர்க்குத் துணையாக அனுப்பினான். பணிமேற்கொண்டு வந்த நவவீரர், தேவர்களோடு போரிட்டு வென்றனர் ; தம் படைகளை இழந்து, தேவர்கள் தோற்று ஓடினர் ; அவர்கள் விட்டுச்

சென்ற செல்வங்களை, நவவீரர்கள், முனிவர்க்கு வேள்வித் தானமாக நல்கினர்; பின்னர், அவ்வெற்றிக்கறிகுறியாக, தோற்ற அமரர்களின் தலைமுடிகளைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர்; நவவீரர் துணையால், மூதண்ட முனிவர் வேள்வி நன்கு முடித்து, நாடிய பயனைப் பெற்றார்.

சம்பாதிக்கு அமுது அளித்த சிறப்பு

24. "அம்பாழி மூழ்கியொரு கற்பமெலாம்
கிடைக்கினுமென்? அழலி னின்று
வெம்பாமே வெளிக்காலுண் டுட்காலை
வெளியில்விடா திருந்தா லென்னே?
வம்பாரு மிதழியணி வேணியனார்
வேதமலை வலம்வந் தீண்டுஞ்
சம்பாதிக் கமுதளிக்குஞ் சயக்குந்தம்
போல்வினவத் தாரா வன்றே."

உரை: அம்பாழி மூழ்கி - கடல் நீருள் மூழ்கி; ஒரு கற்பமெலாம் - பலகோடி ஆண்டுக்காலமெல்லாம்; கிடைக்கினும் - தவம் செய்திருக்கப் பெறினும்; என் - அதனால் யாதுபயன் உண்டாம்; அழலின் நின்று - நான்கு பக்கத்திலும் தானே மூட்டிய அழலும், மேலே ஞாயிறும் ஆகிய ஐந்து அழலும் தன்னை வருத்த, அவற்றின் இடையே நின்று; வெம்பாமே - உடல் கருகாமல்; வெளிக்கால் - வெளியே உலாவும் காற்றை; உண்டு - உணவாக உட்கொண்டு; உட்காலை - உடலின் உள்ளே நின்ற காற்றை; வெளியில் விடாது - வெளியே விடாது அடக்கி; இருந்தால் என்னே - தவமேற்கொண்டிருந்தால், அதனால் யாது பயன்

உண்டாம்? வம்பு ஆரும் - அத்தவநெறிகள், நறுமணம் நிறைந்த; இதழி அணி - கொன்றை மலர் அணிந்த; வேணியனுர் - சடை முடியினை உடைய; வேதகிரி நாதர்; வீற்றிருக்கும்; வேதமலை - திருக்கழுக் குன்றத்தை; வலம் வந்து - வலமாக வந்து; ஈண்டும் - அடையும்; சம்பாதிக்கு- சம்பு, ஆதி என்னும் இரு கழுகுகளுக்கும்; அமுது அளிக்கும் - உணவளித்து உயர் கதிக்கு அனுப்பும் - சயக்குந்தம்போல் - வெற்றிச் சிறப்பு வாய்ந்த குந்தப் படைபோல்; வினவத் தாராவன்றே - பயன் கேட்கக் கேட்டபயனைக் கேட்டவுடனே தாராவாம்.

விளக்கம்: கழுகுகளுக்கு உணவளிக்கும் நிகழ்ச்சி, திருக்கழுக்குன்றில் இன்றும் நடைபெறுகிறது. இன்று உணவளிப்பவர் பிறரேயாயினும், பண்டு அளித்தவர் செங்குந்தராவர் என்பதை இச்செய்யுளால் உணர்க. கேட்டபயனைக் கேட்டபோதே தரவல்ல குந்தம், கற்பகோடிகாலம் காத்திருந்தாலும் பயன் தாராத் தவநெறியினும் சிறப்புடைத்து என்பது கருத்து.

சிவநெறி வளர்த்த சிறப்பு

25. "உருக்கொடு பணியா தாரை. உளத்திலெங்
[தெழுத்தை உன்னிப்
பெருக்கொடு தவளநீற்றைப் பேணியே
[அணியா தாரைத்.
தருக்கொடு நின்று கண்ணீர்த் ததும்ப
[முன்னுடா தாரைத்,
திருக்கோயில் வலம் வாராரைச். சினத்
[தோடு பொருஞ் செங்குந்தம்."

உரை; உருக்கொடு - மனவுருக்கத்தோடு; பணியா தாரை - சிவபெருமானை வணங்காதவரையும்; ஐந்து எழுத்தை - நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை; உன்னி - நினைந்து; தவள நீற்றை - தூயவெண்ணிறம் வாய்ந்த திருநீற்றை; பெருக்கொடு பேணியே - பெரிதும் விரும்பி; அணியாதாரை - தம் மேனியில் அணிந்து கொள்ளாத வரையும்; தருக்கொடு - தவச்செருக்கால்; நின்று - பணியாது நின்று; கண்ணீர் ததும்ப - கண்கள் நீர்மல்க; முன் ஆடாதாரை; இறைவன் முன் மெய்ம்மறந்து திரு நடனம் புரியாதாரையும்; திருக்கோயில் - இறைவன் வாழும் திருக்கோயில்களை; வலம் வாராரை - வலம் வந்து வணங்காதவரையும்; சினத்தொடு - கோபத்தால்; பொரும்; கொன்று அழிக்கும்; செங்குந்தம் - செங்குந்தப் படையே!

விளக்கம்: செங்குந்தம், அண்மைவிளி; செங்குந்தம் பொரும் எனமாற்றிச் செங்குந்தத்தை எழுவாயாக்கலும் ஒன்று. குந்தத்தை ஆகுபெயராக்கி, அக்குந்தப் படையேந்திய செங்குந்தர் சிறப்பாக இவற்றைக் கொள்க. இதனால் அவர்கள் சமய உணர்வு கூறப்பட்டது.

சிவலோக வாழ்வளிக்கும் சிறப்பு

26. "கூவிளை யிதழி தும்பை கொண்டருச் சித்த
[பேர்க்கும்.
மூவர்தம் பாடலோதி முன்னின்று பணிந்த
[பேர்க்கும்.
ஆவலோ டைந்தெழுத்தை யகத்துள்ளே
[நினைந்த பேர்க்கும்
தேவர்நா டாள வைக்குந் திருக்கைவேல்
[துணைச்செங் குந்தம்."

உரை : திருக்கைவேல் - முருகப் பெருமானின் அழகிய கையின்கண் விளங்கும் வேலாயுதத்திற்கு; துணை - துணையாகவந்த; செங்குந்தம் - செங்குந்தப் படை; கூவிளை - வில்வமும்; இதழி - கொன்றையும்; தும்பை - தும்பையும்; கொண்டு - கைக்கொண்டு; அருச்சித்த பேர்க்கும் - சிவனை வழிபட்ட அடியார்களையும்; மூவர்தம் பாடல் ஓதி - ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்கள் பாடிய தேவாரப் பாடல்களைப் பாடி; முன்நின்று - சிவபெருமான் முன்னே நின்று; பணிந்த பேர்க்கும் - வணங்கிய அடியார்களையும்; ஐந்தெழுத்தை - நமசிவாய என்ற ஐந்து எழுத்தாலாய மந்திரத்தை; ஆவலோடு - உள்ளார்வத்துடன்; அகத்துள்ளே - தம் மனத்திற்குள்ளாகவே; நினைந்த பேர்க்கும்- நினைந்து வழிபட்ட அடியார்களையும்; தேவர் - சிவபெருமானுக்குரிய; நாடாளவைக்கும் - நாட்டை ஆளுமாறு செய்யும்.

விளக்கம் ; அருச்சித்தல், மெய்வழிபாடு; பாடல் ஓதிப்பணிதல், மொழிவழிபாடு; ஐந்தெழுத்தை நினைத்தல் மனவழிபாடு. மெய்வழிபாடு, முதற்படியிலும், அதிற்றேர்ந்த பின்னர், மொழி வழிபாடு இரண்டாம் படியிலும், அதிலும் தேர்ந்த பின்னர் மனவழிபாடு இறுதிப் படியிலும் வேண்டுவதாதலின், அவற்றை அம்முறையில் வைத்தார். மூவரும் தேவர் நாடாள்வர் எனவே, இம்மூன்று நெறியிலும், எந்நெறியையும் மேற்கொள்ளலாம் என அறிக. வழிபாட்டில் ஆர்வம் இருக்க வேண்டுமாதலின், "ஆவலோடு நினைந்தபேர்க்கு" என்றார். முருகன் கைவேலுக்குத் துணைசெய்யும் குந்தம், அடியார்களை உயர்நெறிக்கு உய்விக்கவும் துணைசெய்யும் என்க.

குந்தத்தின் ஒப்பு உயர்வு அற்ற சிறப்பு

27. "ஆலமார் மிடற்றூராடு மாடலே யாடல்; அம்மை
ஏலவார் குழலாளங்கைத் தாளமே தாளம்; ஏந்தும்
சூலமா குவதன் னூன்கைச் சூலமே சூலம்; மற்றிக்
கோலம்வாழ் வீரர் கையிற் குந்தமே குந்தமாகும்."

உரை : ஆலம் - ஆலகால விஷத்தை; ஆர் - உண்ட; மிடற்றூர் - கழுத்தினை உடைய சிவபெருமான்; ஆடலே - உலகமெலாம் அழியும் ஊழிக் காலத்தில் ஆடும் நடனமே; ஆடல் - நடனம் எனச் சிறப்பித்துக் கூறத்தக்கதாம்; அம்மை - அனைத்துயிர்க்கும் தாயாகிய; ஏலவார்குழலாள் - மயிர்ச்சாந்து பூசிய நீண்ட கூந்தலையுடைய உமாதேவியார்; அங்கைத் தாளமே - இறைவன் ஆடும் அவ்வாட்டத்திற் கேற்பத் தம் அழகிய கைகளால் கொட்டும் தாளமே; தாளம் - தாளம் எனச் சிறப்பித்துச் சொல்லத் தக்கதாம்; ஏந்தும் சூலம் ஆகுவது - படைத்துணையாய் ஏந்திக் கொள்ளும் சூலப்படையாவது; அன்னூன் - அச் சிவபெருமானுடைய; கைச்சூலமே - கையின்கண் உள்ளமுத்தலைச் சூலமே; சூலம் - சூலப்படை எனச் சிறப்பித்துச் சொல்லத் தக்கதாம், அதுபோல; கோலம் வாழ் இவ்வீரர் - அழகு வீற்றிருக்கும் இந்நவ வீரர்களின்; கையிற்குந்தமே - கையில் விளங்கும் குந்தப் படையே; குந்தம் ஆகும் - குந்தம் எனச் சிறப்பித்துச் சொல்லத்தக்க குந்தமாம்.

விளக்கம் : குந்தம் எனச் சிறப்பித்துச் சொல்லப் படுவது, நவவீரர் கைக்குந்தமே; பிற குந்தங்கள் ஆகா என அதன் ஒப்பும் உயர்வும் அற்ற தன்மை கூறப்பட்டது. இது எடுத்துக்காட்டணி.

பாடல்பெற்ற பெருமை

28. "ஆதிநா ளுமையவ ளளித்த குந்தமே!
சா திநா லுவப்புடன் தலைக்கொள் குந்தமே!
கா திமே வலரையும் கல்லும் குந்தமே!
கோ தினம் பாடலே கொள்ளும் குந்தமே!"

உரை : ஆதிநாள் - பண்டு; உமையவள் - உமையம்மையார்; அளித்த - நவவீரர்களுக்குக் கொடுத்த; குந்தமே - குந்தம் எதுவோ, அக்குந்தமே; நால் சாதி - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வேறு குலத்தவரும்; உவப்புடன் - மகிழ்ச்சியோடு; தலைக்கொள் - தலைமேல்கொண்டு வணங்கும்; குந்தமே - குந்தம் எதுவோ அக்குந்தமே; மேவலரையும் - தன்னை வணங்காதவரை; காதி - சினந்து; கல்லும் - உலகத்தில் வாழா வண்ணம் அறவே அழிக்கும்; குந்தமே - குந்தம் எதுவோ, அக்குந்தமே; கோதுஇல் - சொற்குற்றம், பொருட் குற்றம், அணிக்குற்றம் என்ற எவ்விதக் குற்றமும் இல்லாத; நம் பாடலே - நம் பாராட்டு நூல்களை; கொள்ளும் - ஏற்றுக் கொள்ளும்; குந்தம் - குந்தமாம்.

விளக்கம் : குந்தமே குந்தம் என முடிக்க, குந்தமே நான்கிலும். முன்னவை மூன்றிலும் உள்ள ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம், ஈற்றின்கண் உள்ளது அசை, சாதியாரையும், பாடல், அப்பாடலால் ஆன நூலையும் உணர்த்தும். உமையவள் குந்தம் அளித்தது, வேண்டிய வரை வாழ்வித்து, வேண்டாதாரை அழிக்கவே ஆகும்; அவள் அளித்த குந்தம் அவ்விரு பணிகளையும் குறைவற நிறைவேற்றினமையால் பாடிப் பாராட்டப்பெற்றது என்

பார், உமை அளித்த குந்தம், நாற்குலத்தவர் உவக்கும் குந்தம், பகைவரைப் பாழ் பண்ணும் குந்தம், பாடல் பெறும் குந்தம் என்று கூறினார்.

கொடைப் பெருமை

29. ***"கருதலர் பொடிபடக் கருதும் குந்தமே,***
விருதுடைச் சூர்முடி வெட்டும் குந்தமே,
பொருதனிப் புலிக்கொடி புனையும் குந்தமே,
தருதலத் தருவெனத் தருஞ்செங் குந்தமே."

உரை : கருதலர் - பகைவர்; பொடிபட - அழியுமாறு; கருதும் - அதற்கேற்ற வழிவகைகளை ஆராய்ந்து மேற் கொள்ளும்; குந்தமே - குந்தம் எதுவோ, அக்குந்தமே; விருது உடை - வெற்றிப் புகழ்களைக்கொண்ட; சூர் - சூர பதுமன் முதலான அவுணர்களின்; முடிவெட்டும் - தலைகளை வெட்டி அழிக்கும்; குந்தமே - குந்தம் எதுவோ அக் குந்தமே; பொரு - போர்க்குணம் வாய்ந்த; தனி - ஒப்பற்ற; புலிக்கொடி - சூரபதுமனுடைய புலிக் கொடியை; புனை யும் - தனக்குரிய கொடியாகக் கொள்ளும்; குந்தமே - குந்தம் எதுவோ, அக்குந்தமே; தருதல் - பொருள்வேண்டித் தன்னை அடைந்தவர்களுக்குக் கொடுப்பதில்; தருஎன - வேண்டிய பொருளை வேண்டியவாறே தரவல்ல கற்பகம் முதலிய தருக்களைப்போல்; தரும் - கொடுக்கும்; செங் குந்தம் - செங்குந்தமாம்.

விளக்கம் : பாட்டின் முடிவும், ஏகாரப் பொருளும் மேற்பாட்டில் கூறியவாறே கொள்க. குன்றாக் கொடை வளம் உடையார்பால், பகைவரைப் பாழ்செய்யவல்ல வழி

களை ஆராய்ந்து காணும் அறிவுத் திறனும், ஆராய்ந்து கண்டவாறே அழிக்கும் செயல்திறனும், அழித்து அவர் பொருள்களைக் கைப்பற்றிய பொருள் திறனும் அமைதல் வேண்டும்; அவை அனைத்தும் குந்தர்பால் குடிகொண்டிருந் தன என்பார், அத்திறங்களை, அவர்கைப் படைமீது ஏற்றிக் கூறினார்.

துணை அளிக்கவும் துணைபெறவும் வல்ல பெருமை

30. "கைலைமால் வரையையும் காக்கும் குந்தமே,
அயிலைநற் றுணையென வாக்கும் குந்தமே,
வெயிலைமன் மணிகளின் மிளிரும் குந்தமே,
மயிலைவா கனமென வாக்கும் குந்தமே."

உரை: குந்தம் - செங்குந்தம்; கைலைமால் வரையை யும் - உயர்ந்த கைலைமலை முதலாம் உலகங்களையெல்லாம்; காக்கும் - காத்து நிற்கும்; குந்தம் - செங்குந்தம்; அயிலை - முருகன் கையின்கண் உள்ள வேலாயுதத்தை; துணை என ஆக்கும் - தனக்கு உற்ற துணையாக ஆக்கிக்கொள்ளும்; குந்தம் - செங்குந்தம்; வெயிலைமன் - பேரொளி நிலைபெற்ற; மணிகளின் - நவமணிகளைப்போல்; மிளிரும் - எப்போதும் ஒளிவீசிக் கிடக்கும்; குந்தம் - செங்குந்தம்; மயிலை - சூர பதுமனாகிய மயிலை; வாகனமென - முருகனுக்கு வாகன மாக; ஆக்கும் - கொடுக்கும்.

விளக்கம்: ஏகாரம் நான்கும் ஈற்றசை. குந்தம் காக்கும்; குந்தம் ஆக்கும்; குந்தம் மிளிரும்; குந்தம் ஆக்கும் என மாற்றுக. இனிச் செய்யுள் நயம் கருதிக் குந்தம் நான்குமுறை கூறப்பட்டுளது; ஆகவே, குந்தம்,

காக்கும், ஆக்கும், மிளிரும், ஆக்கும் எனக் கோடலும் பொருந்தும். வெயிலே என்புழி, ஐ சாரியை. கைலைவரையை யும் காக்கும் ஆற்றல் வாய்ந்த அது, அதனால் தருக்குற்று விடாது என்பார், அது அயிலைத் துணையெனக் கொண்டது என்றார்; துணைபெறுங்கால், தன்னினும் உயர்ந்த தன் துணையையே பெறவேண்டுமாதலின், அது முருகன் கை அயிலை, சத்தியே உருவாய் வந்த அயிலைத் துணையெனக் கொண்டது என்றார்; அது சிறிது பொழுதும் சோம்பி யிராது என்பார், எக்காலமும் தொழிற்பட்டு, அதனால் ஒளிவீசிக்கிடக்கும் என்றார்; இவ்வாறு ஓயாப்பணி ஆற்றும் உயர்வு அதன்பால் இருந்தமையால், அது, தன் தலைவனுக்கு வேண்டும் வாகனத்தைத்தான் தேடிஅளிக்கும் ஆற்றலைப் பெற்றது என்பார், அது முருகனுக்கு மயிலை வாகனமாக்கிய சிறப்பை எடுத்துக் கூறினர்.

முதலியர் என்ற பட்டம்பெற்ற பெருமை

31. "இந் திர னயன்மா றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினாற் சூல மழுப்படை யத்த னார்க்கு
முந்திய நாமந் தா னு முதலிய ராகை யாற்செங்
குந்தர்சந் ததிக்கு மப்பேர் முதலியரென் று கூறும்."

உரை: இந்திரன், அயன், மால், தேவர் யாவர்க்கும் - இந்திரன், நான்முகன், திருமால் முதலாம் தேவர்கள் அனை வருக்கும்; முதன்மையாக - முதல்வனாக; வந்த - தோன் றிய; பான்மையினால் - தன்மையால்; சூல மழுப்படை - சூலத்தையும் மழுவையும் படைக்கலங்களாகக் கொண்ட; அத்தனார்க்கு - தலைவனாய சிவபெருமானுக்கு; முந்திய நாமம் தானும் - முதலில் வழங்கிய பெயர்; முதலியர் ஆகை யால் - முதலியர் என்பதே ஆகையால்; செங்குந்தர்

சந்ததிக்கும்; அக்கைலாய மரபில் வந்த செங்குந்த மரபினர்க்கும்; முதலியர் என்று - முதலியர் என்று; அப் பேர் கூறும் - உலகம் அப்பெயரையே இட்டு வழங்கும்.

விளக்கம் : செங்குந்தர்க்கு, முதலியர் என்ற பட்டப் பெயர் வந்தமைக்குக் காரணம் கூறியவாறு; முதலியர்; முதலியார் என வழங்குகிறது.

முசுகுந்தனுக்குப் படைத்துணை அளித்த பெருமை

32. "முந்தை நோன்பினுன் முருக வேண்முசு
குந்த னுக்கொன்பான் குமர ரைத்தர
வந்த வீரரிவ் வகிலம் வென்றிசை
தந்த குந்தரித் தகுசெங் குந்தமே."

உரை : முருகவேள் - முருகப் பெருமான்; முசுகுந்தனுக்கு - முசுகுந்தச் சோழ மன்னனுக்கு; முந்தை நோன்பினுல் - அவன் முற்பிறவியில் செய்த நோன்பின் பயனுல்; ஒன்பான் குமரரை - தம் தம்பியராகிய நவவீரர்களைத்; தர - படைத்துணைவர்களாகத் தர; வந்த வீரர் - அவ்வாறு வந்த வீரர்கள்; இவ் அகிலம்வென்று - இம் மண்ணுலகில் உள்ள அரசர்களையெல்லாம் வென்று; இசைதந்த - முசுகுந்தச் சோழனுக்கு மன்னர் மன்னன் என்னும் புகழை அளித்த; குந்தர் - குந்தவீரர் ஆவர்; இத்தகு செங்குந்தமே - அவ்வீரர் வழியினரே, இந்தப் பெருமை பொருந்திய செங்குந்தர்.

விளக்கம் : குமரன் தரவந்த வீரர், இசை தந்தகுந்தராவர்; அவரே செங்குந்தர் என, அவரே என்பதை வருவித்து முடிக்க, செங்குந்தம் ஈண்டு, அச்செங்குந்தப் படை தாங்கிய செங்குந்தரைக் குறித்தது.

செங்குந்தர் முசுகுந்தனுக்குத் துணைசெய்த வரலாறு: கருவூரைத் தலைநகராகக் கொண்டு சோணாடாண்டிருந்த முசுமுகச் சோழன், தன் முன்னோர்களைப் போலவே, பேரரசு அமைத்து, மன்னர் மன்னனாய் வாழ விரும்பினான்; தன் ஆசையை நிறைவேற்றித் தரவல்ல துணைவர்களைப் பெறமாட்டாது வருந்தினான். பின்னர், வசிட்டமாமுனிவர் வழிகாட்டியவாறு முருகனை நோக்கி சஷ்டி நோன்பு மேற் கொண்டான். அவன் வழிபாடேற்று வந்த முருகன், நவவீரர்களாகிய தன் தம்பியரைப் படைத்துணைவராக அளித்தான். நவவீரர்கள் மக்கள் வடிவம் தாங்கி மண்ணுலகில் வந்து, குந்தப்படை ஏந்தினமையால், "செங்குந்தர்" எனும் பெயரோடு வாழ்ந்தனர்; சோழர்குல மகளிரை மணந்து தம் குடி வழியை வளர்த்தனர்; பின்னர், மன்னன் விருப்பத்தை நிறைவேற்றத் துணிந்து பெரும் படையோடு புறப்பட்டு, அரசர்கள் அனைவரையும் வென்று, அவனுக்கு "மன்னர் மன்னன்" எனும் சிறப்புப் பெயரை அளித்து, தமக்குப் "படைத்துணைவர்" எனும் பட்டப் பெயரைப் பெற்றுப் பெருமை யுற்றனர்.

தியாகரைத் திருவாரூர்க்குக் கொணர்ந்த சிறப்பு

33. "விண்டு மார்பத் திடையிருத்தி வேலைக்கௌரி
[பணிமாறப்
பண்டுபூசித் திருங்காலை யாகண்டலன் போய்ப்
[பாற்கடலின்
வண்டுழாய்மா யனைவணங்கி வானிற்பழிச்சுந்
[தியாகரைமேற்
கொண்டுபோந்து பாரின்முசு குந்தற்குதவும்
[செங்குந்தம்."

உரை : பண்டு - தொல்லூழிக் காலத்தில்; விண்டு - திருமால்; மார்பத்திடை இருத்தி - தியாகராயரைத் தம் மார்பின்கண் எழுந்தருளுவித்து; வேலைக் கௌரி - திருப் பாற் கடலில் தோன்றிய திருமகள் ; பணிமாற - தொண்டு செய்ய; பூசித்திடுங்காலை - வழிபாடுசெய்து வாழ்ந்திருக்கும் காலத்தில் ; ஆகண்டலன் - இந்திரன் ; போய் - சென்று ; பாற்கடலின் வண்துழாய் மாயனை - பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பைந்துழாய் மாலை அணிந்த திருமாலை ; வணங்கி - வணங்கி ; வானில் பழிச்சும் தியாகரை - பெற்றுக்கொண்டுபோய், வானுலகத்தில் வைத்து வழிபடும் தியாகரை ; கொண்டு போந்து - அவ்விந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்டுவந்து ; பாரில் - இம்மண்ணுலகில் ; முசுகுந்தற்கு - முசுகுந்த சோழ மன்னனுக்கு; உதவும் - கொடுக்கும் ; செங்குந்தம் - நவவீரர்கையில் தாங்கிய செங்குந்தப்படை.

விளக்கம் : பண்டு, விண்டு பூசித்திடுங்காலை, ஆகண்டலன் வணங்கி (பெற்று) பழிச்சும் தியாகரை, செங்குந்தம் கொண்டுபோந்து முசுகுந்தற்கு உதவும் எனக் கொண்டு முடிக்க.

தியாகரைக் கொணர்ந்த வரலாறு : திருமால் வழி பட்டுவந்த தியாகராயரை, இந்திரன் பெற்றுக்கொண்டு போய்த் தன் பொன்னுலகில் வைத்துப் பூசித்துக்கொண் டிருந்தான் ; அக்காலை, வலன் என்னும் அவுணன், அவனை வந்தெதிர்த்தான் ; அவனை வெல்ல இந்திரன், முசுகுந்தச் சோழன் துணையை வேண்டினுன் ; முசுகுந்தன், இந்திர னுக்குத் துணையாக வீரவாகு தேவரை அனுப்பினுன் ; வீரவாகு தேவர், வலனை வென்று, இந்திரனுக்கு வந்த இடரைப் போக்கினுர். மகிழ்ந்த இந்திரன், வீரவாகு தேவரை நோக்கி, " நீ விரும்பும் பொருள் யாது ? அதை

மகிழ்ச்சியோடு தருகிறேன்" என்றான்; வீரவாகு, அவன் வணங்கும் தியாகரை வேண்டினார்; 'தியாகரைத் தர இந்திரன் தயங்கினான். அதனால், தேவ தச்சனைக்கொண்டு, தியாகர் போன்ற ஆறு தியாகரைச் செய்து, ஒவ்வொன்றாக அளித்தான்; அவன் அளித்தன, தியாகர் அல்ல என அறிவித்து, உண்மைத் தியாகரை அறிந்து வேண்டினார்; மறுக்கமாட்டா இந்திரன், மனம் வருந்தி அளித்தான்; இந்திரன் அளித்த தியாகர் அனைவரையும், வீரவாகு தேவர், முசுகுந்தச் சோழனுக்கு அளித்தார்; முசுகுந்தன், ஆதி தியாகரைத் திருவாரூரிலும், ஏனைய தியாகரை, திருக்கா ரோணம் முதலான ஆறு ஊர்களிலும் கோயில் கொளப் பண்ணி, வழிபட்டான்.

இயமனுக்கு ஓலை அனுப்பிய பெருமை

34\. "பிள்ளை யாருயிர்க் குறுந்துணை யாத்தனிப் [பேறெய்துங்
கிள்ளை யாரிவண் கொடுவரு கென்றுட லங்கீறிக்
கொள்ளை யாருயிரெரி நரகுறவடுங் கூற்றுயிர் [னனிசோர
வள்ளியாவரு நடுங்கத்தந் திருமுக மேசெலுத் [தொண்குந்தம்."

உரை : ஆருயிர்க்கு - முசுகுந்த மன்னன் மனைவியும் வீரவாகு தேவர் மகளுமான சித்திரவல்லியின் அரிய உயிர்க்கு; உறுந்துணையாத் தனிப்பேறு எய்தும் - சிறந்த துணையாகும் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்ற; கிள்ளைப் பிள்ளையார் - கிளிப்பிள்ளையை; இவண் கொடுவருக - இங்கே, இப்பொழுதே கொண்டு வருக; என்று - என்று; உடலம் கீறி - உயிர்களின் உடல்களை அழித்து; கொள்ளை-

எண்ணற்ற; ஆருயிர் - பெறுதற்கரிய உயிர்களை; எரிநரகு உற - எரிகின்ற நரகத்தில் வீழுமாறு; அடும் - கொல்லு கின்ற; கூற்று - இயமன்; உயிர் நனிசோர - உயிர் நடுநடுங்க வும்; வள்ளியாவரும் நடுங்க - அக்கூற்றுவனேயல்லால், உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் நடுங்கவும்; தம் திருமுகமே செலுத்து - அக்கூற்றுவனுக்குத் தம்முடைய திரு முகத்தை அனுப்பும்; ஒண்குந்தம் - புகழ்மிக்க செங்குந்தமே.

விளக்கம்: கிள்ளைப் பிள்ளையார் எனமாற்றுக. கிள்ளையார்: என்புழி, ஆர், வண்டர், சுரும்பர் எனபன போல் விகுதிமேல் விகுதியாய் வந்தது. உயிர்களை நாகுற அடும் கூற்றுவனை உயிர் சோரச் செய்யும் குந்தம் என்பது, அதன் வலிமையை உணர்த்தியவாறும்.

இயமனுக்கு ஓலை அனுப்பிய வரலாறு; நவவீரர் துணை செய்ய முசுகுந்தச் சோழன் நாடாண்டிருந்த காலத் தில், ஊழித் தீயாலும், ஊழிவெள்ளத்தாலும் உலகம் அழிந்தது. அதனுல், முசுகுந்தனும், நவவீரர்களும், வானுல கடைந்து வாழ்ந்து வந்தனர்; ஒரு நாள் தம்மை வணங்க வந்த முசுகுந்தன் குறை கேட்ட, சிவபெருமான், "உலகில் ஊழி அழிவு மறைந்துவிட்டது; வீரவாகுதேவரின் மகள் சித்திரவல்லியை மணந்து, மண்ணுலகம் சென்று, மீண்டும் அரச வாழ்வு மேற்கொள்க" எனப்பணித்தார்; இறைவன் விரும்பியவாறே, வீரவாகுதேவர், தம் மகளை, முசுகுந்த னுக்கு மணம் செய்து அளித்து, மண்ணுலகிற்கு அனுப் பினர்; முசுகுந்தனும், சித்திரவல்லியும் தம் சோணுடு நோக் கிப் புறப்பட்டகாலத்தில் அமரர்கள், பல அரிய பொருள் களை வாழ்த்துப் பொருளாக வழங்கினர். சித்திரவல்லியின் தந்தையாலும், கணவராலும், தன் பொன்னுலகம் பெற்ற பெருவாழ்வை மதித்து, அமரர் கோன் மனைவி, தான்

அருமையாக வளர்த்த கிளிப்பிள்ளை ஒன்றைப் பரிசாக அளித்தாள். அவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு இரு வரும் இந்நிலவுலகம் வந்து வாழ்ந்திருந்தனர். அக்காலை, இந்திரவல்லியின் கிளிப்பிள்ளைபால், இயமன் மனைவி ஆசைகொண்டாள் ; ஆசைகொண்டது மட்டுமன்று ; கால தூதரை விடுத்துக் கிளியைக் களவாடிக் கொண்டாள். கிளியைக் காணாது, சித்திரவல்லி கலங்கினாள் ; செய்வ தறியாத முசுகுந்தன், செய்தியை வீரவாகுதேவருக்குத் தெரிவித்தான். அஃதறிந்த வீரவாகு, கிளியை உடனே கொண்டுவந்து தருமாறு இயமனுக்கு ஒரு திருமுகம் அனுப் பினார் ; கடிதம் பெற்ற காலன், காதலிபால் சென்று செய்தி கூறிக் கிளியைத் தந்து விடுமாறு வேண்டினான் ; அவள் மறுத்து விட்டாள் ; செய்வதறியாது விழித்தான் காலன் ; கிளி வாராமை கண்ட வீரவாகு, படையோடு காலன் நகர் சென்று, கடும்போர் செய்தார். அவரோடு போரிட ஆற்றாத, இயமன், மனைவிக்குக் கொடாமையால் உண்டாகும் கேட்டினை விளங்கக் கூறிக், கிளியை வாங்கி வந்து, வீரவாகுதேவர்பால் ஒப்படைத்து உயிர் பிழைத்தான். வீரவாகுதேவர் கருவூர் சென்று, கிளியை மகள்பால்தந்து மகிழ்வித்து வானுலகம் சென்றார்.

மலையாளம் வென்ற மாண்பு

35. "வடிவே லெடுத்த மனுதுங்க வளவன் றேவி [வெதுப்பாற
முடிவேள் வியிற்செந் தீத்தருகான் முனைமாங் [கனிக்காக் குடநாட்டைச்
செடிவே ரறுத்துச் சிறையிட்டுச் சென்னி [வியப்பத் திறைபோலக்
கொடிவாண்முரசு களிறுபரி யிரதங் கொடுக்கும் [செங்குந்தம்."

உரை: வடிவேல் எடுத்த - வடித்துக்கூர் செய்யப் பட்ட வேற்படை ஏந்திய; மனுதுங்க வளவன் - மனுநெறி அரசால் மாண்புற்ற முசுகுந்த சோழனுடைய; தேவி - மனைவியாகிய சித்திரவல்லி; வெதுப்புஆற - கருவுற்றிருந்த காலத்தில் மாங்கனிபால் கொண்ட ஆசை நிறைவேற; முடிவேள்வியில் - மலையாள நாட்டு மன்னன் செய்து முடித்த வேள்வியில்; செந்தீத்தரு - வேள்வித்தீ தந்த; கான்முளை - உண்டார்க்குப் பிள்ளைப்பேறு அளிக்கவல்ல; மாங்கனிக்கா - மாம்பழத்திற்காக; குடநாட்டை - அம்மலை யாள நாட்டு மன்னனுக்குரிய குடநாட்டை; சிறையிட்டு - முற்றுகையிட்டு வென்று; சென்னிவியப்ப - தங்கள் சோழ மன்னன் தம் வெற்றிச் சிறப்பறிந்து வியக்குமாறு; செடிவேர் அறுத்து - அம் மாமரத்தை வேரோடு பிடிங்கிக் கொண்டும்; திறைபோல - திறையாக; கொடி, வாள், முரசு, களிறு, பரி, இரதம் - தோற்ற அம்மலையாள நாட்டு மன்னனுக்குரிய கொடி, வாள், முரசு, களிறு, குதிரை, தேர் முதலாயினவற்றைக் கைப்பற்றிக் கொண்டும் வந்து; கொடுக்கும் - கொடுக்கும்; செங்குந்தம் - செங்குந்தப்படை.

விளக்கம்: குடநாட்டைச் சிறையிட்டு, செடிவேர் அறுத்துக் கொடுக்கும் எனக்கூட்டுக. நல்லரசிற்கு, வேல் கோல் இரண்டுமே வேண்டுமாதலின், வடிவேலையும், மனு நெறியையும் கூறினர்.

மலையாளம் வென்ற வரலாறு: முசுகுந்த சோழன் மனைவி, சித்திரவல்லி கருவுற்றாள்; அக்காலை, இனிய காய், கனிகளை உண்ணும் ஆசை அவளுக்கு அதிகமாக எழுந்தது. அஃதறிந்த அரசன், சில வீரரை, அவை கிடைக்கும் மலை யாள நாட்டிற்கு அனுப்பி, அவற்றைக் கொண்டுவருமாறு பணித்தான்; மலையாள நாட்டு மன்னன், வந்த வீரர்க்கு, அவற்றை அளிக்க மறுத்து, அவரை வறிதே போக்கினான்;

அச்செய்தி கேட்டுக் கோபம் கொண்டான் சோழன்; மன்னன் மனத்துயர் அறிந்த நவவீரர்கள், உடனே படையோடு மலையாளம் சென்று, அம்மன்னனை வென்று, தோற்ற மலையாள வீரர் தலையில் மாங்கனிகளை, ஏற்றிக்கொணர்ந்து, மன்னனுக்கு அளித்து மாண்புற்றனர்.

ஈழம் வென்ற சிறப்பு

36. "ஆழநீள் கடற்கு மாங்கோர் அம்பிமேற் சென்றே
[யப்பாற்
சூழ்திருச் செந்தூருற்ற சுபனென்பான்
[றுணையாய்க் கொண்டு
வாழிரா சாதி ராச மன்னவன் மருவ லான்றன்
ஈழநா டொருநா டன்னிற் றிறைகொண்டீண்
[டுற்றகுந்தம்."

உரை: ஆழநீள் கடற்கு - ஆழமும், அகலமும் வாய்ந்த கடலை; ஒரு அம்பிமேல் சென்று - ஒரு கப்பல்மேல் சென்று கடந்து; அப்பால் - அக்கடலை அடுத்து; சூழ் - அக்கடல் நீர்சூழ்ந்திருந்த; செந்தூர் உற்ற - திருச்செந்தூரில் வாழ்ந்திருந்த; சுபன் என்பான் - சுபன் எனும் பெயர் கொண்ட செங்குந்தனைத்; துணையாய்க்கொண்டு - துணையாகக் கொண்டுபோய்; வாழ் - வாழ்வாங்கு வாழும்; இராசாதிராச மன்னவன் - மன்னர்க்கெல்லாம் மன்னவனுய முசுகுந்த சோழனுடைய; மருவலான்தன் - பகைவனுக்குரிய; ஈழநாடு - ஈழநாட்டை; ஒருநாள் தன்னில் - ஒரே நாளில்; திறைகொண்டு - வென்று, ஆங்குள்ள அரிய பொருள்களைத் திறையாகப்பெற்று; ஈண்டு உற்ற குந்தம் - இச் சோணுட்டிற்கு மீண்ட குந்தப்படை.

விளக்கம் : கடற்கும்: உம்மை கடத்தற்கு அரிது என்பதை உணர்த்தி நின்றது ; ஆங்கோர் : ஆங்கு, அசை.

உச்சினி நாடு வென்ற சிறப்பு

37. "மச்சநா டுடைய கோமேல் வங்கநா டாளு மன்னன்
குற்சரவரசற் காகச் சமரமேற் கொண்டு கொற்றக்
கைச்சலி யாமற் கொல்லுங் காலயிற் கௌத
[னென்பான்
உச்சினி தொடங்கிப் போர்செய் குந்தம்போ லுலகி
லுண்டோ ?"

உரை : வங்க நாடாளும் மன்னன் - வங்க நாட்டை ஆளும் அரசன் ; குற்சர அரசற்காக - கூர்ச்சர நாட்டு அரசனுக்காக ; மச்ச நாடுடையகோ மேல் - மச்ச நாடாளும் உரிமை உடைய அரசன்மீது ; சமரம் மேற்கொண்டு - போர் மேற்கொண்டு; கொற்றக் கைச்சலியாமல் - வெற்றிச் சிறப்பு வாய்ந்த தன் கைகள் சோர்வடையாமல்; கொல்லுங் காலை - அம்மச்சநாட்டு மக்களை அழிக்கும் காலத்தில் ; உச்சினி தொடங்கி - அக்கொடுஞ் செயல்கேட்டு, உச்சினி முதலாகவுள்ள அவ்வரசர் நாடுகளை; போர் செய் - வென்று அமைதி நிலைநாட்டப் போர் செய்த ; கௌதன் என்பான் - சோணாட்டுச் செங்குந்த மன்னனாய கௌதன் என்பான் கையில் ஏந்திய ; குந்தம்போல் - செங்குந்தப் படைபோல் ; உலகில் உண்டோ - சிறந்த உண்டோ - சிறந்த படை உலகில் வேறு உளதோ ? இல்லை.

***விளக்கம்* :** போர் செய் கௌதன் என்பான் குந்தம் என மாற்றுக. இதனால், பிற நாடுகளில் உண்டாம் அரசியற் குழப்பங்களை, வலியச் சென்று முன்னின்று போக்கி, அந்நாடுகளில் அமைதியை நிலைநாட்டும் செங்குந்தர் சிறப்புக் கூறப்பட்டது.

சிறக்கையானை வென்ற சிறப்பு

**38. "இடைமரு தூரிற் சாப மேந்திய சிறக்கை யானை
புடைமரு தடியின் வீழப் பொருதியே, புறங்
[கொடாது
விடைமழு வுடையான் பாத மென்கம லத்திற்
[சேர்த்த
படைமரு தன்னகக் குந்தம் போலினிப் பாரி
[லுண்டோ?"**

***உரை* :** இடைமருதூரில் - தான் இருந்து அரசாளும் திருவிடை மருதூரில்; சாபம் ஏந்திய - தனக்கு எதிராக, வில்லேந்தி, பகைகொண்டு வந்த; சிறக்கையானை - சிறக்கையான் என்ற சிறந்த வீரனை; புறங்கொடாது - அவன் வன்மை கண்டு பின்னிடாது; புடை மருதடியில் - தன் அரசிருக்கையாம் திருவிடை மருதூரைச் சூழ அரண்போல் வளர்ந்திருந்த மருதமரங்களுக்கடியில்; வீழ - இறந்துவீழுமாறு; பொருது - போர் செய்து; விடை மழு உடையான் பாத - விடை ஊர்தியும், மழு ஆயுதமும் உடைய சிவபெருமானின் திருவடியாகிய; மென் கமலத்தில் - மென்மைத் தன்மைவாய்ந்த தாமரை மலரில்; சேர்த்த - சேர்த்த; படை மருதன் - படை மருதன் என்ற செங்குந்தத் தலைவன்; கைக்குந்தம்போல்-கையிலேந்திய செங்குந்தப் படைபோல்; இனி - இக்காலத்தில்; பாரில் உண்டோ - சிறந்தது உலகில் உளதோ? இல்லை.

விளக்கம் : புறங்கொடாது வீழப்பொருது என மாற்றுக; விடையும், மழுவும் என உம்மை விரித்துக் கொள்க. பகைவனைக் கொடுமை செய்யாது, தண்ணிய தாமரை மலரில் சேர்த்தான் என்ற நயம் சுவைத்தற்குரித்து.

வங்கம் வென்ற சிறப்பு

39. "கூளிபா றினமிடங் கொண்டு சுற்றவே
காளிசா தகரெலாங் களத்தி லாடவே
வாளிதொட் டெழுமொரு வங்கக் கோவைமுன்
றோளிணை யாற்பொருந் துங்கைக் குந்தமே !"

உரை : கூளி - கழுகுகளும்; பாறினம் - பருந்துக் கூட்டங்களும்; இடங்கொண்டு - இடமாகவும், வலமாக வும் வட்டமிட்டு; சுற்றவே - சுற்றிச் சுற்றிவரவும்; காளி - காளியும்; சாதகரெலாம்-அக்காளிக்குக் குற்றேவல் புரிந்து வாழும் எல்லாப் பூதங்களும்; களத்தில் ஆடவே - போர்க் களக் காட்சியைக் கண்டுகளித்து, அக்களத்தில் நின்று கூத்தாடவும்; வாளிதொட்டு - படைக்கலம் ஏந்தி; எழும் - போர் கொண்டு வரும்; ஒரு - ஒப்பற்ற; வங்கக்கோவை - வங்க நாட்டு அரசனை; முன் - பண்டு; தோளிணையால் - தம்முடைய இரண்டு தோள்களின் வன்மையால்; பொரும் - போரிட்டு வெல்லும்; துங்கைக் குந்தமே - பெருமை பொருந்திய குந்தப்படை ஏந்திய செங்குந்தரே !"

விளக்கம் : கூளியும், பாறினமும் எனவும், காளியும், சாதகரெலாமும் எனவும் உம்மைகளை விரித்துக்கொள்க; சுற்றவே, ஆடவே, ஏகாரங்கள் இரண்டும் அசைகள். வாளி

கொண்டு வருவானைத் தோள் வலியால் வென்றனர், எனச் செங்குந்தர் தோளாற்றல் கூறியவாறு. தோள் இணை என்பதை இணை தோள் என மாற்றிக்கொள்க. சுற்ற, ஆட வாளி தொட்டு என முடிப்பினும், சுற்ற, ஆடத் தோளிணையால் பொரும் என முடிப்பினும், பொருள் ஒன்றே.

செங்குந்தர் வெற்றிச் சிறப்பு

40. "வானைவென் றுவரி சூழ்ந்த மண்ணைவென்
[றவுண ரான
காணவென் றம்பு ராசிக் கடலைவென் றருங்க
[லிங்கன்
சேனைவென் றலங்கன் மார்பஞ் செறியுமா
[மடங்கல் வையக்
கோனைவென் றரிய வாகை கொண்டெனத்
[திரியுங் குந்தம்."

உரை : குந்தம் - செங்குந்தர் ஏந்தும் படைக்கலமாகிய குந்தம்; **வானை வென்று** - வானுலகத்தில் உள்ள பகைவரை வென்று; **உவரி சூழ்ந்த** - கடல் சூழ்ந்த; **மண்ணை வென்று** - மண்ணுலகில் வாழும் பகைவரை வென்று; அவுணரான **கானை வென்று** - அவுணர்களான காட்டை அழித்து; **அம்புராசிக் கடலைவென்று** - அம்பு ராசி என்ற பெயர் வழங்கும், **கடலைக் கடந்து** ஆங்குள்ள பகைவரை வென்று; **அரும் கலிங்கன்** சேனை வென்று - வெல்லுதற்கரிய கலிங்க நாட்டரசனுக்குரிய நால்வகைப் படையையும் வென்று; **அலங்கல்** - வாகைமாலை; மார்பம் செறியும் -

மார்பின்கண் விளங்கும்; மா மடங்கல் - பெரிய சிங்கம் போன்ற; வையக்கோனை வென்று - வையக்கோன் என்ற வேந்தனை வென்று; அரியவாகை - எவர்க்கும் எளிதில் கிடைக்காத வெற்றி மாலையை; கொண்டென - பெற்றது எனப் பலரும் பாராட்ட; திரியும் - எங்கும் சென்று மீளும்.

விளக்கம்: வான்: வானுலகப் பகைவர்; மண்: மண்ணுலகப் பகைவர்; இரண்டும் ஆகுபெயர். அவுணரான கான்: உருவகம்; அவுணரைக் கான் என உருவகம் செய்யவே, வென்று என்பதற்கு, இடம் நோக்கி அழித்து எனப் பொருள் கூறினும்; அலங்கல் மார்பஞ் செறியும் வையக்கோன் எனவும், மா மடங்கல் வையக்கோன் எனவும் கூட்டிப் பொருள் செய்க. கொண்டது என என்று வர வேண்டியது, கொண்டெனத் திரிந்து வந்துளது.

இதுவும் அது

41. "செங்கோ னடத்தும் வளவனிட்ட சிங்கா
[தனத்தி லினிதிருந்த
நங்கோன் கவியே கவியென்று நாட்டிக்
[கவிபுன் களைகளைந்து
வங்கோ டீழங் கன்னுட மாராட் டிரங்குச்
[சரஞ்சீனம்
கொங்கோ டெங்குந் தரத்திறையே கொள்ளு
[மின்னார் செங்குந்தம்."

உரை: மின்ஆர் - ஒளி பொருந்திய; செங்குந்தம் - செங்குந்த வீரர் ஏந்திய செங்குந்தப்படை; செங்கோல் நடத்தும் - அறவழி அரசு நடத்தும்; வளவன் - குலோத்

துங்கச் சோழன் ; இட்ட - அளித்த ; சிங்காதனத்தில் இருந்த - சிங்காதனத்தில் சிறப்பாக வீற்றிருந்த ; நங் கோன் - நமது புலவர்கோவாகிய ஒட்டக்கூத்தர் ; கவியே - பாடும் பாட்டே ; கவி - சிறந்த பாட்டாம் ; என்று நாட்டி - என்று உலகில் நிலைபெறச் செய்து ; புன்கவி - ஏனைய புல்லிய பாக்களை ; களை களைந்து - அறவே அழித்து ; வங்கோடு - வங்க நாடு முதலாக ; ஈழம் - ஈழம் ; கன் னடம் - கன்னடம் ; மாராட்டிரம் - மராட்டம் ; குச்சரம் - குச்சரம் ; சீனம் - சீனம் ; கொங்கோடு - கொங்கு நாடு வரையும் உள்ள நாடுகள் ; தர - பணிந்து கொடுக்க ; திறைபெற்று விளங்கும்.

விளக்கம் : கவிபுன் - புன்கவி எனமாற்றிப் பொருள் கொள்க. நல்ல கவிகளை வளர்த்துப் பொல்லாக் கவிகளை அழித்துத் தமிழ் வளர்க்கும் திறம் கூறப்பட்டது ; இது அவர் புலமைக்கு எடுத்துக்காட்டு ; திறை பெற்றது அவர் வெற்றிக்கு எடுத்துக்காட்டு ; இனி, நங்கோன் என்பதை நங்கோனுல் என உருபு விரித்துக், கூத்தரால், சிறந்த கவி களை நிலைநாட்டிப் புன்கவிகளைக் களைந்து எனக் கோடலும் ஒன்று.

கொடிச் சிறப்பு

42. "கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்ததால்."

உரை : கவி - வறுமையாகிய; குறும்பு - பகையை; அடு - தன் நாட்டில் இல்லாமல் அழிக்கின்ற; வளவனுக்கும் - குலோத்துங்கச் சோழனுக்கும்; காது - அமரர்க்குத் துயர்விளைக்கும்; சூர் - சூரபதுமனாகிய; வலிக்குறும்பு - வல்லமைபெற்ற பகையை; அடு - அழித்த; தனி - ஒப்பற்ற; வாகை - வெற்றிச் சிறப்பு வாய்ந்த; குந்தர்க்கும் - செங்குந்தர்க்கும்; பலிக்கும் - கிடைக்கும்; நற்புகழெலாம் - நல்ல புகழ் அனைத்திலும்; பாதி ஆதலால் - பாதி பாதி உண்டு ஆதலால்; மரபு இரண்டினுக்கும் - சோழர் குலம், செங்குந்தர் குலம் ஆகிய இரு குலத்தவர்க்கும்; புலிக்கொடி போந்ததால் - புலிக்கொடியே, கொடியாக அமைந்தது.

விளக்கம் : குறும்பு அடுவதில், குலோத்துங்கனும், குந்தரும் ஒத்தவரே ஆயினும், குந்தர் அட்ட குறும்பு, அழிப்பதே தொழிலாகக் கொண்டது, எளிதில் அழிவுறா வல்லமை வாய்ந்தது ஆதலின், குந்தர் குலோத்துங்கனினும் சிறந்தவராவர் என்பதை விளக்க, "கலிக் குறும்பு" என அடை தராதும்; "காது சூர்", "வலிக் குறும்பு" என இரு அடை தந்தும் கூறினர். "வளவன்" என வறிதே விடுத்தும், "தனி, வாகைக் குந்தர்" என இரு சிறப்புக்கள் அளித்தும் கூறியதும் அதை வலியுறுத்தி நிற்பதறிக, ஆல் - அசை.

படைத்தலைவரான பெருமை

43. "தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவும்
மன்னனை வளவனை மகிழ்ந்து பாடவும்
பன்னருஞ் சாரதி படைத்த பான்மைபோல்
ஒன்னலர்க் குள்ளினத் துற்ற குந்தமே."

உரை : தென்னனை - பாண்டியனை ; சேரனை - சேரனை யும்; சிறுமை சொல்லவும் - இகழ்ந்து பாடவும் ; மன்னனை வளவனை - சோழர் குல அரசனாகிய தன்னை ; மகிழ்ந்து பாடவும் - புகழ்ந்து பாடவும் ; பன்னரும் - பாராட்டிப் புகழ்தற்கரிய ; சாரதி - புலவராகிய ஒட்டக்கூத்தரை ; படைத்த பான்மைபோல் - குலோத்துங்கன், பெற்றது போல் ; ஒன்னலர்க்கு - அக்குலோத்துங்கனுடைய பகை வனை அழித்தற்கு ; உள்ளினத்து உற்ற - அவனுக்குரிய சோழர் குடிக்கு உள்ளே தோன்றிய ; குந்தமே - செங் குந்தர் படையே.

விளக்கம் : நோய்க்கு மருந்து, நோய் தீர்தற் பொருட்டு மருந்து எனப்பொருள் தருதல்போல், ஒன்னலர்க்கு என்பது ஒன்னரை அழித்தற் பொருட்டு எனப்பொருள் தந்தது. செங்குந்தர் சோழர் குலத்தவர் என்பதும், அச்சோழர் படை யில் பணியாற்றியவர் என்பதும் கூறியவாறு. சாரதி - புலவன், "தென்னனைச் சேரனைச் சிறுமை சொல்லவும்" என்பது, "கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை ? கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை ?" என்ற அம்மானையால் உறுதியாம்.

வேலும் குந்தமும் வேறு வேருகா

44. "சேல்வேறு புலிவே ருடுஞ்சேதுவி னளவாய்ச்
[சென்னி
கோல்வே றில்லாம லோச்சிக் கன்னியே
[கொள்வ னென்றே
மால்வேறு சிவன்வே றென்ன வழுத்திடா
[வண்மை போல
வேல்வேறு குந்தம்வேறென் றிருபொருள்
[விளம்பார் மேலோர்."

உரை : சென்னி - முசுகுந்தச் சோழமன்னவன் ; சேல் வேறு - மீன்கொடிவிளங்கும் பாண்டி நாடு வேருகவும் ; சேதுவின் அளவாய் - விளங்கிய சேதுவரையும் உள்ள தமிழ் நாட்டை ; கோல் வேறு இல்லாமல் - இடையில் வேறு அரசு இல்லாவாறு ; ஓச்சி - தனி அரசு செலுத்தி ; கன்னியே கொள்வன் - கன்னியாகுமரிவரையுள்ள நாடுகள் அனைத்தையும் கொண்டு ஆள்வன் ; என்று - என்று அறிந்த ; மேலோர் - பெரியவர்கள் ; மால்வேறு - அரிவேறு ; சிவன்வேறு - அரன்வேறு ; என்ன வழுத்திடா வண்மை போல - என்று வேறு வேருகப் பிரித்துவணங்காத உயர்ந்த வழக்கம்போல் ; வேல்வேறு - முருகன்கை வேலாயுதம் வேறு ; குந்தம் வேறு - செங்குந்தர் ஏந்திய குந்தப் படை வேறு ; என்று - என்று ; இருபொருள் விளம்பார் - இரண்டையும் இருவேறு பொருள்களாகப் பிரித்துக் கூருர்.

விளக்கம் : சென்னி, கன்னியே கொள்வன் என்று (அறிந்த) மேலோர், வண்மைபோல, விளம்பார் என முடிக்க. "என்று" என்ற எச்சத்திற்கேற்ற "அறிந்த" என்ற வினை வருவித்துரைக்கப்பட்டது. முசுகுந்தன், பாண்டிநாடு வேறு, சோணுடு வேறு எனக்கருதாது, இரு நாட்டையும் ஒன்ருகவே ஆண்டான் ; அவன் வரலாறு அறிந்தவர் ; அவ்வரலாற்ருேடு தொடர்புடைய வேலின் வரலாற்றையும்,குந்தத்தின் வரலாற்றையும் அறிவராதலின் இரண்டையும் வேறுபாடுடையவாகக்கொள்ளார். அரியும் அரனும் வடிவால் வேறுபடினும், இயல்பால் ஒன்ருதல் போல், வேலும் குந்தமும் நிலையால் வேறுபாடுடைய வாயினும் ஆற்றலால் ஒரு தன்மையவே என்பது கருத்து.

செங்குந்தப் படையின் சிறப்பு

45. "பூமாலை கடப்பந் தாமம் பூண் மணித் தெரியல்
[செய்ய
பாமாலை தன்னைக் கைக்கொள் முதலியர்
[பங்க தாக்கி,
மாமாலை யொல்லார் காலில் வழிதுழிக்
[குடரின் மாலை
தேமாலை யாகச் சூடும் செங்குந்தம் போலு
முண்டோ?"

உரை: பூமாலை - வெற்றிகுறித்துச் சூட்டும் மலர் மாலை; கடப்பந்தாமம் - கடப்பம் பூமாலை; பூண்மணித் தெரியல் - மணிகள் இழைத்துட்! பண்ணிய அணிகளால் ஆகிய அழகியமாலை; செய்ய பாமாலை - புலவர்கள் பாராட்டிய சிறந்த பாமாலை ஆகிய மாலைகளை; தன்னைக் கைக் கொள் - படைக்கலமாகத்தன்னை ஏந்திய; முதலியர் - செங்குந்த முதலியார்களுக்கு; பங்கதாக்கி - உரியவாக்கி; மாமாலை ஒல்லார் - பெரிதும் மயக்கத்தை உடைய பகைவர்களின்; வழிதுழி - குடியில் வழிவழியாக வந்தவர்களின்; குடரின் மாலை - குடர்மாலையை; தேமாலையாகச் சூடும் - தேன் நிறைந்த மலர் மாலையாகக் கருதி அணிந்து கொள்ளும்; செங்குந்தம் - செங்குந்தப்படை; போலும் உண்டோ - போல் சிறந்த படை வேறு உளதோ; இல்லை.

விளக்கம்: மாலை, தாமம், தெரியல் முதலாயின ஒரு பொருட்கிளவிகள்; பூமாலை - வேற்றுமைத் தொகை; பாமாலை - பண்புத்தொகை, மாமாலை; பெரிய மயக்கம்; தம் ஆற்றலும், குந்தர் ஆற்றலும் அறியாமையால் பகை

கொண்டவராதலின், "மாமாலை ஒல்லார்" என்றார். தன்னை உடையார்க்குப் பல சிறந்த மாலைகளைச் சூட்டிடும் குந்தம், தனக்குக் குடர்மாலையைச் சூட்டிக் கொள்ளும் சிறப்பு பாராட்டற்குரித்து.

செங்குந்தப் படையின் வெற்றிச் சிறப்பு

46. "பற்றினும் பற்றும் சென்னி பறிக்கினும்
[பறிக்கும் பாசம்
எற்றினும் எற்றும் கூற்றை யீரினும் ஈரும் வாரிச்
சுற்றினும் சுற்றும் அண்டந் துகளெழச்
[செயினுஞ் செய்யும்
மற்றினுங் குந்தம் போற்று திருப்பவ
[ருளரோ மண்மேல்."

உரை : குந்தம் - செங்குந்தவீரர், தம்கையில் ஏந்திய குந்தப் படை ; கூற்றை - யமனை ; பற்றினும் பற்றும் - அவன் ஆற்றலை அழித்து அவனைச் சிறை செய்ய விரும்பினும் சிறை செய்யும் ; சென்னி - அவன் தலையை ; பறிக்கினும் பறிக்கும் - பறிக்க விரும்பினும் பறிக்கும் ; பாசம் - அவன் கையின் கண் உள்ள, உயிர்களைக் கவரும் கயிற்றினை ; எற்றினும் எற்றும் - பிடுங்கி எறியவிரும்பினும் எறியும் ; ஈரினும் ஈரும் - அக்கூற்றுவன் உடலைப் பிளக்க விரும்பினும் பிளக்கும் ; வாரி - அவனை வாரி எடுத்து ; சுற்றினும் சுற்றும் - கரகரவெனச் சுழற்ற வேண்டினும் சுழற்றும் ; அண்டம் - உலகங்களை ; துகள்எழச் செயினும் செய்யும் - தூள்பறக்குமாறு அழிக்க விரும்பினும் அழிக்கும் ; இனும் - குந்தப் படையின் பேராற்றல் இத்தகைத்து

என்பதை அறிந்த பின்னரும்; மண்மேல் - உலகில்; போற்ருதுஇருப்பவர் உளரோ - அதைப் போற்றிப் புகழா திருப்பவரும் உள்ளனரோ? இல்லை.

விளக்கம் : மற்று : அசை; இன்னமும் என்பது, இனும் எனக்குறைந்துளது, முசுகுந்தச் சோழன் மனைவி யும், வீரவாகுதேவர்மகளுமாய சித்திரவல்லியாரின் கிளியை, இயமன் மனைவி கவர்ந்து கொண்டது கருதி நேர்ந்த பகை யின் போது, கூற்றுவன் பட்டபாட்டை விவரிக்கிறது இச்செய்யுள்.

இதுவுமது

47. "போற்றியோ போற்றி யென்று புதுமலர்
[தூவிச் சீற்ற
மாற்றியே வந்தியாமலடையலர் வாழ்ந்திருந்தால்
காற்றென வூழித்தீயிற் கடலெனக் கொடியகோபக்
கூற்றெனத் திரிந்து சோரிக் குளித்துடன்
[களிக்குங் குந்தம்."

உரை : அடையலர் - பகைவர்கள்; சீற்றம் மாற்றி - தம் சினத்தைக் கைவிட்டு; புதுமலர் தூவி - புதிய புதிய மலர்களைத் தூவி; போற்றியோ போற்றி என்று - போற்றி போற்றி என வாழ்த்தி; வந்தியாமல் - வணங்காமல்; வாழ்ந் திருந்தால் - மேலும் பகையேகொண்டு வாழ்ந்திருப்பராயின்; குந்தம் - குந்தர்கைப்படை; ஊழிக் காற்றென - ஊழிக் காற்றைப் போலவும்; தீயின் - ஊழித்தீயைப் போலவும்; கடல் என - ஊழிப் பெருவெள்ளத்தைப் போலவும்;

கொடிய கோபக் கூற்றென - கடுஞ்சினம் உடையக்கூற்று வனைப் போலவும்; திரிந்து - அப்பகைவரிடையே திரிந்து; சோரிக்குளித்து - அப்பகைவர்களை அழித்து, அவர் உடலி னின்றும் ஓடும் இரத்த வெள்ளத்தில் மூழ்கி; உடன் களிக்கும் - பின்புசினம் ஆறிச் சிந்தை மகிழும்.

விளக்கம் : அடையலர் வாழ்ந்திருந்தால், குந்தம், திரிந்து, குளித்து, களிக்கும் என முடிக்க. அடையலர், சீற்றம் மாற்றி, தூவி, என்று வந்தியாமல் வாழ்ந்திருந்தால் எனவும் முடிக்க. இனி, சீற்றம் மாற்றி என்பதற்குக் குந்தம் தம்மீது கொண்ட கோபத்தைப் போக்கி எனப் பொருள் கோடலும் பொருந்தும். வாழ்ந்திருந்தால் என்பது, அவ்வாறு பகைவர், பணியாது வாழ்ந்திருத்தல் இயலாது என்ற அருமை தோன்ற நின்றது. பணியாத பகைவரின் கேடு இத்தகைத்து என்று கூறிச் செங்குந்தப் படையின் சிறப்புக் கூறப்பட்டது.

பழுவூர்க் குந்தர் தலைவன் வீரன் பெருமை

48. "சூட்டும் வீர வாகுவெனச் சொல்லும் பழுவூர்
[வீரனமர்

மூட்டுங்கால மூழிவெள்ள மூடுங் கால
[மாகாதோ ?

வேட்டங் காலில் வீழாதார் மேலு முளரோ ?
[வீதி உலா

யீட்டுங் காலங் குந்தங்கண் டெழுமே கழுகு
[பருந்துகளும்."

உரை : சூட்டும் - வெற்றித் திருமுடி சூட்டப்பெறும்; வீரவாகு என - வீரவாகு தேவர்க்கு நிகரானவன் என்று;

சொல்லும் - பாராட்டிப் புகழப் பெறும்; பழூர் வீரன் - திருப்பழூரில் வாழும் வீரன் எனும் செங்குந்தத் தலைவன்; அமர் மூட்டும் காலம் - பகைவர்மீது போர் மேற்கொண்டு எழும்காலம்; ஊழி வெள்ளம் - ஊழி வெள்ளத்தால்; மூடும் காலம் ஆகாதோ - மூடப்பெற்று உலகம் அழியும் காலம் போல், கொடுமை யுடையது ஆகாதோ? அம்காலில்- வீரனுடைய அழகிய காலில்; வேட்டு - விரும்பி; வீழாதார்- வீழ்ந்து பணியாத பகைவர்; மேலும் உளரோ இன்னமும் இருக்கின்றனரோ? வீதி - தெருக்களில்; உலா ஈட்டும்கால் வீரன் உலாவரும் காலத்தில்; குந்தம் கண்டு - அவன் கையில் ஏந்திய குந்தப் படையைப் பார்த்து; கழுகு பருந்து களும் - கழுகுகளும், பருந்துகளும்; எழும் - தமக்கு வேண்டும் இரை கிடைக்கும் எனும் துணிவால், வானில் எழுந்து வட்டமிடும்.

விளக்கம்: அம் காலில் வேட்டு வீழாதார் என மாற்றுக. கழுகு, பருந்துகளும் எழும் எனவும் மாற்றுக. வீரன் போர்மேற்கொண்டால், ஊழிக்காலத்து அழிவு போல் பேரழிவு உண்டாம்; வீழாதார் மேலும் உளரோ? என்பதற்கு, அனைவரும் பணிந்தனர்; பணியாதார் இன்னமும் உளரோ என்றும், பணியாத பகைவர் இன்னமும் உயிரோடு உளரோ என்றும் இருவகையாலும் பொருள் கொள்ளலாம். குந்தங்கண்டு, கழுகும், பருந்தும் எழும் என்ற கருத்து, குந்தம் உலாவந்தது என்றால், போர் உண்டாதல் உறுதி; அப்போரில் அவன் பகைவர் பலர் உயிர் இழத்தல் உறுதி; அதனால் தமக்கு நிறை உணவு கிடைத்தல் உறுதி எனக்கருதி அவை மகிழ்ந்தன என்றாகி, வீரன் வீரத்தை விளக்கியவாறும்.

வீரன் வரலாறு: ஈண்டுக் கூறிய இவ்வீரனும் அடுத்துவரும் பாட்டில் பாராட்டப்பெறும் நாராயணனும், சோணாட்டுத் திருப்பழுவூரில் வாழ்ந்த, கோமதி என்னும் செங்குந்த மன்னன் மக்களாவர்; இரட்டையராகப் பிறந்த இவர்களை, இராம லட்சுமணர் என்பதுபோல் "வீரநாராயணர்" என இணையாகவே அழைத்து வந்தனர்; இவ்விரட்டையரின் ஆற்றல் அறிந்த, பராந்தகச் சோழ மன்னன், இவர் படைத்துணை பெற்று, வல்லான் என்ற இராட்டிரகூட மன்னனை வென்றான். இவர் வரலாறு, வல்லான் காவியத்தில் விரிவாக உரைக்கப்பெறும்; ஆண்டுக் காண்க.

பழூவூர்க் குந்தர் தலைவன் நாராயணன் பெருமை

49. "காராமுருவ மொழிந்து பொன்னின் கவினார்
[பழுவை வளம்பதியில்
நாரா யணனே விக்கிரம நாரா யணனு
[மென்னுதார்
வாரா வழிவந் தோமென்றே வாயிற் புல்லைக்
[கவ்வி வந்த
சேரார் சேரா நின்றுதொழச் செய்யு மன்னன்
[செங்குந்தம்."

உரை: பழுவை வளம்பதியில் - திருப்பழுவூர் என்ற வளம்மிக்க நகரத்தில் வாழும்; நாராயணனே - நாராயணன் எனும் செங்குந்தத் தலைவனே; கார்ஆம் உருவம் ஒழித்து - நீர்உண்ட மேகமாம் எனக் கருதுமாறு கருத்த உருவத்தைக் கைவிட்டு; பொன்னின் கவின்ஆர் - பொன் நிறம்பெற்று அழகு நிறைந்த; விக்கிரம நாராயணனும் - திருமாலின் திருவவதாரமாகிய திருவிக்கிரம நாராயணனும்; என்னுதார் - என்று கருதாராய்; வந்த சேரார் -

அப்பழூவூர் நாராயணனோடு பகை கொண்டு வந்த பகை வரை ; அன்னான் செங்குந்தம் - அந்நாராயணன் ஏந்திய செங்குந்தப்படை ; வாராவழி வந்தோம் - பகை மேற் கொண்டு வரத் தகுதியில்லாத இடத்திற்கு வந்துவிட் டோம் ; என்று - என்று தம்பிழை உணர்ந்து ; வாயில் புல்லைக்கவ்வி - தோல்வியை ஒப்புக்கொண்டு, அதற்கு அடையாளமாக, வாயில் புல்லைக் கவ்விக்கொண்டு ; சேரா நின்று தொழச் செய்யும் - அந்நாராயணன் முன்நின்று பணிந்து வணங்கப் பண்ணும்.

விளக்கம் : என்னாதார் - முற்றுச்சொல் எச்சப் பொருட்டு; வாரா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; சேரா : செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், செய்து என்னும் பொருட்டு. வாரா வழி என்பதற்கு, மீண்டு வாரா வழி எனக்கொண்டு, இறப்பது உறுதி எனும் நிலையைப் பெற்றோம் எனப் பொருள் கோடலும் உண்டு. வாயில் புல்லைக் கவ்வுதல், தோல்வியை ஒப்புக் கொண்டமையினைக் காட்டுவதாம். என்னாதாரை, அன் னான் செங்குந்தம், வந்த சேராரைக் கவ்வச் செய்யும் என முடிக்க, பொன்னின் கவின்ஆர் நாராயணன்; பழுவை வளம்பதியில் நாராயணன் எனக்கொண்டு கூட்டுக.

கச்சித் தலைவன் தனியன் சிறப்பு

50. "இனிமா நிலத்திற் கண்டதில்லை கேட்டே
[யிருத்தலன் றிப் பெரும்
பனிமால் வரையு மைநாக முன்பின் படைதா
[னெடுத்தாலும்
முனிமா றுண்டோ நடுநின் று முடிப்பான்
[கச்சித் தனியன் வட்டத்
தனிமா நிழற்கீழ்ச் செங்குந்தம் சரணு கதிக்கு
வைகுந்தம்."

உரை : கச்சித் தனியன் - காஞ்சிபுரத்தில் இருந்து அரசாண்ட செங்குந்த மன்னனுய தனியன் என்பான்; பெரும் பனிமால் வரையும் - பனி சூழ்ந்த பெரிய இமய மலைக்கு உரியானும்; மைநாகம் - மைநாகம் எனும் மலைக்கு உரியானும்; முன்பின் - தம்முடைய படைவலியால்; படை தான் எடுத்தாலும் - தம்மீது படையெடுத்து வந்தாலும்; முனிமாறு அவர் செயல் கண்டு சினப்பது; உண்டோ - உண்டோ? இல்லை; நடுநின்று - வந்து எதிர்த்த இருவர் படைக்கும் இடையே புகுந்து போரிட்டு நின்று; முடிப் பான் - அவ்விரு படைகளையும் அழித்துவிடுவன்; வட்டத் தனியா நிழற்கீழ் - அவன் ஆட்சிக்குரிய காட்சி மாவட்டத் தில் உள்ள, ஒப்பற்ற மாமரத்தின் நிழற்கீழ் உள்ள; செங் குந்தம் - அவன் கைப்படையாய செங்குந்தம்; சரணு கதிக்கு - பகைவிட்டுப் பணிந்து நிற்பார்க்கு; வைகுந்தம் - காக்கும் கடவுள் வீற்றிருக்கும் வைகுந்த உலகம் போல், வாட்டம் ஒழித்து வாழ்வை அளிக்கும்; மாநிலத்தில் - பரந்த இவ்வுலகில்; இனி - இப்பொழுது; கேட்டே இருத்த லன்றி - கச்சித் தனியன் புகழைப் பிறர்கூறக் கேட்டிருப்ப தல்லது; கண்டதில்லை - பிறர்பால் அப்புகழ் நிலைபெற்றி ருக்கக் கண்டதில்லை.

விளக்கம் : தனியன், படை எடுத்தாலும், முனிமாறு உண்டோ? நடுநின்று முடிப்பான்; செங்குந்தம், வைகுந் தம்; கேட்டே இருத்தலன்றிக் கண்டதில்லை என முடிக்க. மைநாகம் - இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே உள்ள ஒரு மலை எனக் கம்பராமாயணம் கூறுகிறது. இமய நாட்டார் வடக்கிலும், மைநாக நாட்டார் தெற்கிலும் வந்து தாக்க, அவர்களை இடையே உள்ள காஞ்சி நாட்டில் நின்ற வாறே வென்று அழிப்பன்; பகைவரை அழிக்கும் ஆற்றல் அளவிறந்து உள்ளமையால், பகைவர் படையெடுப்புக் கண்டு சினந்திலன்; இவ்வாறு எதிர்க்கும் பகைவரைப்

பாழ்பண்ணும் தனியன், தன்னைப் பணிந்து நிற்கும் பகைவரைப் பேணிக்காப்பன் என்பார், அவன் செங்குந்தம், வைகுந்தம் போல் வாழ்வளிக்கும் என்றார். வாழ்வளிக்கும் என்பது எச்சம். காஞ்சியில் கோயில் கொண்டிருக்கும் ஏகப்பனை வழிபடு கடவுளாகக்கொண்டமையால் தனியனும், அம்மாவடியையே தன் அரசவையாகக் கொண்டான்; பண்டைக் காலத்தில், ஊர்ப் பொதுவிடத்தே உள்ள மரத்தடிகளிலேயே அரசியல் அவை கூடும் வழக்கத்தை, இப்பாட்டு நினைவூட்டுகிறது.

தனியன் வரலாறு : காஞ்சி மாநாட்டைக் கச்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட செங்குந்த மன்னன் பதும வண்ணனுக்கு ஒரே மகனாக வந்து பிறந்தவன் இத்தனியன் தனியன் இளவரசனாக இருக்கும்பொழுதே, பதுமவண்ணன் இறந்துவிடவே, பகைவர் பலர் ஒன்றுகூடித் தனியனை எதிர்த்தனர் ; எதிர்த்த அனைவரையும், ஒருவனாகவே நின்று போரிட்டு வென்று அழித்தான் ; தனித்து நின்று வென்றமையால் தனியன் எனும் சிறப்புப் பெயரும் பெற்றான். அக்காலத்தே வாழ்ந்திருந்த செங்குந்தத் தலைவர் ஆயிரத்துத் தொளாயிரவரில் தனியனும் ஒருவன். இவன் காஞ்சியில், மாவடியின் கீழ் இருந்து அரசாண்டான்.

ஒற்றியூர்ச் செங்குந்தத் தலைவன் சிறப்பு

51. "உடல்மண் மேலுயிர் விண்மே லொல்லா
[ரொடுங்க வுதிரமொடு
குடருங் கொழுவுங் கழுகோடுங் கொள்ளை
[கொள்ளப் பரிந்தூட்டு
மடல்வெண் டாழை முகமலர வாரி வாரித்
[திரைக் கரத்தால்
கடல்வெண் டரள மேயெறியு மொற்றி யூரன்
[கைக்குந்தம்."

உரை : வெண்தாழை - கரையில் வளர்ந்திருக்கும் வெண்தாழையின்; மடல் முகம் மலர - மலர்கள் இதழ் மலருமாறு; கடல் - கடலானது; திரைக்கரத்தால் - தன் அலையாகிய கைகளால்; வெண்தாளம் - வெள்ளிய முத்துக் களை; வாரி வாரி - வாரி வாரி; எறியும் - வீசும்; ஒற்றி யூரன் - வளம்பொருந்திய திருவொற்றியூர் வாழ் செங் குந்தத் தலைவன்; கைக்குந்தம் - கையின்கண் உள்ள குந்தப் படை; ஒல்லார் - பகைவருடைய; உடல் மண்மேல் - உடல் மண்ணின்மீதும்; உயிர் விண்மேல் - உயிர் வானுல கத்திலும்; ஒடுங்க - அடைந்து மறைய; உதிரமொடு - அவர் உடலினின்றும் ஒழுகும் உதிரத்தையும்; குடரும் - குடரையும்; கொழுவும் - கொழுப்பையும்; கழுகோடும் - காக்கையும், பருந்தும், கழுகோடுகூடி; கொள்ள - அள வின்றிப் பெற்று உண்ணுமாறு; பரிந்து ஊட்டும் - அவற் றிற்கு அன்போடு ஊட்டும்.

விளக்கம் : குந்தம் ஊட்டும் என்பது முடிவு. ஒல்லார் உடல் என மாற்றுக; உதிரமொடு : ஒடுவை இரண்டாம் வேற்றுமையாக மாற்றுவதினும், குடரையும், கொழுவையும், உதிரமோடு கொள்ளை கொள்ள என மூன்றும் வேற்றுமையாகவே கொள்வதும் பொருந்தும்; உதிரம், குடர், கொழு இவற்றுள் சிறப்புடையது உ.திர மாதலின், ஒடுவுருபு அதன்பின் வந்தது. கழுகோடும் என் பதில் உள்ள ஒடுவும், உம்மும், அக்கழுகிற்கு இனமாய, காக்கைகளையும் பருந்துகளையும் தந்தன. அவன் நாட்டுக் கடல், முத்துக்களை வழங்கும்; அவன் குந்தம், உதிரத்தை யும், குடரையும், கொழுவையும் வாரிவாரி வழங்கும். நிலத் திற்கும், அந்நிலத்துத் தலைவனுக்கும் ஒற்றுமை நிகழக் கூறியது உணர்ந்து மகிழ்தற்கு உரித்து.

ஒற்றியூரன் வரலாறு: இவன், திருவொற்றியூரை அரசாண்டு வந்த சுதனகன் என்ற செங்குந்த மன்னனின் மகனுவன்; இவன் சிறப்பறிந்த அக்கால மக்கள், அவன் பிறந்த ஊரின் பெருமை விளங்க, ஒற்றியூரன் என்று அழைத்தமையால், இவன் பிள்ளைப் பெயர் மறைந்து விட்டது; கடவுள் பற்றும், வெற்றிச் சிறப்பும் வாய்க்கப் பெற்றவன்; விநாயகருக்கு ஒரு கோயில் அமைத்து வழி பட்டவன்; மாணிக்கத் தியாகரை வழிபடுதற்கான மலர் களைப் பெற வேண்டி, தனியாக ஒரு மலர்ச் சோலை உண் டாக்கி, அதில் மலரும் மலர்களில் சிறந்தன கொண்டு, அக்கடவுளை வழி பட்டவன்; தான் வைத்து வளர்த்த மலர்ச் சோலையை, அனலன் எனும் ஓர் அரக்கன் வாழ்விட மாகக்கொண்டு, ஒற்றியூரைச் சூழ இருந்த உயிர்களுக்குக் கேடு விளைவிப்பது அறிந்து, அவ்வரக்கனைத் தன் கைக் குந்தத்தால் கொன்று, உயிர்களை ஓம்பினுன்.

களத்தூர்ச் செங்குந்தன் சிறப்பு

52. "தளர்ந்த வருக்குத் திருவுருவந் தன்னை யடையார்க்
[கொருசிங்கம்
இளந்தை யவர்க்குச் சிலைவேணல் லிசையாற்
[பொற்பூ தரமேயாம்
வளர்ந்த சாலி வரம்பினில்வால் வளைகண் முத்தந்
[தரும் வளங்கூர்
களந்தை யாதி நகரரசன் கைக்குந் தம்போல்
[காணேமே."

உரை : சாலி - கந்தசாலி எனும் சிறந்த செந்நெல்; வளர்ந்த - விளைந்து சாய்ந்த; வரம்பினில் - வயல்களின் வரப்பில்; வால் - வெண்ணிறம் வாய்ந்த; வளைகள் - சங்குகள்; முத்தம் தரும் - முத்துக்களை அளிக்கும்; வளர் கூர் - வளப்பம் மிக்க; களந்தையாதி - பொன் விளைந்த களத்தூர் முதலாய; நகர் அரசன் - நகரங்களுக்கு அரசனாய் விளங்கும் செங்குந்தத் தலைவன்; தளர்ந்தவருக்கு - வளம் இழந்தும், பலம் இழந்தும் தளர்ந்து, தன்னை வந்து அடைந்தவர்களுக்கு; திருவுருவம் - அவர்கள் கண்டு மகிழும், அழகிய அன்புத் திருவுருவாய் விளங்குவன்; தன்னை அடையார்க்கு - பணிந்து, தன்னை வந்து அடையாத பகைவர்க்கு; ஒரு சிங்கம் - ஆற்றல் மிக்க சிங்கம் போல் அழிவு தரும் கொடியனுவன்; இளைந்தையவர்க்கு - இளைய மகளிர்க்கு; சிலைவேள் - கருப்பு வில்லேந்திய காமன் போல் சிறந்த காதலனுவன்; நல் இசையால் - சிறந்த புகழ் உடைமையால்; பொற்பூதரமேயாம் - பெரிய பொன் மலை போன்றவனுவன்; கைக்குந்தம் போல் - இத்துணைச் சிறந்த அவன் கையில் விளங்கும் குந்தப் படைபோல்; காணேமே - சிறந்த புகழ் உடைய பிற படைக்கலங்களை யாம் எங்கும் கண்டதில்லை.

விளக்கம் : அரசன், திருவுருவம்; சிங்கம்; வேள்; பூதரம்; கைக்குந்தம் போல் காணேம் எனமுடிக்க களந்தை என வழங்கப்பெறும் பொன் விளைந்த களத்தூர். தொண்டை நாட்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில் உளது.

களந்தை அரசன் வரலாறு : இவன், பொன்விளைந்த களத்தூர்ச் செங்குந்த மன்னன் மதிமான் என்பானின் மகனுவன். நல்ல சைவ சமயப் பற்றுடையவன்; பொன்னம்பலக் கூத்தனை வழிபடு கடவுளாகக் கொண்டவன். இவ

னுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய காலை, இவன் தந்தை விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த காட்டூரான் எனும் குறுநில மன்னனை இவன் தந்தை படைகொண்டு சென்று வென்று பணிய வைத்தான் எனக்கூறும்.

புற்றிடங் கொண்டான் பெருமை

53. ***"கற்றிடங் கொண்டவர் கவின்சொற் கொள்ளுமே ;***
யுற்றிடங் கொண்டபேர்க் குலகை நல்குமே ;
வெற்றிடங் கொண்டமே வலரை வீட்டுமே ;
புற்றிடங் கொண்டவன் பொலிகைக் குந்தமே."

உரை: புற்றிடங்கொண்டவன் - புற்றிடங்கொண்டவன் என்ற பெயர் உடைவனான செங்குந்தத் தலைவன் ; கை பொலிகுந்தம் - கைக்கு அழகு தந்திருந்த அவன் குந்தப் படை ; கற்று - கற்க வேண்டிய நூல்களைக் கற்கும் முறை அறிந்து கற்று ; இடங்கொண்டவர் - பரந்த அறிவைப் பெற்ற புலவர்களின் ; கவின் சொல் - அழகிய பாராட்டுப் பாக்களை ; கொள்ளும் - பெறும் ; உற்று - வறுமையால் துயர்உற்று ; இடங்கொண்ட பேர்க்கு - தன்னை வந்தடைந்து வாழ்வார்க்கு ; உலகை நல்கும் - இவ்வுலகையே பெற்று அளிக்கும் ; வெற்றிடம் கொண்ட ; பயனிலா நாட்டைத் தம் அரசிருக்கையாகக் கொண்ட, மேவலரை - பகைவர்களை ; வீட்டும் - அழிக்கும்.

விளக்கம் : புற்றிடம் கொண்டவன் குந்தம், சொல் கொள்ளும் ; உலகை நல்கும் ; மேவலரை வாட்டும் என முடிக்க. பொலிகைக் குந்தம் என்பதைக் கைப்பொலி

குந்தம் என மாற்றுக. சொல், சொற்களால் ஆய பாக்களை உணர்த்தும்; தம்மினும் ஆற்றல் மிக்க அரசர்களால் அழி வுற்று அழிவுற்றுப் பயனிழந்து போனமையால், வெற்றிடம் எனப்பட்டது.

வரலாறு: திருவாருரைத் தன் ஆட்சி நிலையமாகக் கொண்டு வாழ்ந்தவன் இவன்; திருவாரூர்த்தியாக ராயன் மீது மீளா அன்பு கொண்டு, அவன் திருப்பெயர்களுள் ஒன்றாய புற்றிடங்கொண்டவன் என்பதையே தன்பெய ராகவும் மேற்கொண்டிருந்தான்; புலவர்கள்பால் பேரன் புடையவன்; அறவழி ஆட்சி உடையவன்; தன்னைப் புகலிடமாகக் கொண்ட அங்க நாட்டரசனைக் கலிங்க நாட்டு மன்னன் கொடுமை புரிந்தமை அறிந்து, அவ்விரு வர்க்குமிடையே பகை ஒழிக்க விரும்பிக், கலிங்க நாட் டானைத் தன்னை வந்து காணுமாறு அழைக்க, அவன் அது மறுக்கவே, அவன் மீது படையெடுத்துச்சென்று, அவனை வென்று, அவன் நாட்டை, அங்க நாட்டானுக்கு அளித்துத் துணை புரிந்தான்.

செங்குந்தன் கோளாந்தகன் சிறப்பு

54. "மூளா வடவைச் சிகரகிரி முடிகம் பிக்கு
[மாறுதஞ்செந்
தாளான் மடங்க வொருகூற்றந் தனிமும்
[மதில்காய்ச் சிறுமூரல்
வேளா ருயிரைப் பேர்க்கவனற் கண்ணும்
[விளங்கு முருத்திரனேர்
கோளாந் தகனெண் டோளான்கைக் குந்தம்
[வாகைக் குந்தமே."

உரை : மூளாவடவை - ஊழிக்காலத்திலல்லது பிற காலங்களில் மூண்டு எழாத வடவாமுகாக்கினியும்; சிகரகிரி - உயர்ந்த உச்சியினைக் கொண்ட, அட்டகுல பர்வதங்களும்; முடிகம்பிக்குமாறு - தலைநடுங்கும் வண்ணம்; ஒரு கூற்றம் - ஒப்பு உயர்வு அற்ற கூற்றுவன்; தம் செந்தாளான் மடங்க - தம்முடைய சிவந்த திருவடிகளால் உதையுண்டு, ஆற்றல் இழந்து அழிய; தனி - ஒப்பற்ற; மும்மதில் காய் - திரிபுரத்தை எரித்த; சிறுமூரல் - புன் முறுவலும்; வேளார் - காமவேளின்; உயிரைப் பேர்க்க - உயிரைப் போக்க; அனல் கண்ணும் - தீயைக்கக்கும் நெற்றிக் கண்ணும்; விளங்கும் - சிறப்பாகப் பொருந்திய; உருத்திரனே - சிவனே; ஒண்தோளான் - பருத்து பேரொளி வீசும் தோள்களையுடையவனான; கோளாந்தகன் - கோளாந்தகன் என்பவன் ஆவன்; கைக்குந்தம் - அவன் கையின் கண்விளங்கும் குந்தப்படை; வாகை - வெற்றிவிளங்கும்; குந்தமே - குந்தப்படையாம்.

விளக்கம் : வடவாமுகாக்கினி : பெண்குதிரை முகம் போலும் வடிவுடையதாய்க் கடலடியில் தங்கியிருந்து, ஊழிக்காலத்தில் தோன்றி உலகை அழிக்கும் தீ. அட்டகுல பர்வதம் : இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்ற எட்டு மலைகள். வேளார் : ஆர்விகுதி, அவன் அறிவின்மையால் உண்டாம் இழிவு குறித்து நின்றது. முடி கம்பிக்குமாறு, மடங்க, மும்மதில்காய் மூரல் என மாற்றுக. ஒண்தோளான் கோளாந்தகன்.

வரலாறு : கோளாந்தகன் ஊர் கொடுங்குன்றம்; தந்தை கொடுங்குன்ற நாட்டை ஆண்ட மதிகாதன். கோளாந்தகன் கலைபல கற்றவன்; விற்போர் வல்லவன்;

தன்னைப் பகைத்துத் தன்னோடு மற்போர் புரிய வந்த உணங்கன் எனும் வடநாட்டு மல்லனை, அம்மற்போரே புரிந்து வென்று துரத்தினான்.

புலியூர்ப் பள்ளிகொண்டான் பெருமை

55. "புண்ட ரீகமே குவளையே தளவமே பூமாவே
பிண்டி யேபெறும் சித்தசன் தன்குணம்
[பிழையாவென்
கண்ட வீரகண் டன்புலி யூர்த்தனி காத்தேசீர்
கொண்ட பள்ளி கொண்டான் கரதலத்திடைக்
[கொளுங்குந்தம்."

உரை : வென்கண்ட - பகைவரை வெற்றி கொண்ட; வீரகண்டன் - வீரகண்டாமணியை உடையோனாய; புலியூர் - சிதம்பரம் நகரை ; தனிகாத்தே - தனியரசு மேற்கொண்டு ; சீர்கொண்ட - புகழ்கொண்ட ; பள்ளிகொண்டான் எனும் செங்குந்தத் தலைவன் ; கரலத்திடை - கையில் ; கொளும் குந்தம் - ஏந்திய குந்தப் படை : புண்டரீகமே - தாமரையும் ; குவளையே - நீலோற்பலமும் ; தளவமே - முல்லையும் ; பூமாவே - மாம்பூவும் ; பிண்டியே - அசோகும், பெறும் சித்தசன் - ஆகிய மலர்களால் ஆன அம்புகளையுடைய மன்மதனுக்குரிய ; குணம் பிழையா - பண்புகளில் பிழையாது.

விளக்கம் : வென் கண்ட - வெற்றிகண்ட ; வெந் என்பது பாடமாயின் பகைவரை வென்று அவர் பின்புறத்தைக் கண்ட எனப்பொருள் கொள்க. மன்மதன் கணைகள்

ஐந்தனுள், தாமரை நினைத்தலையும், மாம்பூ, பசலைபாய் தலையும், அசோகம், உணவு மறத்தலையும், முல்லை, செய லற்றுக் கிடத்தலையும், நீலோற்பலம் கோறலையும் விளை விக்கும் என்ப; பள்ளி கொண்டான் குந்தமும், பகைவர்க்கு அவனை நினைப்பூட்டி, அவர் தோளைப் பொலிவிழக்கப் பண்ணி, போரச்சத்தால் உணவை மறக்கச் செய்து, அவரைச் செயலற்றவராக்கி, இறுதியில் அழிப்பதால், அது அவ்வைங்கணைக்கு ஒப்பாயிற்று.

வரலாறு: புலியூர்ப் பள்ளி கொண்டான், சிதம்பரம் செங்குந்தத் தலைவன் விடங்கன் என்பானின் மகனாவன். முருகவேளிடத்தும், தில்லை நடராசப் பெருமானிடத்தும் பேரன்புடையவன்; அவன் வாய் எப்பொழுதும், வேலும் மயிலும் துணை என ஒலித்துக் கொண்டேயிருக்கும். தில்லை நடராசனுக்குத் திருமுழுக்கிற்கு வேண்டுவனவற்றை விரும்பி மேற்கொண்டிருந்தான். அம்பலக் கூத்தன், தன் கனவில் தோன்றி இட்டகட்டளை மேற்கொண்டு சென்று, சிதம்பரத்தை முற்றுகையிட்டிருந்த சிரத்தாமன் என்ற ஆந்திர அரசனை வென்று துரத்தினன்.

பிணவன் பெருமை

56. "குணமார் தருமத் தெவ்வேந்தர் குலக்கோளரியே [குலத்தருவே
தணவா வண்மைச் சகம்பேசச் சகமே தாங்கும் [பூதரமே
பிணவா வென்று பகரார்வாய் பிளந்து சோரிப் [பெரும்பூதக்
கணம்வாய் நிரப்புங் குந்தன்போல் காணேங் [கேளோங் கற்றோரே."

உரை : தெவ்வேந்தர்குலக் கோளரியே - பகை அரசர் களுக்குக் கொடிய சிங்கம் போன்றவனே ; குலத்தருவே - விரும்பியதை விரும்பியவாறே வாரி வழங்கும் கற்பகத் தரு முதலாம், தேவத்தருக்கள் போன்றவனே ; சகம் - உலக மக்கள் ; தணவா வண்மை பேச - என்றும் வற்ருத வளத்தை வாயாரப் புகழுமாறு ; சகம் தாங்கும் - உலகை ஆளும் ஆட்சிப் பொறுப்பைத் தாங்கிய ; பூதரமே - மலை போன்றவனே; குணமார் - நற்குணங்கள் நிறைந்த; தருமம - அறவழி அறிந்த ; பிணவா - பிணவன் எனும் பெயருடைப் பெரியோய்; என்று - என்று; பகரார் - கூறிப் பாராட்டாத பகைவர்களுடைய ; வாய் பிளந்து - வாயைப் பிளந்து ; சோரி - அவர் உடலினின்றும் ஒழுகும் இரத்தத்தை ; பெரும் பூதக்கணம் வாய் நிரப்பும் - பெரிய பூதக்கணங் களின் வாய்நிறைய வார்க்கும் ; குந்தன்போல் - செங்குந்தத் தலைவன் பிணவன்போல் சிறந்தாரை ; கற்ருேரே - புலவர் காள் ; காணேம் - யாம் கண்டதில்லை ; கேளோம் - யாம் கேட்டதில்லை.

விளக்கம் : கற்ருேரே, பிளந்து நிரப்பும் குந்தன் போல் காணேம், கேளோம் என முடிக்க. குணமார் தருமப் பிணவா எனக்கொண்டு கூட்டுக. சகம் முன்னது ஆகு பெயர் ; சகத்தில் வாழ்வாரைக் குறித்தலான்.

வரலாறு : பிணவன் கடம்பூரில் வாழ்ந்தவன் ; கதம்பன் என்பான் அரிய பல தவங்கள் ஆற்றியதன் பயனுய், அவனுக்கு மகனுய்ப் பிறந்தவன் ; சிவனிடத்தில் நீங்கா அன்புடையவன் ; வேதாகமப் பொருள்களை விளங்க விரிவாகக் கற்றவன் ; உலகத்தவரைத் தன் உயிரெனக் கருதி ஓம்பும் உயர்ந்த அன்புடையவன் ; ஒரு நாள் மாலை இவன் தன் தலைநகரை அடுத்திருந்த ஒரு சோலையில் தங்கி யிருந்தான் ; அப்போது, தன் நாட்டிற்கு அண்மையில்

இருந்த ஒரு மலை நாட்டை ஆண்டிருந்த வேடர்குலத் தலைவன் ஒருவன், வேட்டை மேற்கொண்டு வந்து, ஒரு முயலைத் துரத்திக்கொண்டே, பிணவன் தங்கிருந்த சோலையுள் புகுந்தான் ; இயல்பாகவே அருள் உள்ளம் வாய்க்கப் பெற்ற பிணவன், வேடன் கொடுஞ் செயல் காணப் பொறுத்திலன் ; வேடனை அணுகி, முயலை வேட்டை யாடு வதை விடுத்துப் போமாறு வேண்டிக்கொண்டான். அவன் மறுக்கவே, அவனோடு போர் செய்து துரத்திவிட்டு வீடு திரும்பினான்.

கண்டியூர்ச் செங்குந்தத் தலைவன் சிறப்பு

57. "மிண்டிடாமன் மேவலீர் விளம்பிடாம லோருமின்
தொண்டிடாமல் வாழ்வதெங்ஙன் சூரபன்மன் [பட்டிடக்
கண்டவீர வாகுதேவர் கால்வருங் குலோத்துமன்
வண்டுலாவு கண்டியூரன் வயிரவாகு குந்தமே."

உரை : மேவலீர் - பகைவர்காள் ; சூரபன்மன் - சூரபதுமன் முதலான அவுணர்கள்; பட்டிடக்கண்ட - அழிந்து மறையப் பெரும்போர் செய்து வெற்றி கண்ட ; வீரவாகு தேவர் - வீரவாகுதேவரின் ; கால்வரும் - வழியில் வந்த ; குலத்துமன் - செங்குந்தர் குலத்தின் சிறந்த அரசனாகிய ; வண்டு உலாவும் - தேனைத்தேடி உண்ணும் வண்டுகள் ஓயாது உலாவும் வளம் மிக்க ; கண்டியூரன் - கண்டியூர்ச் செங்குந்தத் தலைவன் கையில் உள்ள ; வயிரவாகு குந்தம் - வயிரம் போலும் உறுதி வாய்ந்த குந்தப்படையோடு ; மிண்டிடாமல் - பகைத்துக் கொள்ளாமலும் ; விளம்பிடா

மல் - இகழ்ந்து எதையும் கூறுமலும் வாழும் வாழ்க்கை முறையினை ; ஓருமின் - ஆராய்ந்து மேற்கொள்ளுங்கள் ; தொண்டு இடாமல் - அக்குந்தப் படைக்குத் தொண்டு செய்யாமல் ; வாழ்வது எங்ஙன் - வாழ்வது எவ்வாறு இயலும் ? இயலாது,

விளக்கம் : கண்டியூரன் ஊர் வளம் மிக்கது ; அவன் கைக் குந்தம், சூரபதுமனைக் கொன்ற குந்தம் உடையது ; வளத்தாலும் வன்மையாலும், கண்டியூரன் சிறந்திருந்தமையால், அவனுக்குத் தொண்டு செய்வார் வாழ்வர் ; அது மறுத்துப் பகைப்பார் அழிவர் என அவன் புகழ் பாடிய வாறு இது.

வரலாறு : திருக்கண்டியூர்ச் செங்குந்த மன்னன் விபுலன் என்பவன் மகன், இக்கண்டியூரான் ; இவன் இயற் பெயர் மதுகையான் என்பது. இவன் காலத்தில், கண்டியூருக்கு வடக்கே உள்ள காட்டில் பிரம்மராக்கன் என்னும் கொடியவன் ஒருவன் வாழ்ந்து வந்தான் ; அவன் கொடுமையால், தன் குடிகள் படும் துயர்கண்ட கண்டியூரான், அக்காட்டுட் புகுந்து, தன் குந்தப் படையால், அக்கொடியோனைக் கொன்று உயிர் போக்கினுன்.

முதுகுன்ற மணியன் பெருமை

58. *“மூத்த முதுகுன்றக் குரிசின் முதிரு மணவைப்*
[பாராளன்
பாத்தனென்னு மணியன் கைக்குந்தங்
[கொடுத்துப் பகரவே
பூத்த மார்பத் தார்பறித்துப் பூழிபடவே
[வீழ்ந்திறைஞ்சிக்
கோத்துச் செங்கை மலர் கூப்பிக் குறுகார்
[சிறுகி வரக்கண்டான்.”

உரை : முதுகுன்ற மூத்த குரிசில் - திருமுதுகுன்றத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த பெரிய அரசனும்; மணவை முதிரும் பாராளான் - மணவை எனும் நகரத்திலிருந்து நாடாண்டிருந்த பெரிய அரசனும்; பாத்தன் என்னும் - வில்லாற்றலில் விஜயன் எனப் பாராட்டிப் புகழ வல்ல; மணியன் - மணியன் என்பானுடைய; கைக் குந்தம் கொடுத்து - கையில் குந்தப்படை கொடுத்து; பகரவே - பகைவர் தரும் தொல்லைகளைக் கூறவே; குறுகார் - அப்பகைவர்கள்; பூத்த - மலர்ந்த; மார்பத்தார் பறித்து - தம் மார்பில் தரித்திருந்த வெற்றிமாலைகளைக் கழற்றி எறிந்து; பூழி படவே வீழ்ந்து இறைஞ்சி - தம் உடலில் மண் படியுமாறு கீழே வீழ்ந்து வணங்கி; செங்கை மலர் - தாமரை மலர் போன்ற தம் செங்கைகள் இரண்டையும்; கோத்துக் கூப்பி - ஒன்று சேர்த்துக் குவித்துக் கும்பிட்டு; சிறுகி வரக் கண்டான் - தம் ஆற்றல் இழந்து அடங்கிவரப் பண்ணினன்.

விளக்கம் : முதுகுன்ற மூத்த குரிசில் எனவும், மணவை முதிரும் பாராளன் எனவும் மாற்றி முடிக்க. பார்த்தன், பாத்தன் எனக் குறைந்து வந்தது. அவர் பகர, மணியன், வரக்கண்டான் என எழுவாய் வருவித்து முடிக்க. செங்கைமலர் என்பதையும் மலர்ச்செங்கை என மாற்றுக.

வரலாறு : மணியன் எனும் இயற்பெயர் பூண்ட இச்செங்குந்த மன்னன்; முதுகுன்ற நாட்டை ஆண்டிருந்தவன்; இவன் தந்தை பெயர் பாராயணன் என்பது. திருமுதுகுன்ற நகரில் கோயில் கொண்டிருக்கும் பழமலை நாதன் பால் பேரன்புடையவன்; அவ்வாண்டவனுக்கு வேண்டும் பணிகள் பல ஆற்றியுள்ளான். போர்ப்பயிற்சி நன்கு வாய்க்கப்பெற்றிருந்தான். இவன் காலத்தில் மாளவ நாட்டு

மன்னன், தமிழகத்தின்மீது படையெடுத்து வந்திருந்தான் அவனை வென்று துரத்த மாட்டாத, முதுகுன்றத்து அரசன் பாராயணனும், மணவூர் மன்னன் மந்தகாசனும், மணியன் ஆற்றல் அறிந்து, அவனை, அப்போதே அரசனாக்கி; மாளவ நாட்டு மன்னன் படையெடுப்பைத் தடுக்குமாறு வேண்டிக் கொண்டனர்; மணியன், தந்தை தந்த குந்தப் படையால், முன்வெற்றிகண்ட மாளவ நாட்டானை வென்று துரத்தினான்.

தஞ்சை வேம்பன் சிறப்பு

59. "பஞ்சம் வெம்பத் தரும்பனையே நாவான் மிகவே [பாடாது
தஞ்சை வேம்பனைப் புகழ்ந்தே மதுமுன் செய்த [தவமே யாம்
எஞ்ச வெளிதோ வூழியுருத் திரன்கைக் கொளுமூ [விலைவேலே
வஞ்ச மாயை யவதரித்த திவன்கைக் குந்த [வரவாமால்."

உரை: வஞ்ச மாயை அவதரித்தது - வஞ்சம் நிறைந்த மாயா சக்தியே உருவு கொண்டுவந்ததாய; இவன் கைக்குந்த வரவு - தஞ்சை வேம்பன் கையில் விளங்கும் குந்தப் படையின் வரவு; ஊழி உருத்திரன் - ஊழிக் காலத்தில் தோன்றும் உருத்திரமூர்த்தி; கைக்கொளும் -

கையில் ஏந்தும்'; மூஇலேவேல் - மூவிலேவடிவாய் அமைந்த முத்தலேச் சூலமேயாம்; ஆதலின்; எஞ்ச - அவன் கைக் குந்தப் படையைப் பாராட்டாது கைவிட; எளிதோ - எளி தாமோ? எளிதாகாது என அறிந்தமையால்; நாவால் - எம்முடைய நாவால்; பஞ்சம் வெம்ப - வறுமைத்துயர்வாட; தரும் - பொருள்களை வாரிவழங்கும்; பனையே - பனைமாலே அணிந்த சேரவேந்தனை; மிகவே பாடாது - மிகவும் பாராட்டாமல்; தஞ்சை வேம்பனைப் புகழ்ந்தேம் - தஞ்சை வேம்பனைப் பாராட்டினேம்; அது - அவ்வாறு அவனை மறக்காமல் பாராட்டியது; முன் செய்த தவமேயாம் - யாம் முற்பிறவியில் செய்த தவத்தின் பயனும்.

விளக்கம் : சேரன் மிகவும் பாராட்டவேண்டியவன் என்பார். அவன், "பஞ்சம் வெம்பத் தருபவன்" என்றார். தஞ்சை வேம்பனைப் பாராட்டாதொழியின், அழிதல் உறுதி; அதனல், அவனைப் பாராட்டி உயிர் பிழைத்தது முன்வினைப் பயன் என்றார். பனை - பனைமாலேக்கு ஆகி அம்மாலேக்கு உரியானுக்கு ஆகிற்று.

வரலாறு : திருவையாற்றில் வாழ்ந்து, தஞ்சையை ஆண்டு கொண்டிருந்த குமரன் என்பானின் மகனே, இத் தஞ்சை வேம்பன்; வரலாற்றுச் சிறப்புடையவன் இவன்; திருவையாற்றுத் திருக்கோயில் நிர்வாகிகளுள் இவனும் ஒருவன்; பராந்தகச் சோழன், முதல் அமைச்சனுய்ப் பணி யாற்றியவன்; சோழர் தலேநகர் கருவூரை வாழ்விடமாக் கொண்டவன்; இராட்டிரகூட மன்னன் வல்லானே வெல்ல வீர நாராயணர்க்குத் துணைபுரிந்தாருள் வேம்பன் தலே சிறந்தவன்.

மாங்கலியப் பிட்சையிட்ட மாண்பு

60. "வல்லான் றிருத்தேவி மங்கலியம் பிழையாமன்
[மடிதா னேற்றிங்
கெல்லோரு மங்கலியப் பிட்சையிடு மெனத்தாள்
[வீழ்ந் திரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புக ழெனக்கருதி யோகற்பின்
[கொண்ட வாய்மை
நல்லார்க ளிருந்தவையின் புகழ் கைக்கோ
[காத்ததுகொ னஞ்செங்குந்தம்."

உரை : வல்லான் தன் திருத்தேவி - வல்லான் எனும் இராட்டிரகூட மன்னனுடைய அழகிய மனைவி; மங்கலியம் பிழையாமல் - தன் கணவன், பராந்தக சோழன் படைத் தலைவராய, வீரன், நாராயணன் உள்ளிட்ட பள்ளிருவரால் தோல்வியுற்று, அவரால் உயிரிழந்து போயின் தன் மங்கலியம் மாண்பிழந்து போகும் என அஞ்சி, அம்மங்கலியம் அழியாவாறு; மடிதான் ஏற்று - தன் முந்தானி ஏந்தி; இங்கு எல்லோரும் மங்கலியப் பிச்சையிடும் என - ஆங்கிருந்த அச்செங்குந்தத் தலைவர்கள் முன்னின்று, "ஐயன்மீர்! நீங்கள் எல்லோரும் நான் கைம்பெண் ஆகாவாறு, எனக்கு மங்கலியப் பிச்சை அளித்து என் கணவன் உயிரைத் தாருங்கள்" என்று; வேண்டி - வேண்டி; தாள் வீழ்ந்து இரப்ப - அவர் திருவடிகளில் வணங்கி இரந்து நிற்க; நம் செங்குந்தம் - நம் செங்குந்தத் தலைவர்கள் காத்தது - வல்லான் உயிரைக் கொல்லாது காப்பாற்றியது; கொல்லாமல் விடுதல் - பணிந்து இரந்தார் உயிரைக் கொல்லாது விடுதல்; புகழ் எனக் கருதியோ கொல் - தமக்குப் புகழாம் என எண்ணியோ; கற்பின் வாய்மை கொண்ட -

கற்பாகிய **உண்மை** ஒழுக்கத்தைக் கைக்கொண்ட; நல்லார்கள் - மகளிர்; **அவையின்** இருந்து புகழ் கைக்கோ கொல் - அவையின் கண் இருந்து, கற்பின் பெருமைக்கு மதிப்பளிக்கும் தம்மைப் புகழ்தற்கோ அறியோம்.

விளக்கம் : செங்குந்தம் : ஆகுபெயர்; அக்குந்தத்தை ஏந்திய குந்தர்களைக் குறிப்பதால், குந்தம் காத்தது, கருதியோ கொல், புகழ்கைக்கோ கொல் என மாற்றுக, கொல் : ஐயப்பொருள் தருவதோர் இடைச்சொல்.

வரலாறு : வல்லானைப்பற்றிக் கொல்ல முனைந்த வீர நாராயணன் முதலாம் வீரர், அவன் மனைவி முன்வந்து, மடியேந்தி மாங்கலியப் பிச்சை கேட்க, அவனைக் கொல்லாது விடுத்தனர் என்பது வரலாறு. இராட்டிரகூட மரபினர், இன்றும், தங்கள் திருமண நாளன்று, பன்னிரண்டு மட்குடுவைகளில் பொங்கல் இட்டு வழிபடுவது, இவ்வரலாற்றை உறுதி செய்வதாம்.

பகைவனுக்கு உயிர் அளிக்கும் பெருமை

61. "எல்லாக்கா லத்தினுமொன் றேற்பவருக் [கில்லையெனுஞ்
சொல்லானது கற்றுஞ்சொல்லறியா ரேந்துகுந்தம்
வல்லானைக் கொல்லாமல் மனைவிக்கு மங்கலியம்
உல்லாசத் துடனளிக்கு முதவியதொன் [றறிந்தேமால்."

உரை : எல்லாக் காலத்திலும் - கொடை வழங்கத் தக்க வளம்நிறைந்த காலம், அவ்வளம் அற்றகாலம் ஆகிய

எல்லாக் காலங்களிலும்; ஒன்று ஏற்பவருக்கு - தம்மிடம் வந்து ஒரு பொருளை இரந்து நிற்பவருக்கு; இல்லை எனும் சொல்லானது கற்றும் - இல்லை எனும் ஒரு சொல் உலகில் வழங்குவதை அறிந்திருந்தும்; சொல்லறியார் - அவ்வாறு இல்லை எனக்கூறி வழங்குவதை மறுக்க அறியாத செங் குந்தர்; ஏந்து குந்தம் - ஏந்தும் குந்தப்படையும்; வல் லானை - தன்னை வந்து எதிர்த்துப் போரிட்டுத் தன் கைப் பட்டு உயிர் இழக்கும் நிலையுற்ற வல்லான் எனும் இராட் டிரகூட மன்னனை; கொல்லாமல் - கொல்லாமல் விடுத்து; மனைவிக்கு - அவன் மனைவிக்கு; மங்கலியம் - மாங்கலியப் பிட்சை; உல்லாசத்துடன் அளிக்கும் - உள்ளம் உவந்து அளிக்கும்; உதவியது ஒன்று அறிந்தேம் - உதவிய ஒரு ஒப்பற்ற செயலை அறிந்து மகிழ்ந்தோம்.

விளக்கம்: ஆல் - அசை; குந்தமும் என எச்சவும்மை விரித்துப் பொருள் கொள்க. இல்லை எனும் சொல்லைச் சொல்லியறியாத செங்குந்தர்களின் குந்தமும் உதவியது என்க. உதவியது ஒன்று - உதவிய ஓர் ஒப்பற்ற செயல்.

தலைகொடுத்த தனிப்பெருமை

62. "முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றுதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே."

உரை: வீரக்குந்தமே - வீரமும் வெற்றியும் விளங் கும் வீரன், நாராயணன் என்ற குந்தத் தலைவர் இருவரும்;

முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழை யும் வளர்க்கும்; இராசராசேந்திரன் முன்னம் - இராச ராசேந்திர சோழனாகிய பராந்தகன் முன்னர்; சுத்த வீரத் திறம் - தங்களின் ஒப்பு உயர்வு அற்ற தூயவீரத்தின் உயர்வு; துலங்குதற்கு - உலகெலாம் பரவி விளங்குதற்கு; ஒரு பொய்த்தலை - வல்லான் தந்த தன் பொய்த்தலையை; கொடுத்தலின் - கொடுப்பதால்; புகழ் பெறாது என - புகழ் வாய்க்காது என்று கருதி; மெய்த்தலை - தங்கள் இரு வருடைய உண்மைத் தலைகளையே; கொடுத்தன - வெட்டிக் கொடுத்தனர்.

விளக்கம் : குந்தம் கொடுத்தன எனக் கூறப்பட்டுள தேனும், "குந்தர் கொடுத்தனர்" என்றே பொருள் கொள்க.

வரலாறு : வடநாட்டில், நல்லூர் எனும் நகரை அரசிருக்கையாகக்கொண்டு வாழ்ந்த இராட்டிர கூடர் என்ற மன்னர் மரபில், வல்லான் என்பவன் ஒருவன் இருந் தான்; வல்லமை மிக்க அவன், பெரும் படையோடு புறப் பட்டு, வழியில் உள்ள அரசுகள் பலவற்றையும் அழித்துக் கொண்டே வந்து, கடம்பூர் எனும் தமிழகத்து ஊரை அடைந்தான்; அங்கே, ஆழ்ந்த நீர்நிலை ஒன்று கண்டு, அதன் நடுவே, இருப்புத் தூண்கள் நாட்டிப் பண்ணிய பெரிய கோட்டையில் வாழத் தொடங்கினான். அவ்வாறு தமிழகம் புக்க அவன் கடம்பூரைச் சூழ இருந்த நாடுகளில் புகுந்து கொடுமை பல புரிந்தான்; அவன் கொடுமை கேட்டுக் கோபங் கொண்டான், தமிழகத்தைத் தன் ஆட்சிக் கீழ்க்கொண்டிருந்த சோழன் பராந்தகன்; அவனை அழிக்கத் துணிந்தான்; தன் படைவீரர்களாய, வீரன் முதலாம் செங்குந்தர் பன்னிருவர்பால், வல்லானை அழிக்கும் பணியினை ஒப்பித்தான்; பாரந்தகன் இட்ட பணி மேற்

கொண்டு, வல்லானை அழிக்க அவனூர் நோக்கிச் செல்லும் செங்குந்தர் பன்னிருவரும் "நமக்குள்ளே, ஒருவர் இறப்பினும் ஏனையோரும் உயிர் இழத்தல் வேண்டும்" என உறுதி பூண்டனர்.

வல்லான்மீது போர்தொடுத்தனர்; தொடக்கத்தில், கச்சித்தனியன் துர்க்கைக்கும், ஒற்றியூரன் காளிக்கும் களப் பலி ஆயினர். முதுகுன்ற மணியனும், சோளாந்தகனும், உயிர் இழந்து, உயிர் இழந்த தம் உடல்களை, அகழியைக் கடக்கும் புணையாக்கிப் பெருந்துணைபுரிந்தனர்; தன் அரணை அணுகுவோரை அழிக்க வல்லான் வளர்த்து வைத்திருந்த செந்நாய்களுக்குப் புற்றிடங்கொண்டானும், புலிகளுக்குக் களந்தையானும், சிங்கங்களுக்குப் புலியூர்ப்பள்ளி கொண்டானும் உணவாகி உயிரிழந்தனர்; அரணைச் சுற்றி எரிந்து கொண்டிருந்த செந்நெருப்பை அவித்து, உட்புகுவார்க்கு வழி வழங்கப், பிணவன், பிணமாகி அந்நெருப்பில் வீழ்ந்தான்; அகழியில் வாழ்ந்த முதலைகளுக்கு உணவாகிக் கண்டியூரன் தன் உயிர் விட்டான்; இருப்புத் தூண்களின் வழுவழுப்பை மாற்ற, மணலோடு கலந்து பூச உதவும் இரத்தத்தை அளித்து, தஞ்சை வேம்பனும் தன்னுயிர் தந்து வீழ்ந்தான்; இவ்வாறு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையால் துணைசெய்ய, வீரனும், நாராயணனும், அரணைக் கடந்து, வல்லானைக் கைப்பற்றிக்கொண்டனர்; தம் கைப்பட்ட வல்லானைக் கொல்ல வாளோங்கிய நேரத்தில், வல்லான் மனைவி, அனங்கவல்லி, ஆங்கு வந்து, அவர்காலில் வீழ்ந்து வணங்கி, மடி ஏந்தி மாங்கலியப் பிச்சை கேட்டாள். இல்லை எனக் கூறி அறியாத நல்லகுடியில் வந்த அவர்கள், அவள் வேண்டுகோட்கு இணங்கி, வல்லானைக் கொல்லாது விடுத்தனர்; வீர நாராயணரின் விழுமிய செயல்கண்டு வியந்த வல்லான். அவர்களைப் பணிந்து, வடநாடு சென்றான்.

வல்லானை வடநாடு போகவிடுத்து, வீரநாராயணர் இருவரும், பராந்தகன் அவை அடைந்தனர்; தன் அவை அடைந்த தன் படைத்தலைவரை, "வல்லான் தலை எங்கே, அவன் தலையை நீங்கள் கொய்த விதம் யாது; அதை விளங்க உரைமின்" என்றான்; உடனே வீரர் இருவரும், வாள் எடுத்துத் தம் தலைகளைக் கொய்து வேந்தன் முன் வைத்து, நடந்ததை விளங்க உரைத்தனர்; அது கேட்ட சோழன், "இவ்வளவு கொடுமைக்கும் காரணனான, நான், இனியும் உயிர் வாழ்வதா" எனக் கூறியவாறே, தன்வாளை எடுத்தான்; அந்நிலையில் குந்தர் குலக்கடவுளாய குமரவேள் தோன்றி, இறந்தவர் அனைவரையும் உயிர்பெற்றெழ அருள் செய்து மறைந்தார்; மன்னனும், வீரர் பன்னிருவரும் முருகன் அருட்டிறம் கண்டு அகமகிழ்ந்தனர்.

குந்தர் மற மாண்பு

63. "பைந்தமிழ்க் காவலர் பகரும் பாடலார்
கந்தவே டான்மகிழ் கைலைக் காவலர்
வந்தவீ ரப்படைத் தலைவர் வந்துழிச்
சிந்தவே கழுத்துடற் செகுத்த குந்தமே."

உரை: பைந்தமிழ்க் காவலார் - செந்தமிழைப் பேணி வளர்க்கும் புலவர் பெருமக்கள்; பகரும் - பாராட்டிப் பாடும்; பாடல் ஆர் - பாடலை ஏற்றுக்கொள்ளும்; கந்த வேள் - முருகப் பெருமான்; மகிழ் - மகிழ்ந்து வாழும்; கைலைக்காவலார் - கைலை மலையைக் காக்கும் கடமை மேற்கொண்ட நவவீரர் வழியில்; வந்த வீரப்படைத் தலைவர் - வந்து தோன்றிய வீரப்படைத் தலைவராய செங்குந்தர்;

கழுத்து - தம் தலைகளை ; உடல் சிந்த - உடலினின்றும் வேறுபடுத்தி வீழ்த்துவதற்கு ; வந்துழி - ஏற்ற காலம் வாய்த்தவிடத்து; செகுத்த - அவர் விரும்பியவாறே வெட்டி வீழ்த்திய ; குந்தமே - குந்தப்படையே.

விளக்கம் : தலைவர் கழுத்து சிந்த வந்துழி, செகுத்த குந்தம் என வினை முடிவு செய்க. அவ்வக்கால உலகியல் மாறுபாடுகளால், மொழி மாறுபட்டு அழிந்துவிடாவாறு, மொழி மரபைக் காப்பவர் புலவர்களாதலின், அவரைப் "பைந்தமிழ்க் காவலர்" என்றார். மண்ணுலக வாழ்வை மதியாது, விண்ணுலகில் வெற்றிச் சிறப்போடு வாழ விரும்பிய காலத்தில் வீரர்கள், தம் படைக்கலங்களால், தம் தலைகளைத் தாமே வெட்டிக்கொள்வது வழக்கமாம். செங் குந்த வீரர், உண்மைப் பெருவீரராதலின், அவர்கள் அவ் வாறு வீர சுவர்க்கம் புக, அவர் கையில் ஏந்திய குந்தப் படை துணைபுரிந்தது.

புலிக்கொடி அளித்த பெருமை

64. "தில்லைமூ தூர்நடஞ் செய்யு மாலயத்
தொல்லையிற் பொறித்திடு முழுவை முத்திரை
எல்லையி னுவலொன் பதின்மர்க் காக்கியோர்
வல்லையிற் றுணையொடு மருவுங் குந்தமே."

உரை : நடம் செய்யும் ஆலயத்து - இறைவன் திரு நடனம் புரியும் பெரிய கோயிலைக்கொண்ட ; தில்லைமூதூர் - சிதம்பரம் என்னும் பழம்பெரும் பேரூரில் ; தொல்லையில் - னிமிகப் பழைய காலத்திலிருந்தே ; பொறித்திடும் - அவ்

ஹூர்ச் சோழ அரசர்களால் பொறிக்கப்படும்; உழுவை முத்திரை - புலிவடிவாகிய முத்திரையை; எல்லையில் நாவல் - அளந்து காணமாட்டாது பரவிய நாவலந் தீவில் வாழ்பவராகிய; ஒன்பதின்மர்க்கு - நவவீரர் வழிவந்த செங்குந்தர்க்கும்; ஆக்கி - உரிமையுடையதாக்கி; ஓர் - ஒப்பற்ற; வல் அயில் - வன்மைமிக்க வேலாயுதமாகிய; துணையொடு - துணையோடு; மருவும் - இணைந்து வாழும்; குந்தம் - குந்தப்படையே

விளக்கம் : சோழர்க்குரிய புலிக்கொடி, செங்குந்தர்க்கும் உரித்து என்பது, புலிக்கொடி மரபு இரண்டினுக்கும் போந்ததால்'' (ஈட்டி 42.) என்று முன்னர்க் கூறப்பட்டதாலும், குந்தம், வேலைத் துணையெனக்கொண்டது என்பது, "அயிலை நல்துணையென ஆக்கும் குந்தம்'' (ஈட்டி : 30) எனக் கூறப்பட்டதாலும் பெறப்படும். "நடம் செய்யும் ஆலயத் தில்லைமூதூர்'' என மாற்றுக. தில்லை மிகப்பழைய ஊர் என்பது, "தில்லை மணி திகழும் அம்பலத்தே மன்னிக், கூத்தை ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ அணி ஆரூர் கோயிலாக்கொண்ட நாளே'' என்ற பாடலாலும் புலனுதல் அறிக.

பரணிகொண்ட பெருமை

65. "எந்தையா மம்மை பாகத் திறைவனை வணங்கி [யாமே

பைந்தமிழ்ப் பரணிசெய்த பாடலோ டந்த மாக

வந்தமா மடவா ராட வரியணை யிருந்த வீரர்

குந்தமே குந்தம் வேறு குந்தமு முளதோ கூறு.''

உரை : யாம் - ஒட்டக்கூத்தனாகிய நான்; எந்தை யாம் - என் தந்தையாகிய; அம்மை பாகத்து இறைவனை - உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்ட சிவ பிரானை; வணங்கி - வழிபட்டு; பைந்தமிழ் - பைந்தமி ழால்; செய்த - ஆக்கிய; பரணிப் பாடலோடு - பரணி எனும் பாராட்டுப் பாடலைப் பெற்றதோடு; வந்தமா மடவார் - அரசவைக்கு வந்த அழகிய ஆடு மகளிர்; அந்த மாக ஆட - அழகாக ஆட; அரியணை இருந்த - அரியணை மீதமர்ந்திருந்த; வீரர் - செங்குந்த வீரர்களின் கையின் கண்விளங்கும்; குந்தமே குந்தம் - குந்தப்படையே உயர்ந்த குந்தப்படையாகும்; கூற - உலகத்தார் பாராட்டிக்கூற; வேறு குந்தமும் உளதோ - வேறு குந்தப்படையும் உளதோ? இல்லை.

விளக்கம்: பைந்தமிழால் செய்த பரணிப் பாடல் என, மூன்றும் வேற்றுமை விரித்து, மாற்றி முடிக்க. பாட லோடு அரியணை இருந்த வீரர் என்க. ஒட்டக் கூத்தர், குந்தர் மீது பரணியும் பாடினார் என்பதற்கு இச்செய்யுள் ஓர் எடுத்துக்காட்டு.

சிரச்சிங்காதனம் இட்ட சிறப்பு

66. **"வரச்சிங் காதன வனவர் தம்பிரான்**
தரச்சிங் காதனந் தன்னி லேறியே
துரைச்சிங் காதனந் தொழுங்க விக்கிடுஞ்
சிரச்சிங் காதனச் சீர்செங் குந்தமே."

உரை : வரச் சிங்காதன - முசுகுந்தச் சோழன் பண்டு ஆற்றிய பெருந்தவத்தின் பயனாய் வந்த அரியணையை

உடைய ; வளவர் தம்பிரான் - சோழர் குலத்தோன்றலாய குலோத்துங்கன் ; தர - அன்புடன் கொடுக்க ; சிங்காதனம் தன்னில் ஏறி - அவ்வரியணைமீது ஏறி அமர்ந்து ; துரைச் சிங்காதனம் தொழும் - சிங்காதனங்களுள் சிறந்த சிங்காதனத்தில் வீற்றிருக்கும் இறைவனைத் தொழும் ; கவிக்கு - புலவனாகிய ஒட்டக் கூத்தனுக்கு ; சிரச்சிங்காதனம் இடும் - தம் குலத்தலைப் பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் தலைகளைக் கொய்து கொணர்ந்து, அத்தலைகளால் ஆன சிங்காதனம் அளித்த ; சீர் - சிறப்பினை உடைய ; செங்குந்தம் - செங்குந்தப்படையே ; அக்குந்தப்படை ஏந்திய செங்குந்தத் தலைவர்களே.

விளக்கம் : சிங்காதனம் ஏறி, தொழும் கவி என மாற்றுக, " இறைவனை வணங்கி யாமே பைந்தமிழ்ப் பரணி செய்த பாடல்" என அவரே கூறுவதால், " துரைச் சிங்காதனம் தொழும் கவி" என்பதற்கு இவ்வாறு பொருள் கூறப்பட்டது. துரை - சிறப்புடையது ; உயர்வுடையது.

இதுவுமது

67. "வேட்டுமா னாடரி தாய வேணியர்
சூட்டுதாள் வாரிசத் துணைக ளேத்தியே
யாட்டுக சென்னியை அலர்த்தி யேயெனக்
காட்டுதற் கேயரி கவின்கைக் குந்தமே."

உரை : மால் - திருமால் ; வேட்டு - திருவடிகளைக் காண விரும்பி ; நாட அரிதாய - பலகோடி ஆண்டு தேடியும் காண அரிதாய ; வேணியர் - சடையுடைய சிவபிரானின் ; சூட்டு - அவன் அன்பர்களால் தம் தலைமீது

சூட்டிக்கொள்ளப் பெறும்; தாள்வாரிசத்துணைகள் - திருவடிகளாய தாமரை மலர்கள் இரண்டினையும்; ஏத்தியே - தொழுது; அலர்த்தி - முகம் மலர்ந்து; சென்னியை ஆட்டுக - தலைகளைச் சிறிதே ஆட்டுக; என - என்று யான் கூற; காட்டுதற்கே - தங்கள் வீரத்தையும், என் புலமைப் பெருமையையும் உலகத்தவர்க்குக் காட்டுவதற்காகவே; அரி - தலைகளை அரிந்து கொடுக்கும்; கவின் - அழகிய; கைக் குந்தமே - செங்குந்த வீரர்களின் கையின்கண் விளங்கும் குந்தப்படையே.

விளக்கம் : நாட அரிதாய என வரற்பாலது, நாடரிதாய என வந்துளது. மால்வேட்டு நாடரிதாய என்றும், அலர்த்தியே சென்னியை ஆட்டுக என்றும் மாற்றுக.

சிவனுடைய பழிபோக்கிய சிறப்பு

68. **"விண்டு வேதனு நாடரிதாகிய விமலன்**
பண்டு தாருகப் பிரமகத் திப்பழி போகக்
கொண்டு தாமெனக் கடுகியே குடிவழித் தொன்மை
கண்டு தாங்கழுத் தரிந்தது கவின்கவின் குந்தம்."

உரை : விண்டு - திருமாலும்; வேதனும் - பிரமனும்; நாடரிதாகிய விமலன் - தேடியும் காணமாட்டாத சிவபரம் பொருளுக்கு; பண்டு - முன்னே; தாருகப் பிரமகத்திப்பழி - தேவதாருவனத்தில் நேர்ந்த பிரமகத்தியாகிய பழி; போக - அப்பரமனை விட்டு நீங்க; கொண்டு - உள்ளத்தில் கருத்துக் கொண்டு; தாம் என - அப்பழியை நீக்க வேண்டியவர் தாமே என்று; குடிவழித் தொன்மை கண்டு - தம் குலத்

தின் பழம் பெரும் பண்பாட்டினையும் எண்ணி; கடுகியே - விரைந்து; தாம் கழுத்து அரிந்தது - தாம் தம் கழுத்தை அரிந்து, அவன் கைக்கபாலத்தில் தம் இரத்தத்தைச் சொரிந்தவர்; கவின் கவின் குந்தம் - உயர்ந்த அழகு வாய்ந்த குந்தர் குலத்தவராவர்.

விளக்கம் : பரமசிவன் விமலன்; மலம் அற்றவன்; அவனையும் பற்றிக்கொண்டது ஒரு பெரும் பழி; பழியற்றபரனைப் பற்றிய பழியைப் போக்கினவர் குந்தர்; என்னே குந்தர் குலப்பெருமை எனச் செங்குந்தர் சிறப்புக் கூறியவாறு இது. பிரமனைக்கொன்ற பழிபோக, சிவன் ஏந்தித் திரிந்த கபாலம் நிறையுமாறு இரத்தம் தந்தவருள் குந்தர்குலமுன்னோரும் ஒருவராவர் என்பது வரலாறு.

செங்குந்தப் படையின் சிறப்பு

69. "தவந்தனிச் செய்வதென்? தலைச்சிங் காதனம்
உவந்துபா வாடையிட் டோடுஞ் சோரிமேல்
நவந்தனிற் பாடிய நங்க வித்திறஞ்
சிவந்திடச் செய்தது திருச்செங் குந்தமே."

உரை : உவந்து - குந்தர்குலத் தலைவர்கள், உள்ளம் விரும்பி; தலைச் சிங்காதனம் - ஆயிரத்தெட்டுத் தலைகளால் ஆன சிங்காதனமும்; பாவாடை - இரத்தப் பாவாடையும்; இட்டு - அமைத்தும், விரித்தும்; ஓடும் சோரிமேல் - அச் சிங்காதனத்தினின்றும் ஓடும் இரத்தத்தின்மேல் இருந்து; நவந்தனிற்பாடிய - புதுமையாகப் பாடிய; நம் கவித்திறம் - நம்புலமையின் பெருமை; சிவந்திட - உலகெலாம் பரவ;

செய்தது - பெருந்துணை புரிந்தது ; திருச்செங்குந்தம் - செங் குந்தர் கையில் விளங்கும் அழகிய செங்குந்தமாகும் ; தனி தவம் செய்வது என் - உலகீர் குந்தத்தின் பெருமை இது வாம் என்பதை மறந்து, காட்டில் சென்று, தனியே கிடந்து, தவம் செய்வது ஏனோ?

விளக்கம் : பாவாடை இட்டு, சிவந்திடச் செய்தது குந்தம் என வினை முடிவு செய்க. செந்நிறம் கண்ணைப் பறிக்கும் பேரொளி வாய்ந்தது ஆதலின், புகழ் பரவ என் பதற்குச் "சிவந்திட" என்றார். தலை வேறு, உடல் வேறு ஆக்கி, மறுவலும் இரண்டையும் ஒன்றுகூட்டி உயிர் கொளச் செய்த சிறப்புடையது குந்தம்; ஆகவே, அதை வணங்கின், வேண்டுவார் வேண்டும் பயன்களெல்லாம் வாய்க்கும் என்பது கருத்து. வனம் புகுந்து தவம் செய்வது விடுத்து வேலினை வணங்குங்கள் என வேலின் பெருமை பாராட்டியது இது.

இதுவுமது

70. "வீணுக்கே ருத வாய்மை விளம்பிடா வெற்றி யாளர்
ஆணுக்கே ருய்ப்பி றந்தோ ரடுபுவிப் பதாகை
[மன்னர்
நாணுக்கே ருத சாப நாட்டியே யிறுத்த மாறன்
மாணுக்கே ருத மாற்று ரடைந்திட மருவுங்
குந்தம்.'

உரை : வீணுக்கு - பயன் இல்லாமல் ; ஏருத - பொருந்தாத ; வாய்மை - வாய்ச் சொற்களை ; விளம்பிடா - என்றும் கூறி அறியாத ; வெற்றியாளர் - வெற்றிச் சிறப்பு

வாய்த்தவரும்; ஆணுக்கு - ஆடவர்களுள்; ஏருய்ப் பிறந்தோர் - ஆண்சிங்கம்போல் வந்து பிறந்தவரும்; அடுபுலி - கொல்லும் புலியை; பதாகை மன்னர் - தம் கொடியாகக் கொண்ட மன்னர் குலத்தவரும் ஆகிய செங்குந்தர் கையில்; நாணுக்கு ஏருத - வளைத்து நாண் ஏற்ற மாட்டாத; சாபம் - வில்லை; நாட்டியே இறுத்த - வளைத்து ஒடித்த; மாறன் - இராம பிரானின்; மாணுக்கு - பெருமைக்கு; ஏருத - ஒப்பு ஆகாமல் உயர்ந்து விளங்கும்; மாற்ருர் - பகைவர்கள்; அடைந்திட தம்மை அடைந்து பணிய; குந்தம் - குந்தப்படை; மருவும் - பொருந்தி இருக்கும்.

விளக்கம்: பயனில் சொல் பாராட்டல் பண்பாகாது ஆதலின், "வீணுக்கு ஏருத வாய்மை விளம்பிடா வெற்றி" என்ருர். குந்தம் தன்னளவில் பெற்ற சிறப்போடு, தன்னை ஏந்தியவர்கள் பெற்ற சிறப்பையும் கொண்டுளது எனக் கூறியவாறு.

உலகம் புகழும் குந்தர் பெருமை

71. "வட்டமா ரவையுழை வந்த மேலவர்
இட்டபா வாடைகண் டிசைபெ ருதுமண்
முட்டவந் துயிர்பெறீஇ மொய்த்து ளேமெனக்
கட்டுள குந்தர்சீர் கழறி யேத்திஞர்."

உரை: வட்டமார் - வட்டமான; அவை உழை - இவ் அவையின் கண்; வந்த மேலவர் - ஈட்டி எழுபதின் அரங்கேற்றம் காண வந்திருந்த அறிஞர்களும், அரசர்களும் ஆகிய உயர்ந்தோர் அனைவரும்; இட்ட - செங்குந்தத்

தலைவர்கள் இட்ட; பாவாடை கண்டு - சிரச்சிங்காதனத்தையும், இரத்த பாவாடையையும் கண்டு; மண்முட்டவந்து - இவ்வுலகெலாம் நிறைந்து கிடக்குமாறு பெருங்கூட்டமாய் வந்து பிறந்து; இசை பெறாது - புகழ் சிறிதும் பெறாமல்; உயிர் பெறீஇ - உயிரை மட்டும் தாங்கி; மொய்த்துளேம் - ஈ எறும்புகள்போல் மொய்த்து வாழ்கிறோம்; என - என்று தம்மை இகழ்ந்து; கட்டுள - கட்டுப்பாடு நிறைந்த; குந்தர் சீர் - செங்குந்தர்களின் புகழை; கழறி - பலகால் கூறி; ஏத்தினார் - பாராட்டினார்.

விளக்கம் : "தோன்றின் புகழொடு தோன்றுக" என்றார் ஆதலின், புகழ் அற்ற தம் வாழ்வை வெறுத்தனர்; குந்தர் தம் குலத்தவர் ஆயிரத்தெண்மர் தலைகளைத் தந்து புகழ் பெற்றனர்; அவர் புகழ்காண வந்த மேலவர், கூட்டமாய் வாழ்ந்தும், அது செய்ய மாட்டாமையால் புகழ் பெறாராயினர். ஈ எறும்புகள் போல், கூட்டமாய் வாழினும், புகழ் இல்லாத வாழ்வால் பயன் இல்லை ஆதலின், அவ்வாறு வாழும் அவர் வாழ்க்கையை "மொய்த்துளேம்" என, அவ் ஈ எறும்புகளின் வினையால் கூறினார். குந்தர்கள், அன்றும் கட்டுப்பாடோடு வாழ்வதை அறிந்தவர், "கட்டுள குந்தர்" என்ற தொடரின் பெருமை அறிந்து பாராட்டுவர்.

இதுவுமது

72. **"செந்தமிழ்க் காகப் போந்து சிவந்தபா வாடை யாக**
நந்தமக் கிடுங்கா லெந்த நகரமு முளம்வி யந்த;
அந்தரத் தமரர் வாழ்த்தி யணிமலர் மாரி பெய்தார்
இந்தச்செங் குந்தர்பெற்ற விசையெவர்
பெற்றா ரம்ம."

உரை : செந்தமிழ்க்காக - ஈட்டி எழுபது என்ற செந் தமிழ் நூலைப் பெறுவதற்காக ; போந்து - நம்பால் வந்து ; சிவந்த பாவாடை ஆக - இரத்தத்தால் சிவந்த பாவாடை விரிக்க; நந்தமக்கு - நமக்கு; இடுங்கால் - சிரச்சிங்காதனம் இட்டபோது ; எந்த நகரமும் - எந்த நகரத்தில் வாழ் வோரும் ; உளம் வியந்த - வியந்து மகிழ்ந்தனர் ; அந்தரத்து அமரர் - வானுலக வாழ்வினரான அமரர்கள் ; வாழ்த்து - இச்செங்குந்தர்களை வாழ்த்தி ; அணிமலர் மாரி பெய்தார் - அழகிய மலர்களை மழைபோல் தூவினர்; அம்ம - அம்மம்ம! இந்தச் செங்குந்தர் - பெரும் புகழ்வாய்ந்த இந்தச் செங்குந் தர்கள் ; பெற்ற இசை - பெற்றுள்ள புகழ் போலும் புகழை ; எவர் பெற்றூர் - உலகில் வேறு எவர் பெற்றுள்ள னர் ; ஒருவரும் இல்லை.

விளக்கம் : நகரமும் வியந்த என எழுவாயும், பய னிலையும் அஃறிணை வாய்பாட்டால் கூறப்பட்டுள வேனும், நகரத்தாரும் வியந்தனர் என உயர்திணை வாய்பாட்டால் பொருள் கொள்க.

குந்தத்தின் பாராட்டற்கரிய பெருமை

73. "அம்பர்நாட் டமர்ந்த குந்த மயனரி யரன்மூன் [றென்னும்
உம்பர்தா மறிய வேண்டு முயர்ந்தமுத் தமிழி [னாலே
கும்பசம் பவனே தேர்ந்து கூறவே வேண்டுமல்லால்
இம்பர்யாங் கூற வேண்டு மெவர் மற்றுங் கூறு [வாரே ?"

உரை : அம்பர் நாட்டு அமர்ந்த குந்தம் - கைலாயம் என்னும் அந்த உயர்ந்த நாட்டில், நவவீரர் கையில் அமர்ந் திருக்கும் செங்குந்தப் படையின் சிறப்பை ; அயன், அரி, அரன் மூன்று என்னும் - அயன் அரி அரன் என்ற மும் மூர்த்திகளாய ; உம்பர்தாம் - அமரர்களே ; அறிய வேண் டும் - அறிந்து கூறவேண்டும்; கும்பசம்பவனே - கும்பத்தில் தோன்றிய குறுமுனியே ; உயர்ந்த முத்தமிழினாலே - சிறந்த இயல், இசை, நாடகத் தமிழ்களால் ; தேர்ந்துகூற வேண் டும் - ஆராய்ந்து எடுத்துக் கூறவேண்டும் ; அல்லால் - அவர்கள் இல்லையேல் ; இம்பர் - இவ்வுலகில் ; யாம் கூற வேண்டும் - ஒட்டக்கூத்தனாகிய நான் பாராட்ட வேண்டும்; எவர் - யாம் மூவர் தவிர வேறு எவர் ; கூறுவார் - அக் குந்தத்தின் பெருமையைப் பாராட்டவல்லவர் ; பாராட்ட வல்லவர் ஒருவரும் இலர்.

விளக்கம் : செங்குந்தப் படையின் சிறப்பை, அமர ரும், அமரத் தன்மை வாய்ந்த முனிவரும் ; அவ்விருவர் அருள் பெற்ற புலவருமே புகழ்தற்கு உரியராவர் என்பது கருத்து. குந்தத்தின் பெருமை பாராட்டுவார்போல், தம் பெருமையையும் பாராட்டிய பண்பு பாராட்டற்கு உரித்து.

கா. கோவிந்தன்

எழுதிய நூல்கள்

குறிஞ்சிக் குமரி	...	...	3.00
பாலைச் செல்வி	...	...	3.00
மருத நில மங்கை	...	...	3.00
முல்லைக் கொடி	...	...	3.00
நெய்தற் கன்னி	...	...	3.00
தமிழர் வாழ்வு	...	...	2.50
கூத்தன் தமிழ்	...	...	1.50

தேனருவிப் பதிப்பகம்

தியாகராய நகரம், சென்னை-17.

தேனருவி வெளியீடுகள்

சங்கமம் — பொற்றைக் காடு	3-00
காணிக்கை — சியாமா	2-50
அக்காளும் தங்கையும் — கோவை அய்யாமுத்து	1-50
வாழ்க்கை ஒரு போராட்டம் — C. R. ராஜம்மா	2-00
ஏர் பிடித்தவர் ஏற்றம் — கம்பர்	2-00
நல்ல தமிழ் எழுத — 3 Vols. ச. சீனிவாசன்	6-75
அமைதிக்கு அப்பால் — டால்ஸ்டாய்	2-00
வாழும் சிதம்பரம் — அழகுவேலன்	1-50
தேனருவி — பாரதிதாசன்	2-25
கம்பதாசன் கவிதைகள்	2-50
பரிசில் வாழ்க்கை — தமிழண்ணல்	1-50
ஸுபதா — சரத்சந்திரர்	5-00
அநுபவ தையற்கலே — A. சுகுமாரன்	5-00
சிலம்பும் வாழ்வும் — புலியூர்க் கேசிகன்	2-00

தேனருவிப் பதிப்பகம்

தியாகராயநகரம் : சென்னை-17